# அச்சுதம்

## 5ம் ஆண்டு நிறைவு மலரும்

## பரிசளிப்பு விழா மலரும்

## 2004 - 2007




**தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம்**

**திருக்கோணமலை**

**1823 - 2008**

185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுதம்

## 5ம் ஆண்டு நிறைவு மலரும்
## பரிசளிப்பு விழா மலரும்

**தி/பெருந்தெரு விக்நேஸ்வர**
**மகா வித்தியாலயம்**
**திருக்கோணமலை.**

**1823 – 2008**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

திருக்கோணமலையினிலே பல்கலை
ஈந்திடும் விக்நேஸ்வரமே
(திருக்கோணமலையினிலே)

திரு தரும் கல்வியும் திகழ் ஒளி பரப்பிட
மாணவர் மாண்பும் உயர்ந்தே ஓங்கிட
ஒளிதரு நிலையமாம் பெரும்புகழ் ஈட்டிடும்
உருவினில் அமைந்த ஒளி தரும் கூடமாம்
(திருக்கோணமலையினிலே)

சிவப்பு நிறத்தில் செம்மையும் காட்டி
மஞ்சள் நிறத்தில் மங்களம் போற்றி
வெண்மை ஊட்டி தூய்மை கூட்டி
அன்பும் பண்பும் அறிவும் பெருக்கும்
(திருக்கோணமலையினிலே)

நால்வகைச் சமயமும் நயமுடன் கற்று
நற்றமிழ் அறிவையும் சிறப்புடன் பெற்று
நீதிகற்று நேர்மை ஏற்று
சேவையாற்றும் செந்தமிழ்க் கூடமாம்
(திருக்கோணமலையினிலே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Motto
# மகுட வாக்கியம்

**"அன்பும் அறனும் பண்பும் பெறுக"**

# Vision
# நோக்கக்கூற்று

**"நவீன தொழில் நுட்ப உத்திகளுக்கு**

**முகம் கொடுக்கக்கூடிய**

**அறிவும், அறனும், சிறந்த பண்பும்**

**கொண்ட சமூகம்"**

# Mission
# பணிக்கூற்று

**"நவீன கல்வி உத்திகள் மூலம்**

**எதிர்காலத்தின் சவால்களுக்கு ஏற்ப**

**மேம்பாடடைந்த ஓர் சமூகத்தை**

**அர்ப்பணிப்புடன் உருவாக்குதல்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கையின் தலைநகரமாய் விளங்கும் திருக்கோணமலையில் மிகச்சிறப்புடன் கல்விப் பணியாற்றிவரும் தி/ பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் தனது 185 வது அகவையில் வெளியிடும் "அச்சுதம்" எனும் பரிசளிப்பு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

மனிதப் பிறவியின் மேலாந்ததன்மை மனிதரின் நல்லொழுக்கம், நன்நடத்தை, நற்பண்புகள் நிறைந்த நல்வாழ்க்கையின் மூலமே சிறப்பு பெறுகின்றது. இத்தகைய விழுமியங்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் மனித குலத்தில் தோன்றிய ஒவ்வொருவருக்கும் உண்டு.

அழியாச் செல்வமாகிய கல்வி மூலம் மனித இனத்திற்குப் பெறுமதியும், பெறுமானமும், பெருமதிப்பும் சேர்க்கக்கூடிய நற்குண இயல்புகளை, நல்ல மனிதப் பண்புகளை, வாழ்க்கை விழுமியங்களை தற்காலத்தில் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய பாரிய பொறுப்பு கல்விச் சமூகத்திற்கு இன்றியமையாததாகும்.

நவீன கல்விக் கொள்கைக்கு அமைய மாணவர்களின் சிந்தனை வளர்ச்சியினைத் தூண்டி, கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் இவ்வித்தியாலயத்தின் அதிபர். ஆசிரியர்கள், மாணவர்களைப் பாராட்டி, "அச்சுதம்" எனும் மலர் என்றும் சிறப்புற்று விளங்க வேண்டும் என நல்வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

**திரு. ஆர். தியாகலிங்கம்,**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு,**
**கிழக்கு மாகாணம் – திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

இயற்கை எழில் கொஞ்சும் திருக்கோணமலையில் தொன்மைச்சிறப்புடன் விளங்கும் தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா மலரான அச்சுதத்திற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"கல்விக் கூடங்கள் வெறும் அறிவை மட்டும் புகட்டும் நிலையங்களாக மட்டும் அமையாது மாணவர்களது உள்ளங்களை அறிந்து, அவர்களது தேவைகளை உணர்ந்து சேவையாற்ற வேண்டும். " என்ற ஜோன் டூயின் கொள்கைக்கு அமைய பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் இருந்து நாடிவரும் மாணவர்களுக்கு நேசக் கரம் நீட்டி, கல்வி வாய்ப்பினை வழங்கி, அவர்களது தேவையை அறிந்து இப்பாடசாலை சேவையாற்றி வருவதும் என்றும் போற்றுதற்குரிய விடயமாகும். அந்த வகையில் இவ்வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்களை மனதாரப் பாராட்டுகின்றேன்

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய மாணவர்களிடத்தில் உள்ளார்ந்த நிலையில் அடங்கிக்கிடக்கும் ஆற்றல்களைத் தட்டி எழுப்பி, செயற்றிறன்கள் மிக்கதாக மலரச் செய்து சிறந்த மாணவச் செல்வங்களை சமூகத்திற்கு வாரி வழங்கும் இவர்களது பணி கல்வித்துறையில் உன்னத நிலையை அடையவும் "அச்சுதம்" மலர் புகழ் பூத்து விளங்கவும் வாழ்த்துக்களை அள்ளி வழங்குகின்றேன்.

**திரு. சி. தண்டாயுதபாணி,**
**மாகாணக்கல்விப் பணிப்பாளர்,**
**மாகாணக்கல்வித் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்,திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

திருக்கோணமலை நகரின் சிறந்த விழுமியங்களைப் பேணிப்பாதுகாத்து வரும் கல்விக்கூடமான தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தின் "அச்சுதம்" என்ற பரிசளிப்பு விழாமலருக்கு வாழ்த்துரையினை உவகையுடன் உவந்தளிக்கின்றேன்.

நீண்டகால வரலாற்றில் தனக்கென தனியிடத்தினை வகித்து வரும் இவ்வித்தியாலயம் எப்பணியினைப் பொறுப்பேற்றாலும் சளைக்காது, எதிர்கொள்ளும் மன உறுதியையும் ஆற்றலையும் கொண்டு தன்னுடைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் பெருமையுடன் விளங்குகின்றது. இதற்கு உறுதுணையாகும் இக்கல்விக்கூடத்தின் ஆளணியினரை உளமாரப் பாராட்டுவதில் முதற்கண் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அடிப்படை உரிமையாகவும், வாழ்க்கை வாய்ப்புக்களை வழங்கும் ஒரு வலிமையான வழியாகவும், கல்வி அமைவதோடு இன்றைய பொருளாதார அபிவிருத்திக்கான முதலீடாகவும், மானிட மேம்பாட்டின் திறவுகோலாகவும் கருதப்படுகின்றது.

இந்த வகையில் காலத்தின் தேவையை அறிந்து காத்திரமான படைப்புக்களை முன்வைக்க களமமைத்து, கரிசனையுடன் வளர்ந்து செல்லும் "அச்சுதம்" மலர் சிறப்புறவும் இவர்களது மகத்தான சேவைகள் மென்மேலும் வளரவும், மெருகுறவும் வாழ்த்துகளை வாரி வழங்குகின்றேன்.

**திரு. கு. திலகரெட்ணம்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்.**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசியுரை

பூத்திருக்கும் இப்புதுவருட காலத்தில் எமது வித்தியாலயத்தின் 185வது ஆண்டின் பயணத்திலே இவ் "அச்சுதம்" பரிசளிப்பு விழா மலரானது வெளியிடப்படுவதையிட்டு நான் உளம் மகிழ்கின்றேன்.

"காலந்தோறும் ஆக்கசக்தியாகவும், ஆற்றலாகவும், காப்பாகவும், வாழ்வு நெறியாகவும் இருந்து வருவதும், பன்னெடுங்காலமாக வளர்ந்து வரும் சிந்தனைகளையும் பயன்பாடுகளையும் தேக்கி வைக்க இருப்பிடமாக இருப்பதும் கல்வியே ஆகும். இத்தகைய கல்வி மாணவர்களை சென்றடைந்து அவர்களை "சீரும் சிறப்போடும்" சமுதாயத்தில் வாழ வழிகாட்ட வேண்டும் என்பதே எனது பேரவா ஆகும்.

இவ்வேளையில் மாதந்தோறும் மலரும் அச்சுதச் சஞ்சிகையானது மாணவர்களின் ஆக்கத்திறனுக்கு வித்திட்டு அவர்களிடையே தேடலையும், கிரகித்தலையும், பதிப்பித்தலையும், ஊக்குவித்து இன்று 5வது ஆண்டின் நிறைவினை நோக்கி செல்கையில் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு மேலும் இடையறாது தொடர இறை ஆசியை வேண்டுகின்றேன்.

நவீன கல்வி வளர்ச்சியின் காத்திரத்திற்கேற்ப களம் அமைத்து சிறந்த பல ஆக்கங்களை தாங்கிய இம்மலர் வெளியீட்டுக்கு அயராது உழைத்திட்ட உள்ளங்கள் அனைவருக்கும் நன்றி கூறி என்றும் இம்மலர் மலர்ந்து மணம் வீச உளமார வாழ்த்துகின்றேன்.

**திரு. நா. இராஜநாதன்**
**(அதிபர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோணமலையின் கண், தொன்மையும், பெருமையும் மிக்க தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகாவித்தியாலயத்தில் பரிசளிப்பு விழாமலர் 'அச்சுதம்' மலர்ந்து மணம் பரப்புவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது வித்தியாலயமானது 185வது ஆண்டு வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்திருக்கும் இவ்வேளையில் கடந்த காலங்களில் கல்வித்துறையில் மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பல்வேறு சாதனைகளைப் படைத்து வந்ததை மீட்டிப் பார்ப்பதில் உள்ளம் புளகாங்கிதம் அடைகின்றது. மாணவர்களின் சிந்தனைச் சக்தியைத் தூண்டி அதன் வெளிப்பாடான ஆக்கங்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டு இவ் "அச்சுதம்" மலர் வெளியீடு இடம்பெறுவது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும்.

பல்துறை சார்ந்த ஆக்கங்களின் உருவாக்கத்திற்கு களம் அமைத்துள்ள இப்பரிசளிப்பு விழாமலருக்கு எனது மனம்நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இவ் அரிய முயற்சிக்கு கூட்டாக ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியர்களையும் மாணவச் செல்வங்களையும் மனதாரப் பாராட்டி என் இதயம் கனிந்த இனிய நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. ந. குணசேகரம்
பிரதி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்தில் இருந்து

"சீரும் திருவும் பொலியும் கோணநாதனின் திருமலை நகரத்தின் மத்தியில் கம்பீரத்துடன் விளங்கும் தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் 185வது ஆண்டிலே மாணவர்களின் ஆக்கங்களுக்கு களம் அமைத்து மாதம் மலரும் "அச்சுதம்" சஞ்சிகையின் 5ம் ஆண்டு நிறைவினையும் பரிசளிப்பு விழாவையும் முன்னிட்டு இச்சிறப்பு மலர் வெளியிடப்படுகின்றது.

எழுத்தாக்கச் சிந்தனைக்கு வித்திட்ட சஞ்சிகையான "அச்சுதம்" என்பது அறுகும் அரிசியும் கூடிய கலவையாகும். இவை அழிவற்றவை, உயிரினங்களை வாழவைப்பவை, வாழ்த்துக் கூறுபவை. அந்தவகையில் மாணவர்களின் ஆக்கங்களுக்கு உறுதுணைபுரிந்து 27.03.2003 ஆரம்பிக்கப்பட்டு இன்று "ஆல போல்தளைத்து அறுகுபோல் வேரூன்றி நூல்வடிவு பெற்று பெருமை பெறுகிறது.

"நூல் அறிவை ஒளியுடையதாக்கி அதனை அகலமுறச்செய்து, அவ்வகன்ற ஒளி விளக்கத்தின் கண்ணே முன்னர் காணப்படாததும் உலப்பிலா இன்பந்தருவதுமான நுண்பொருள் கண்டு இன்புறச் செய்வதுமாயிருக்க வேண்டும்" என்ற பண்டிதமணி கதிரேசன் செட்டியாரின் கருத்துக்கமைய தேடற்கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி பல்வேறு ஆக்கங்களை தாங்கி இம்மலர் மலர்ந்துள்ளது.

இவ்வரிய முயற்சிக்கு பக்கபலமாக இருந்து உழைத்திட்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இதழாசிரியர்**

**திருமதி. வ. வசிகரன்**

**"ஆற்றுந் துணையும் அறிவினை உள்ளடக்கி**
**ஊக்கம் உரையார் உணர்வுடையார் – ஊக்கம்**
**உறுப்பினால் ஆராயும் ஒண்மையுடையார்**
**குறிப்பின் கீழ்ப் பட்டதுலகு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

## தலைவர்

திரு. நா. இராஜநாதன்

(வித்தியாலய அதிபர்)

## உபதலைவர்

திருமதி. ந. குணசேகரம்

(பிரதி அதிபர்)

## இதழாசிரியர்

திருமதி. வ. வசிகரன்

## உறுதுணையாளர்கள்

திரு.நே. சிவநேசன்

திருமதி. சு. ரமேந்திரா

திருமதி. பா.ஶ்ரீகணேசலிங்கம்

திருமதி. சு. கெங்கேஸ்வரன்

திருமதி. சி. ருத்திரகாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அதிபர்




திரு.நா.இராஜநாதன் (SLPS 2 - I)

## உப அதிபர்




திருமதி. ந.குணசேகரம்

## பகுதித் தலைவர்



திருமதி. ச.இராஜதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 185வது அகவையில்

## தி/பெருந்தெரு விக்னேஸ்வர மகா வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா தொடர்பான

# அதிபர் அறிக்கை

நால்வகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய வளங்களைப் பெற்று எழில் கொஞ்சும் வரலாற்றுப் புகழ் பெற்ற திருத்தலத்திலேயே கோணேசப் பெருமான் மாதுமையம்மாளுடன் வீற்றிருந்து அருட்சிறப்பு நல்கவும் "நிரைகடல்" அரவம் நித்திலம் கொழிக்கும் கிழக்கிழங்கையின் தலைநகரமாம் திருக்கோணமலையில் பிரதான வீதியில் மிக அழகுற அமைந்து கம்பீரத்துடன் விளங்குவது தி/பெருந்தெரு விக்னேஸ்வர மகா வித்தியாலயம் ஆகும்.

இயற்கை அழகு கொட்டி கிடக்கும் திருக்கோணமலையில் சிறப்புற கல்விப்பணியை ஆற்றிவரும் பாடசாலைகளுக்கிடையில் 185 ஆண்டுகளை நோக்கி வீறுநடை போடும் தொன்மைச் சிறப்புமிகு கலைக்கூடமாக எமது பாடசாலை அமைந்துள்ளது. பெயருக்கு ஏற்றாற் போல் வித்தியாலயத்தின் வாசலிலே விநாயகப் பெருமான் வீற்றிருந்து அருள் பாலிக்க அதற்கு துணையாக அன்னை சரஸ்வதியும் தன் அருட் கடாட்சத்தை வழங்குகின்றார்.

மனித வாழ்விற்கு இன்றியமையாத "அன்பும் அறனும் பண்பும் பெறு" என்ற மகுட வாசகத்தையும் (Motto) கல்விச்சிறப்பினையும் எமது பாடசாலைச் சின்னம் உணர்த்தி நிற்கின்றது. "நவீன கல்வி உத்திகள் மூலம் எதிர்காலத்தின் சவால்களுக்கு ஏற்ப மேம்பாடடைந்த ஓர் சமூகத்தை அர்ப்பணிப்புடன் உருவாக்குதல்" என்ற பணிக் கூற்றினையும் (Mission) "நவீன தொழில்நுட்ப உலகிற்கு முகம் கொடுக்கக் கூடிய அறிவும், அறனும் சிறந்த பண்பும் கொண்ட சமூகம்" என்ற நோக்கக் கூற்றினையும் (Vision) கொண்டு எமது பாடசாலை தனது பணியினை சிரத்தையுடன் அயராது ஆற்றி வருகின்றது.

இவ்வினிய பொழுதினிலே "அச்சுதம்" சஞ்சிகையின் 5 ஆண்டுகளுக்கான நிறைவினையும் 2004 – 2007வரை 4 ஆண்டுகளுக்கான பரிசளிப்பு விழாவினையும், கட்டிட திறப்பு விழாவினையும் இணைத்து பெருவிழாக கொண்டாடுவதையிட்டு நாம் அளப்பிலா ஆனந்தம் அடைகின்றோம்.

இன்பம் பொங்கும் இவ்வேளையில் இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளர் அவர்களே! நிக்கோட் திட்ட பணிப்பாளர் அவர்களே! மாகாணக்கல்விப் பணிப்பாளர் அவர்களே! வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களே! முன்னாள் உப அதிபர் அவர்களே! உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் அவர்களே! ஆசிரிய ஆலோசகர்களே! Jica செயற்றிட்ட அதிகாரிகளே! பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களே! பழைய மாணவர்களே! பெற்றோர்களே! ஆசிரியர்களே! ஊழியர்களே! பெரியோர்களே நலன்விரும்பிகளே! என் அன்பு மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவரையும் வருக, வருக என வரவேற்பதில் உளப்பூரிப்படைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நன்நாளில் எமது பாடசாலையின் தோற்றம் அதன் வளர்ச்சிப்போக்கு இன்றைய நிலைபற்றி உங்கள் முன் எடுத்துரைக்க கடமைப்பட்டுள்ளேன். இன்று பொலிவுடன் விளங்கும் தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் மெதடிஸ்த திருச்சபையால் "ஜோசப் பொட்" அவர்கள் காலத்தில் 1823ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பெருந்தெரு மெதடிஸ்தமிஷன் பாடசாலை என அழைக்கப்பட்டு வந்தது. காலப்போக்கில் பெருமளவில் இந்து மாணவர்களை கொண்டதாக காணப்பட்டதன் பயனாக அரசின் அங்கீகாரத்துடன் தி/பெருந்தெரு விக்நேஸ்வர வித்தியாலயம் என்னும் பெயருடன் ஒரு இந்துப் பாடசாலையாக மாற்றப்பட்டது. இருந்தபோதும் ஏனைய சமயத்து மாணவர்களும் எவ்வித வேறுபாடுமின்றி கல்வியைத் தொடர வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதிகரித்த மாணவர் தொகை, அதன் வளர்ச்சிப்போக்கு என்பவற்றின் அடிப்படையில் 8.5.1979 மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டு 21.07.1981 தொடக்கம் உயர்தர வகுப்புக்களுடன் 700 மாணவர்களையும் 35 நிரந்தர ஆசிரியர்களையும் 4 இணைப்பு ஆசிரியர்களையும் 6 ஊழியர்களையும் கொண்டு அயராது செயலாற்றி வருகின்றது.

இவ்வேளையில் எமது வித்தியாலயத்தின் நீண்ட கால வரலாற்றில் அதன் வளர்ச்சிக்கு தூண்களாக, உறுதுணையாக விளங்கிய அதிபர்கள் முதற்கண் நினைவு கூரப்பட வேண்டிய வர்களாவார்கள். அவர்கள் என்றும் எங்கள் நன்றிக்குரியவர்கள். அந்த வகையில் எமக்கு கிடைத்த சான்றுகளில் இருந்து.

| | | | |
|---|---|---|---|
| | திரு. ம. முருகுப்பிள்ளை | | |
| | திரு. சின்னையா உபாத்தியாயர் | | |
| | பண்டிதர் சபாவதி | | |
| ஆசியமணி | திரு.ம.க. சிதம்பரபிள்ளை | (1931 – 1951) – | (1959 – 1962) |
| | திரு.எஸ். கே.செல்வநயினார் | 1951 – 1959 | |
| | திரு.எஸ். கனகசபை | 02-05-62 | – 10-08-69 |
| | திரு.எஸ். மார்க்கண்டு | 10-08-69 | – 31-07-70 |
| | திரு.சி. நடராஜா | 01-08-70 | – 20-08-78 |
| | திரு. க. ஜீவரெட்ணம் | 20-08-78 | – 03-03-80 |
| | திரு. எஸ்.பாலசுப்பிரமணியம் | 03-03-80 | – 21-05-89 |
| | திரு. என். திருச்செல்வம் | 22-05-89 | – 31-10-90 |
| | திரு. எஸ். சந்திரகாந்தன் | 01-11-90 | – 31-12-91 |
| | திரு.கு. கோணாமலை | 01-01-92 | – 31-10-96 |

இத்தோடு அன்று தொட்டு இப்பாடசாலையில் வளர்ச்சிக்காய் அரும்பாடுபட்டு கடமையாற்றி ஓய்வுபெற்றும், இடமாற்றம் பெற்றும் சென்றுள்ள உப அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

மேலும் எமது பாடசாலையின் பௌதீக வளங்களைப் பொறுத்தவரை தற்பொழுது ஓரளவு வளங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. கடந்த காலங்களில் இப்புதிய கட்டிடத்தின் தேவையை வேண்டிநின்றது. இப்பொழுது புதிய கட்டட அமைவின் மூலம் ஒருபகுதி பூர்த்தியாக்கப் பட்டுள்ளது. இவ் அளப்பரிய கைங்கரியத்தை குறுகிய காலத்தில் நிறைவேற்றி "அழியாச் செல்வம் கல்விக்கு" வித்திட்ட "நிக்கோட்" திட்ட அதிகாரிகளுக்கு நாம் இதயம் நிறைந்த நன்றிகளை கூறிக் கொள்கின்றோம். மேலும் இக்கூடத்தின் மேடை அலங்கரிப்புக்கு உதவி புரிந்தவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பொழுது புதிய கல்வி சீர்திருத்தத்திற்கு அமைய கல்விச் செயற்பாடுகள் யாவும் முன்னெடுத்து செல்லப்படுகின்றது. இதற்கமைய நவீன வசதிகளுடன் கூடிய ஆய்வு கூடத்தின் மூலம் மாணவர்கள் குழுச் செயற்பாடு முறையிலான கல்வியை பெற்று வருகின்றார்கள். திருக்கோணமலை வலய மட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற "வினைத்திறனான விஞ்ஞான ஆய்வுகூடப் பயன்பாட்டுப் போட்டியில் 1ம் இடத்தை எமது பாடசாலை பெற்றுள்ளது. அத்துடன் கிழக்கு மாகாணப் பாடசாலைக்கிடையில் இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட போட்டியிலும் எமது மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

'கண்டது கற்கபண்டிதன் ஆவான்" என்ற கூற்றுக்கிணங்க மாணவர்களின் வாசிப்புத்திறனை அதிகரிக்கும் நோக்கில் நூலகப் பயன்பாடு அமைவதோடு மாணவர்களின் தேடற் கல்விக்கும் ஆக்க சிந்தனைக்கும் வழி சமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியான செயற்பாடாக வித்தியாலயத்தில் மாதந்தோறும் "அச்சுதம்" சஞ்சிகை மாணவர்களின் ஆக்கங்களை தாங்கி வெளிவருகின்றது.

"நவீன தொழில்நுட்ப கல்விச் சாதனங்கள் மூலம் நாமும் கல்வியைப் பெற்றுக் கொள்வோம்" எனக்கூறும் புதிய சிந்தனைக்கு அமைய கணிணிக் கல்வியினை எமது வித்தியாலய மாணவர்களும் பெற்றுப் பயனடைந்து வருகின்றார்கள். இத்தோடு எமது மாணவர்களின் கல்வி மட்ட அடைவும் உயர்ந்து வருவதையும் நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது.

கடந்த காலங்களில் க.பொ.த. சாதரணம் (G.C.E O/L) க.பொ.த உயர்தரப் பரீட்சை (G.C.E A/L) முடிவுகள், பல்கலைக்கழக அனுமதிகள் இவற்றை பறைசாற்றி நிற்கின்றன.

2004 ஆண்டில்

| | | | |
|---|---|---|---|
| செல்வன். | தே. அன்ரனிகியூபேட் | A, 2B | வர்த்தகப்பிரிவு |
| செல்வன். | அ. ரூபகாந்தன் | 2A,B | வர்த்தகப்பிரிவு |
| செல்வன். | த. தேவநேசன் | 2A,B | வர்த்தகப்பிரிவு |
| செல்வி. | ச. அனுஜா | A, 2B | வர்த்தகப்பிரிவு |
| செல்வி. | இ. ரஜீத்தா | A.B.C | கலைப்பிரிவு |

2006ம் ஆண்டில்

| | | | |
|---|---|---|---|
| செல்வன். | அ. அலிபஸ்ரி | A,2B | வர்த்தகப்பிரிவு |
| செல்வன். | சு. பிரதீபன் | 2A, B | வர்த்தகப்பிரிவு |

2007ம் ஆண்டில்

| | | | |
|---|---|---|---|
| செல்வன். | இ. ஶ்ரீதரன் | A,B,C | வர்த்தகப்பிரிவு |
| செல்வன். | தெ. சிராச் | A, 2C | வர்த்தகப்பிரிவு |
| செல்வி. | சி. மானல் | 3B | கலைப்பிரிவு |

வித்தியாலயத்திற்கு வளம் சேர்த்து பெருமையீட்டி தந்த இவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். தற்பொழுது இவர்களில் 2004ம், 2006ம் ஆண்டு மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்று வருகின்றனர். 2007ம் ஆண்டு மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்று செல்ல உள்ளனர் என்பதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவை மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் எமது மாணவர்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதையும் தமிழ்மொழித்தினப்போட்டி, ஆங்கில மொழித்தினப் போட்டி, இல்ல விளையாட்டுப் போட்டி, சித்திரப் போட்டி, சைவசமயப் போட்டி, நாடகப்போட்டி யாவற்றிலும் பங்கு பற்றி வெற்றிக்கேடயங்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர். இன்ரக் கழகச் செயற்பாடுகள், சமயமன்றம், மாணவமன்றம், விஞ்ஞான, கணிதமன்ற செயற்பாடுகள் யாவும் மாணவர்களின் சிந்தனைச் செயற்பாட்டை விரிவுபடுத்தி செல்கின்றன.

மேலும் எமது பாடசாலையின் ஒழுங்காற்று குழு மாணவர்களிடையே தலைமைத்துவப் பதவி வழங்கி ஒழுங்கமைப்பை பேணிவருவதுடன் சாரண இயக்கம், குருளைச்சாரண இயக்கம், பெண்கள் சாரணிய அமைப்பு, யாவும் மாணவர்கள் சமுதாயத்தில் நற்பிரஜைகளாக வாழ வழி சமைக்கின்றன. இத்தோடு எமது வித்தியாலயத்தின் வளர்ச்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவ சங்கம், நலன் விரும்பிகள் அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்கி கல்விப்பணிக்கு துணை நிற்கின்றனர்.

அண்மைக்கால செயற்றிட்டங்களில் மிகச் சிறப்பான ஜப்பானிய கல்வி சீரமைப்பின் செயற்றிட்டம் (Jica) எமக்கு கிடைத்தது வரப்பிரசாதம் ஆகும். அந்த வகையில் எமது பாடசாலை தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளில் முதன்மை நிலையில் இருந்து செயற்பட்டு வருகின்றது. 2006ம் ஆண்டில் இச்செயற்றிட்டம் எமது பாடசாலைக்கு அறிமுகம் செய்யப்பட்டு ஜப்பானிய நிதியுதவியுடன் செயற்பாடுகள் யாவும் வகுப்பட்டு முன்னெடுத்து செல்லப்படுகின்றன.

மேலும் எமது வித்தியாலயத்தில் 5 ஆண்டுதிட்டம், இடைநிலை கல்வி நவீனமய செயற்றிட்டம் (2-SEMP) ESDFP திட்டம், 2008 இல் மாதிரிப் பாடசாலை திட்டம் என்பன நடைமுறைப் படுத்தப்பட்டு சீரான கல்வி செயற்பாட்டிற்கு உரமூட்டப்படுகின்றன. இத்தோடு "ஆண்களுக்கான விசேட கல்விப் பிரிவு இல்லாத குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு எமது பாடசாலையில் 30.05.2007 அன்று தொடக்கம் விசேட கல்விப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாடுகளின் மூலம் மாணவர்களின் நலன்கள் பேணப்பட்டு வருகின்றன.

இத்தோடு எமது பாடசாலையின் வளர்ச்சிக்காய் தனது தந்தையின் நினைவால் "ஒரு பிடி மண்" என்ற நூலை வெளியிட்டு எமக்கு நிதி உதவி வழங்கிய திரு. கனகசபை தேவகடாட்சம் அவர்களுக்கும் நாம் நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு எமது பாடசாலையில் "பச்சை இல்லம்: அமைப்பதற்கு நிதி உதவி வழங்கிய "ஒபர்" நிறுவன அதிகாரிகளுக்கும் நன்றியினை கூறிக்கொள்கின்றோம். 185வது அகவையில் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு பலவழிகளிலும் உழைத்திட்ட ஒத்துழைப்புக்களை வழங்கிய அனைவருக்கும் இத்தருணத்திலே நன்றியினை கூறிக்கொள்கின்றேன்.

மேலும் இருக்கின்ற வளங்களைப் பெரும் பயன் நல்கும் வகையில் பயன்படுத்தி கல்வி அபிவிருத்தியில் பெரும் சாதனையை நிலைநாட்ட உங்கள் அனைவரது ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் நாடி இன்று அனைத்து துறைகளிலும் சாதனைகளை நிலை நாட்டி பரிசு பெறும் மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக் கூறி உங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன்.

**நன்றி**

வணக்கம்

**"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்**
**தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்**
**எம்மை யுலகத்தும் யாங்காணோம் கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our former Principals



**Mr.M.K. SITHAMPARAPILLAI**
**PERIOD OF SERVICE**
**(1931 - 1951) - (1959 -1962)**



**Mr. S. K. SELVANAINAR**
**PERIOD OF SERVICE**
**1951 - 1959**



**Mr. S. KANAKASABAI**
**PERIOD OF SERVICE**
**02.05.1962 - 10.08.1969**



**Mr. S. MARKANDU**
**PERIOD OF SERVICE**
**10.08.1969 - 31.07.1970**



**Mr. S. NADARAJAH**
**PERIOD OF SERVICE**
**01.08.1970 - 20.08.1978**



**Mr. K. JEEVARATNAM**
**PERIOD OF SERVICE**
**20.08.1978 - 03.03.1980**



**Mr. S. BALASUBRAMANIUM**
**PERIOD OF SERVICE**
**03.03.1980 - 21.05.1989**



**Mr. S. THIRUCHELVAM**
**PERIOD OF SERVICE**
**22.05.1989 - 31.10.1990**



**Mr. N. CHANDRAKANTHAN**
**PERIOD OF SERVICE**
**01.11.1990 - 31.12.1991**



**Mr. K. KONAMALAI**
**PERIOD OF SERVICE**
**01.01.1992 - 31.10.1996**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலய ஆசிரிய அணியினர்



இருப்பவர்கள் (இ - வ )
திருமதி.ம.அன்ரனிராஜ், திருமதி. அ.குமரகுரு, திருமதி.க.ஜெகசோதி, திருமதி.ந.குணசேகரம், (பிரதி அதிபர்). திரு.நா.இராஜநாதன் (அதிபர்), திருமதி.ச.இராஜதுரை, திருமதி.சு.ரமேந்திரா, திருமதி.வ.வசீகரன், திருமதி.பா.வி.ஆனந்தராஜா, திருமதி.பா.கணேசலிங்கம், செல்வி.ந.சுபத்திராதேவி,

நிற்பவர்கள் (இ - வ)
திருமதி.இ.இராஜேஸ்வரன், திருமதி.வ.இராஜேந்திரன், திருமதி.நே.சசிக்குமார், திருமதி.ச.தேவதாஸ், திருமதி.க.புஸ்பநாதன், திருமதி.சு.கங்கேஸ்வரன், திருமதி.ஜெ.சுவேந்திரன், திருமதி.ஜெ.உதயசீலன், திருமதி.ச.வரதராஜன், திருமதி.கி.பாலேந்திரராஜா, திருமதி.பா.ஜவ்பர், திருமதி.ஜெ.சிவசோதி, திருமதி.தே.சுகிர்தராஜன், திருமதி.க.விமலேந்திரன்,

திரு.செ.சிவபாதசுந்தரம், திருமதி.உ.ஸ்ரீதரன், திருமதி.சி.ருத்திரகாந்தன், திரு.நே.சிவநேசன், திரு.வ.தெய்வேந்திரராஜா, செல்வி.சி.கௌதமி, திருமதி.ச.சிவஞானசுந்தரம், திருமதி.வா. சுரேஸ்குமார், திருமதி.சா.பார்த்தீபன், திரு.ந.இலங்கேஸ்வரன், திரு.சி.சுந்தரவடிவேல், திரு.சி.ஜனார்த்தனன், திரு.அ.ஹரிகரன், திரு.வே.தவராஜா,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான ஆசிரியத்துவத்தில் கற்றல் கொள்கைகள் பற்றிய ஆசிரியரது விழிப்புணர்வின் வகிபங்கு

அறிவைத் தேடுவதற்காகப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகின்றமையானது அப்பிள்ளைகள் பிரவேசிக்கும் உலகு வனப்பு மிக்கதாக அமைய வேண்டுமென்ற சிந்தனையிலாகும். இப்பணியிலே பங்குகொள்கின்ற வலிமை மிக்க பணியினராக ஆசிரியர்கள் கருதப்படுகின்றனர். அதுமட்டுமல்லாது அவர்களது சேவை மனப்பாங்கும் உன்னத இடத்தைப் பிடிக்கின்றதெனலாம்.

ஒரு நல்லாசிரியரது நடத்தை, ஒழுகலாறு, அறிவு, ஆற்றுகை என்பன செவ்வனே அமைவதற்கு வழிப்படுத்துகின்ற கல்வி உளவியல், கல்வி தத்துவமானது அவரைப் பின்தொடர்ந்து ஒரு சக்தியாக செயற்படுத்துவதன் மூலமே தேர்ச்சி பொருந்திய ஒருவராக அவரை மாற்றக் கூடிய ஒப்பற்ற சக்தியாக அது விளங்குமெனலாம்.

கல்வியாளர் ஜோன் ரூயி கூறும் போது "ஜோனுக்கு கல்வி கற்பிப்பதற்கு முன்னர் ஜோனைப்பற்றி தெரிந்திருத்தல் வேண்டும்" என்ற கூற்று ஆசிரியரானவர் பிள்ளை பற்றிய விளக்கத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்பதும், ஜீன் பியாஜே கூறுவதுபோல "பிள்ளை குறிப்பிட்ட வயதில் பல்வேறுபட்ட மனப் பாங்குகளை கொண்டிருப்பான்" என்பதும் பிள்ளையின் உள்ளத்தைப் பற்றிய விளக்கத்தை ஆசிரியர் தெரிந்திருத்தல் வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுகின்றன.

ஆசிரியரானவர் பிள்ளையை இனங்காணக் கூடியவராக இருத்தல்வேண்டும். வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையினதும் உளம், உடல், பாட அடைவு குடும்பப் பின்னணி என்ற ரீதியில் நோக்கி அதற்கேற்ப அணுகுமுறைகளை பின்பற்றுபவராக சமூக விருத்தியின் பால் அக்கறையுடையவராதல் வேண்டும்.

கற்றல் என்பது நடத்தையில் ஏற்படும் மாற்றம் என்ற ரீதியில் பார்க்கும்போது நடத்தை வாதம் பற்றிக் கூறுகின்ற உளவியலை நன்கு தெரிந்துகொள்ளாமல் நடத்தையிலே எதிர்பார்க்கப் படுகின்ற மாற்றங்களை யேற்படுத்துவது சிரமமான காரியமாகும். எனவே கற்றல் பற்றிய உளவியற் கருத்துக்களைத் தெரிந்துகொண்டு கருமமாற்ற வேண்டிய கட்டாயம் ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்றது.

கற்றல் அனுபவத்தினூடாக அறிவைப் பெறல், ஓர் உயிரியல் உறுதியாக நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய நடத்தைமாற்றம் எனவும் கூறப்படுகின்றது. இன்று மாணவர் மையக் கல்வியானது தேர்ச்சிகள் பொருந்திய கல்வியாக உருமாற்றம் பெற்று வருகின்ற தென்பதுயும் பாடசாலையின் செயற்பாடுகளை ஒழுங்கமைப் பதில் கற்றற்கொள்கைகள் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன என்பதும் உண்மையான வையாகும். கல்வி உளவியலிலே கற்றலை விளக்கும் பல கொள்கைகள் கல்வி உளவியலா ளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றை யெல்லாம் இரு பெரும் பிரிவாக நோக்க முடியும். தூண்டல் துலங்கல் கொள்கைகள். அறிகைக் கொள்கை என்பனவாகும்

தூண்டல் துலங்கற் கொள்கையினை முன்வைத்தவர்களாக பவ்லோவ் (PAVLOV), குத்ரி, தோண்டைக்றல், ஸ்கின்னர் ஆகியோரையும், கள அறிகைக் கொள்கையினராக கேட் லூவின் ரோல்மன், கெஸ்டால்ட் வாதிகள் (GESTALT) நோக்கப்படுகின்றனர்.

இவ்விரு கொள்கையைச் சார்ந்தவர்களும் அளிக்கும் அனுமானங்களாக ஓர் உயிரியின் நடத்தையில் காணப்படும் சிறு சிறு துலங்கல்கள் ஒன்றுசேர்ந்து நடத்தை மாற்றம் ஏற்படுகின்றதென தூண்டி துலங்கற் கொள்கையினரும் ஞாபகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்பு போன்ற உளத்தொழிற்பாடுகளினூடே இந்நடத்தை மாற்றங்கள் உருவாகின்றன என அறிகைக் கொள்கையினரும் கருத்துக் கூறுவர்.

இங்கு கூறப்பட்ட இரு பெரும் பிரிவுகளையும் ஆராய்ந்து அவை கற்றலின்போது வகுப்பறைப் பிரயோகத்தில் எத்தகைய விதத்தில் உதவுகின்றன என்பதை அறிந்துகொள்ளல் ஆசிரியரது வகிபாகத்தில் எந்தளவு தாக்கம் செலுத்துகின்றதென்பதை கீழ்வரும் அனுபவங்களினூடாக உணர்ந்துகொள்ள முடியும்.

பவ்லோவ் (PAVLOV) இனது தூண்டி துலங்கல் கொள்கையில், உடற்றொழிலியல் நிபுணரான இவர் ஒரு பரிசோதனையை பின்வருமாறு மேற்கொண்டார். ஒரு நாயின் கன்னவுமிழ்நீர்ச் சுரப்பியுடன் ஒரு குழாயினைப் பொருத்தி சுரக்கப்படுகின்ற உமிழ்நீரை அளவிடுவதாகும். கண்ணாடி யன்னலினூடாக உணவை அவதானிக்கச் செய்தார். அறையினுள் தானாக இயங்கும் கருவியினூடாக உணவைப் பெற ஏற்பாடு செய்தார். உணவு பெறப்படும் ஒவ்வொரு தடவையும் அறையினுள் உள்ள மணியொன்றை ஒலிக்க ஏற்பாடு செய்தார். ஒலியும், உணவும் இணைந்து வழங்கப்பட்ட பின்னர் பல்வேறு படிமுறைகளைத் தொடர்ந்து தனித்து மணி ஒலி கேட்டவுடனே உமிழ்நீர் சுரக்க ஆரம்பித்தது. உமிழ்நீர் சுரத்தலை ஏற்படுத்த முடியாத நிலையிலிருந்த இத்தூண்டியான ஒலி உமிழ்நீர் சுரக்கச் செய்யும் ஆற்றலைப் பெற்று விட்டது இதுவே நிபந்தனைப்படுத்தலாகின்றது.

இத்தகைய அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறைச் செயற்பாடுகளிலே நிபந்தனைப்படுத்தலானது மீள்வலியுறுத்தலின் அவசியத்தையே வலியுறுத்துவதாக அமைகின்றது. கற்றல் – கற்பித்தல் நடவடிக்கையின் போது மாணவர்களின் செயல்களுக்கு பாராட்டுக்கள், புகழ்ச்சிகள், பரிசில்கள் வழங்கல் என்பன உரிய களத்திலே, உரிய காலத்திலே இடம்பெறுகின்றன என்பதை இவ்வனுபவம் சுட்டிக்காட்டுகின்றது.

மேலும் "கெஸ்டாலற்" கற்றல் கொள்கையானது சகல நடத்தைகளும் ஐம்புலன்களினூடாக மூளைக்குக் கடத்தப்பட்டு அங்கு ஒழுங்கமைக்கப்பட்ட பதிவையேற்படுத்தி உள்ளதில் அகக்காட்சியை உருவாக்கிக் கற்றல் இடம்பெற வழியேற்படுத்துகின்றது எனலாம்.

அகக்காட்சி ஏற்படுத்தல் என்பது ஒருவனின் கற்குந்திறனிலே தங்கியுள்ளது. அதாவது ஒரு பிரச்சினையை, விடயத்தை ஏற்கக்கூடிய மன நிலையில் பிள்ளை இருக்கின்றான? என்பது மிக முக்கியமானது. வகுப்பறைக் கற்றல் – கற்பித்தலில், மாணவனின் வயது, நுண்ணறிவு, ஏற்கும் சக்தி, முன் – அனுபவம் போன்றவற்றையறிந்து பொருத்தமான கற்றல் பணிகளில் அவனை ஈடுபடச் செய்ய வேண்டும்.

இவ்வாறான வகுப்பறை கற்றல் – கற்பித்தலிலே பல்தரப்பட்ட நடிபங்குகளான கற்றலை இலகுபடுத்துபவர், விரிவுபடுத்துபவர், வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பவர், கற்றலுக்குரிய சூழலை ஏற்படுத்துபவர், கற்றலுக்கான ஆயத்த நிலையை ஏற்படுத்துபவர், கற்றல் நிகழ்வுகளை கண்காணிப்பவர், கணிப்பிடுபவர், இனங்காணப்பட்ட பின்னடைவுகளை சீராக்குபவர், மீத்திறன் மாணவர்களின் விசேட ஆற்றலுக்கு ஊக்கமளிப்பவர் என்ற வகிபாகங்களை ஆசிரியர் வகிக்க வேண்டிய தேவை இருப்பதால் கல்வி உளவியலறிவையும், கற்றல் கொள்கைகள் சார்ந்த பல்வேறு அனுபவங்களையும் அதன்மூலமாக தேர்ச்சிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டியது இன்றைய கல்வித் தேவையின் கட்டாயமும் அதன் வெற்றியுமாகும்.

"தரமான கல்வி மூலம் தரமான சமூகம்"

**என். விஜேந்திரன்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**(கல்வி முகாமைத்துவம்)**
**BA, S.L.E.A.S , PGDE, PGDEM**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களினது சமநிலை ஆளுமை

கல்வியின் நோக்கங்களில் மிக முக்கியமானதாகவும், இன்றியமையாததாகவும் விளங்குவது சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்கும் உச்ச பயன் கிடைக்கக் கூடிய விதத்தில் மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதாகும்.

நாம் வாழ்க்கையில் பல இடங்களில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியிருப்போம். மாணவர்கள் கல்வித் தெரிவுக்கோ அல்லது தொழில் தெரிவுக்கோ நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய நிலையிலிருக்கிறார்கள். நேர்முகப் பரீட்சையிலெல்லாம் அவதானிக்கப்படுகின்ற விடயம் ஆளுமையேயாகும்.

ஆளுமை என்பது ஒருவரிடம் காணப்படுகின்ற குணப்பண்புகளின் தொகுப்பேயாகும். ஆயினும் சில உளவியலாளர்கள் ஆளுமை பற்றி விளக்கியதை நாம் அவதானிக்கலாம்.

பிரித்தானிய உளவியலாளர் சிரில்பேர்ட் என்பர் "ஆளுமை என்பது ஏதோ ஒரு சமுதாய சந்தர்ப்ப சூழ்நிலையில் ஒருவர் துலங்கும் போது அவர் வெளிப்படுத்தும் உடல், உளச் செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பாகும் " என்று கூறுகிறார்.

பிரித்தானிய உளவியலாளர் ஒல்போர்ட் என்பவர் "ஆளுமை என்பது சூழலுக்கு பொருத்தமான விதத்தில் உண்டாகும், தனிச்சிறப்புக்களுடன் கூடிய சீராக்கம் அல்லது சீராக்கத்தை தீர்மானிக்கும் தனிப்பட்ட ஒருவரிடையே இருக்கும் உளவியல் முறைகளின் செறிவான ஒழுங்கமைப்பாகும் " என்று கூறுகின்றார்.

அமெரிக்க உளவியலாளர் என்.எல்.மன் என்பவர். "ஆளுமை என்பது தனிப்பட்டவர்களிடம் காணப்படும் அமைப்புக்களினதும் நடத்தைக் கோலங்களினதும் விருப்பு, மனப்பாங்கு, ஆற்றல்கள், திறன்கள், உளச்சார்புகள் என்பவற்றின் மிகச்சக்தியுள்ள பண்புகளின் ஒன்றிணைப்பாகும் " என்று கூறுகின்றார்.

அமெரிக்க உளவியலாளர் ஆர்னல்ட் நில்கார்ட் என்பவர் "சூழலுக்கான ஒரு தனிப்பட்டவரின் சீராக்கத்தை அல்லது பொருத்தப்பாட்டை தீர்மானிக்கும் நடத்தைப் போக்குகளினதும் சிந்தனை முறைகளினதும் இணைப்பே ஆளுமை ஆகும். " என்று கூறுகின்றார்.

எனவே பொதுவாக மனிதனது உடல் உள செயற்பாடுகள் சமுதாய சூழலுக்கு அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஒழுங்கமைக்கப்பட்டு சீராக்கப்பட்டு தனித்துவமான சிறப்புகளை கொண்டனவாக விளங்குகின்றன. அந்த குண இயல்புகளின் தன்மைகளையே ஆளுமை என நாம் அழைக்கின்றோம். இந்த குண இயல்புகள் பாடசாலையில் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களினால் நிலையானதாகவும் செறிவுடையதாகவும் தனிச் சிறப்புடையதாகவும் வளர்க்கப்பட்டு முதிர்ச்சி பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனிடம் காணப்படுகின்ற குணப்பண்புகளை சிலவகைகளாகப் பிரிக்கலாம், இன்னொரு விதத்தில் கூறுவதாயின் ஆளுமையை சில கூறுகளாகப் பகுத்து நோக்கலாம். ஆயினும் இவற்றிடையே நெருங்கிய தொடர்புள்ளது. என்பதனை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். அளுமைக் கூறுகளை ஐந்தாகப் பிரிக்கலாம்.

1) உடல் வளர்ச்சி
2) நுண்ணறிவு வளர்ச்சி
3) மனவெழுச்சி வளர்ச்சி
4) சமுதாய வளர்ச்சி
5) ஆன்மீக வளர்ச்சி

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வளர்ச்சியிலும் பாடசாலை கவனம் செலுத்த வேண்டி உள்ளது. ஆளுமை மீது பல விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. முதலில் குடும்பம் (வீடு) செல்வாக்குச் செலுத்தகிறது. அடுத்ததாகவே பாடசாலை, சமவயதுக் குழுவினர் குடும்பத்துடன் உறவாடுபவர்கள் சமய வழிபாட்டுத்தலங்கள் இதற்கப்பால் சமூக விழுமியங்களும் சமூகத் தொடர்பாடல்களும் ஒருவரின் ஆளுமை மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. எவ்விதமாயினும் வீடு, சமய வழிபாட்டுத்தலங்கள், சமவயதுக்குழுவினர் என்பவற்றில் எந்தளவு பாடசாலை செல்வாக்குச் செலுத்துகின்றதோ அந்தளவிற்கு மாணவரின் ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய முதன்மைக் காரணியாக பாடசாலை அமையலாம்.

**உடல் வளர்ச்சி**

ஆளுமை கூறுகளில் முதலாவதாக விளங்குவது உடல் வளர்ச்சி ஆகும். உடல் வளர்ச்சி எனும் பொழுது பொதுவாக 3 அம்சங்கள் கவனத்தில் எடுக்கப்படுகின்றன.

1) வயதிற்கேற்ப உயரம், நிறை என்பவற்றின் வளர்ச்சி.
2) உடல் அவயவங்களின் வளர்ச்சி.
3) உடலியல் திறன்களின் வளர்ச்சி.

உடல் வளர்ச்சியை பொதுவாக 3 வகை கட்டங்களாக பகுத்து ஆராய்வார்கள்.

1) குழந்தைப்பருவம்
2) பிள்ளைப் பருவம்
3) குமரப் பருவம்

உடல் வளர்ச்சியில் மிக விரைவான வளர்ச்சி தாயின் கருப்பையில் இருக்கும் பொழுதே ஏற்படுகின்றது. கலமாக இருக்கும் கரு வளர்ச்சியடைந்து பிறக்கும் பொழுது சாதாரண சிசுவின் நிறை 3.175kg /7 இறாத்தல் ஆகும். அதே போல் உயரம் 48.26.cm அளவினதாக இருக்கும். பிறந்தபின் மிகக்கூடிய வளர்ச்சியை முதலாம் இரண்டாம் வருடங்களில் அவதானிக்கலாம்.

உடல் வளர்ச்சியில் எல்லா குழந்தைகளும் ஒரே சீரான வளர்ச்சிப்படியை தாண்டியே செல்கின்றன. ஆயினம் விஷேடமான தனித்தன்மை உடையனவாக விளங்குகின்றன. சந்ததி வழியாகவும் சூழல் காரணமாகவும் உடல் வளர்ச்சி வேறுபாடுகள் அமைகின்றன. உடல் வளர்ச்சிக்கு அகச்சுரப்பிகள் காரணமாக அமைகின்றன. உடல் வளர்ச்சி ஏற்பட்டு கொண்டிருக்கும் பொழுது தசைப்பயிற்சிகள் உடலியல் திறன்களை வலுவடையச் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் ஆசிரியர் குழந்தையின் உடல் வளர்ச்சி நுட்பங்களை அறிந்து சீரான ஆரோக்கியமான வளர்ச்சியில் கவனம் செலுத்தும் பொழுது குழந்தையின் உடல் சார்ந்த வளர்ச்சியில் பெரும் பங்களிக்க முடியும். உண்ணும் உணவு பற்றிய ஆலோசகைகளை பெற்றோருக்கு வழங்குதல், சுகாதார பழக்க வழக்கங்களை ஊட்டுதல், உடலியல் திறன்களை வளர்ப்பதற்கான பயிற்சிகளை மாணவர்களுக்கு கொடுத்தல் என்பனவற்றிற்கு பாடசாலை உதவுவதன் மூலம் உடல் வளர்ச்சியில் பாடசாலை பங்கேற்கின்றது.

## நுண்ணறிவு வளர்ச்சி

நுண்ணறிவு என்பது "பகுத்து, தொகுத்து ஆராய்வதற்கான உளசக்தி " என்று எம். எலின்ஹவுஸ் அவர்களும் " சிறந்த தீர்வுகளுக்கும் விவாதங்களுக்குமான உளச்சக்தி " என்று எல்.எம்.ரேமன் அவர்களும், "எல்லா வகையான சிந்தனை திறனுக்கும் அடிப்படையான பொதுக்காரணியே நுண்ணறிவு " என்று சி.ஸ்பியர்மன் என்பவரும் வரைவிலக்கணப்படுத்தினார்கள். பொதுவாக திறந்த உள்ளத்தோடு சிந்திக்கும் திறன், பொதுமைப்பாடு காணும் திறன், தொடர்புகளை கண்டறியும் ஆற்றல் பிரச்சனைக்குரிய சந்தர்ப்பங்களில் மிகப் பொருத்தமான எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் திறன், கற்றலுக்குரிய திறன்கள், சூழலுடன் பொருத்தப்பாடடையும் திறன்கள் என்பன நுண்ணறிவு சார்ந்தவையாகும். நுண்ணறிவில் பல பிரிவுகள் காணப்படினும் அவற்றை எளிமைப்படுத்தி பொதுவாக 3 பிரிவுகளாக வகுத்து ஆராயலாம்.

1) திறந்த நுண்ணறிவு
2) பொறிமுறை நுண்ணறிவு
3) சமுதாய நுண்ணறிவு

சிந்தனையில் ஈடுபடும் திறன், குறியீடுகளையும் கருத்துக்களையும் கையாளும் திறன், தர்க்கரீதியான சிந்தனை திறன் என்பன திறந்த நுண்ணறிவு என அழைக்கப்படுகின்றன.

சில குழந்தைகள் பொருட்களையும் உபகரணங்களையும் பகுதிகளாக பிரிக்கவும் பின் பொருத்தவும் கூடிய திறனுள்ளவர்களாக இருப்பார்கள் இந்த திறன் பொறிமுறை நுண்ணறிவு எனப்படுகிறது.

சில குழந்தைகள் மற்றைய மனிதர்களுடன் இணைந்து செயல்படும் ஆற்றல்கள் உடையவர்களாகவும், சமவயது குழுக்களை வழிநடத்தி செல்பவர்களாகவும். தலைமை தாங்குபவர்களாகவும் திறன் பெற்றிருப்பதைக் காணலாம். இவர்கள் சமூக நட்சத்திரங்களாக விளங்குவார்கள். இவர்களுடைய திறன் சமுதாய நுண்ணறிவு என அழைக்கப்படுகின்றது.

பாடசாலைகளில் நுண்ணறிவுத் திறன்களை வளர்ப்பதற்கு பல கற்றல் அனுபவங்களை திட்டமிட்டுச் செயற்படுத்தலாம். கணிதம் சார்ந்த செயற்பாடுகள், நுண்ணறிவுப் போட்டிகள், சதுரங்க விளையாட்டுகள் என பலவகையான நுண்ணறிவு செயற்பாடுகளை வயதுக்கும் வகுப்புக்கும் ஏற்ப கையாள முடியும்.

## மனவெழுச்சி வளர்ச்சி

அருட்சி, துன்பம், அன்பு, கருணை, கோபம் வெறுப்பு, பயம், மகிழ்ச்சி போன்ற மனத்தூண்டல் நிலைகளையே மனவெழுச்சி என்கிறோம். தூண்டப்படுவதால் உணர்வுகளும் எண்ணங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கங்களும் மாற்றங்களுக்கு உட்பட்டு நடத்தையில் அல்லது உடற்றொழிற்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தும் நிலையே மனவெழுச்சி எனப்படுகிறது. புலன்களினால் தூண்டப்படு நிலை இங்கு முக்கியமானது. மனவெழுச்சி நடத்தைகள் சமுதாயத்திற்கு ஏற்புடையதான விழுமியங்களுக்கு ஒத்ததாக அமையும் பொழுது மனவெழுச்சி முதிர்ச்சி அடைந்ததாக கருதப்படுகின்றது.

நிலைத்திருக்கும் மனவெழுச்சிகள் சிறந்த இலட்சியங்களாக மாற்றப்படுவது உண்டு. தூண்டப்பட்ட மனவெழுச்சிகளே குழப்பங்களையும், மோதல்களையும் உருவாக்குகின்ற வேளையில் ஒத்துழைப்பு கூட்டுமுயற்சி போன்றவற்றினையும் உருவாக்குகின்றன. ஆசிரியர் மாணவர்களின் மனவெழுச்சிகளை உருவாக்கிக் கொள்ளலாம், வழிப்படுத்தலாம், முதிர்ச்சியடையச் செய்யலாம்.

மனவெழுச்சி என்பது உணர்வு நிலையாகும். இந்த உணர்வு நிலைகள் குழந்தைகளிடம் ஒழுங்கமைக்கப்படும் பொழுது சிறந்த நடத்தைகளை நாம் எதிர்பார்க்கலாம். மனவெழுச்சி வளர்ச்சி உயர்நடத்தைகளை ஊக்குவிக்கும் ஒரு முறை ஆகும். அத்துடன் மனவெழுச்சிகள் பரவும் இயல்புடையன. சிறந்த சமுதாயத்தை உருவாக்க மனவெழுச்சி முறைகளை பாடசாலையில் கையாளலாம்.

**சமுதாய வளர்ச்சி**

சமுதாய வளர்ச்சி என்பது ஒரு குழந்தைமயமாதலை குறிப்பிடுகிறது. சமுதாயத்தின் மொழி, பழக்கவழக்கங்கள், விழுமியங்கள் என்பனவற்றை தனதாக்கிக் கொண்டு சமுதாயத்திற்கு ஏற்புடையனவாக சமுதாயத்தால் விரும்பப்படுபவனாக குழந்தை வளர்ச்சியடைவதையே சமுதாய வளர்ச்சி என்கிறோம்.

பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் சமுதாய நிகழ்வுகளில், குழந்தையின் நடத்தையை சமுதாய வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. அதே வேளையில் அந்த சமுதாய நிகழ்வுகளே சமுதாய வளர்ச்சியினை உருவாக்குகின்றன. கல்வியின் முக்கியமான அடைவுகளில் ஒன்றாக விளங்குவது சமுதாய வளர்ச்சி ஆகும். குடும்பம், சமவயதுக் குழுக்கள், உறவினர்கள் என்பவற்றிற்கு மேலாக ஆசிரியர்கள் மாணவர்களின் சமுதாய வளர்ச்சிக்கு காரணகர்த்தாக்களாக விளங்குகின்றார்கள். பல ஆசிரியரின் நடத்தைகள் வாழ்நாள் முழுவதும் மாணவர்களால் பின்பற்றப்படுகின்றன.

சமுதாய விழுமியங்களை உணர்தல், பழக்கவழக்கங்களை நெறிப்படுத்தல் நேரத்தின்படி செயற்படுதல். சிறு சமுதாயப் பொறுப்புக்களை ஏற்று நிறைவேற்றல், சமுதாய ஒத்துழைப்புக்கு வழிகாட்டல் என்பன சமுதாய வளர்ச்சியில் ஊட்டப்படும் பாடங்களாகும். சமுதாய வளர்ச்சியில் மாணவர்கள் உயர்நிலை அடையும் பொழுது சமூக நட்சத்திரங்களாக பிரகாசிக்கிறார்கள். அவர்கள் சமூகத்திற்காகவும் சமூகம் அவர்களிற்காகவும் வாழுகின்ற வாழ்க்கையை ஒவ்வொரு மாணவனுக்கும் உருவாக்குவது ஆசிரியர்கள் ஆற்ற வேண்டிய மிகப் பெறுமதியான சமூக சேவையாகும்.

**ஆன்மீக வளர்ச்சி**

"உடம்போடு இருப்பதெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காண" என்பது ஔவையாரின் ஞானப்பாடல், தனிமனிதன் தன்னை உணர்தல் அல்லது ஆன்மாவை உணர்தல் அல்லது கடவுளை உணர்தல் என்பதே வாழ்க்கையின் நோக்கம் இதனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லா குரம்பை நிலை யென்றுணர்வீர்கள்
எல்லா வுயிர்க்கும் இறைவனேயாயினுங்
கல்லாதார் நெஞ்சத்துக்காண வொண்ணாதே " என்று

திருமந்திரம் கூறுகிறது. ஆன்மாவை உணர்வதே, அனுபவிப்பதே ஆன்மீக வளர்ச்சியாகும். கல்வித்தேடுகை, வாழ்க்கையின் தேடுகை எதுவாக இருக்க வேண்டும். என்பதனை ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடிக்கடி பாடும் பாடலின் கருத்து வலியுறுத்துகிறது.

"தேடுக தேடுக தேடுக நெஞ்சே
தீவிரமாகத் தேடினால் உன்னுள்
கூடிய உவகையும் முரளியும் குலவும்
கோமள விருந்தாவனத்தை நீ காண்பாய் ".

பாடசாலையில் அதாவது ஆசிரியர்களினால் ஆன்மீக உண்மைகளை மாணவர்களுக்கு புகட்ட முடியாது. குருடர் குருடருக்கு வழிகாட்ட முடியாது. ஆனால் சற்குருவிடம் மாணவர்களை ஆற்றுப்படுத்தும் பெரும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உள்ளது. அவர்களும் தேடும் பொழுதே மாணவர்களுக்கும் அந்த வழியை காட்டலாம்.

**முடிவுரை**

ஆளுமை வளர்ச்சி என்பது ஆளுமைக் கூறுகளான இவ்வைந்து வளர்ச்சிகளையும் மேம்படுத்துவதே ஆகும். இந்த ஐந்தும் சமநிலை தன்மையுடையதாக வளர்ச்சியடைய வேண்டும். அதுவே சமநிலை ஆளுமை எனப்படுகிறது. பூரண வளர்ச்சி என்பது அணுகமுடியாத ஒன்று. ஆனால் பாடசாலைகள் இவ்வைந்து ஆளுமை கூறுகளிலும் சமநிலையான ஒரு வளர்ச்சியை ஏற்படுத்தும் மையங்களாக, உருவாக்கம் பெறும் பொழுதே, கல்வியின் பயன் சிறப்பானதாக அமையும். பரீட்சை நோக்கில் மட்டும் இன்றைய பாடசாலைகள் இயங்குவது மனித சமுதாயத்தை குழிதோண்டிப்புதைக்கும் முயற்சியாகவே அமையும்.

**ந. சந்திரகாந்தன்**
முன்னாள் அதிபரும் கோட்டக்கல்வி அதிகாரியும்
தற்போது NECCDEP இன் ஆலோசகரும்

*****************************************************************************************

**Folder Lock**

நீங்கள் தயாரித்த ஆவணத்தை மற்றவர்கள் பார்க்காத வண்ணம் Password, கொடுத்து or Hide பண்ணி or Encrypt செய்ய Folder Lock என்றும் மென்பொருள் வெளிவந்துள்ளது. 2.2MB எனும் மிகச் சிறிய கொள்ளளவுடைய இம்மென் பொருளை www.newsoftwares.netfolderlock எனும் ணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

**தமிழ் எழுத்துப்பிழைகளைத் திருத்தும் Gmail**

ஆங்கில எழுத்துப் பிழைகளை திருத்தம் செய்வது போல் தமிழ் எழுத்துப்பிழைகளையும் திருத்தும் வகையிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை Google நிறுவனத்தின் Gmail மின்அஞ்சல் சேவை தமிழ்எழுத்துப் பிழைகளை திருத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இது ஒரு ஆரம்ப கட்டமாகவும் தொடர்ந்தும் இதனை மேம்படுத்தி வருகின்றது இந்நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையின் JICA செயற்றிட்டம்

தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகாவித்தியாலயத்தின் கல்வி அபிவிருத்திப் பாதையில் மேலும் வளப்படுத்தி மெருகூட்ட வேண்டிய தேவையை கடந்த காலங்களில் எதிர்பார்த்து நின்ற வேளையில் ஜப்பானிய கல்வி அபிவிருத்தி நிறுவனமான செயற்றிட்டம் எமக்கு அறிமுகம் செய்யப்பட்ட, தெரிவு செய்யப்பட்ட பத்துப் பாடசாலைகளுக்கிடையில் எமது பாடசாலை முன்னணியில் திகழ்ந்தது மகிழ்ச்சிக்குரிய வரவேற்கத் தக்க விடயமாகும்.

இச் செயற்றிட்டமானது பரந்த நோக்கோடு முன்னெடுத்து செல்லப்படும் செயற்பாடாகும். கல்வி அபிவிருத்தியுடன் கூடிய நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தல், பௌதீக வளங்களை மேம்படுத்தல், பாடசாலை சமூகத்தை ஒன்றிணைத்தல் ஆகிய மூன்று நோக்கங்களையும் அடிப்படையாக கொண்டு செயலாற்றி வருகின்றது.

எமது வித்தியாலயத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக Seika குழுவை முதன்நிலை குழுவாக கொண்டு அதன்கீழ் இயங்கும் மூன்று தரவட்டங்களை உள்ளடக்கி செயற்பட்டு வருகின்றது.

தரகல்வி வட்டம் ஒன்றானது தரம் 3 – 9 வரையான மாணவர்களின் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சுற்றாடல் சார் செயற்பாடுகள் ஆகிய பாடங்களில் மாணவர்களின் அடைவுமட்டத்தினை 35% - 80% மாக உயர்த்துவதை தமது பொது நோக்காக கொண்டு தமது செயற்பாடுகளை வளர்த்து செல்கின்றது.

தரகல்வி வட்டம் இரண்டானது முகாமைத்துவ இயலும் தன்மையை வலுப்படுத்தலும் கண்காணிப்பும் என்ற பொது நோக்கத்தை அடிப்படையாக கொண்டு வினைத்திறனான முகாமைத்துவத்தை கட்டியெழுப்புகிறது.

தரக்கல்வி வட்டம் மூன்றானது 5S திட்டத்தின் மூலம் பாடசாலையும் அதன் சுற்றுப்புறச் சூழலையும் தொடர்ச்சியாக பேணுதல் என்ற பொது நோக்கை அடிப்படையாக கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறாக செயற்றிட்டங்கள் யாவும் வளர்ச்சிப் பாதையை நோக்கி செல்கையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட செயற்றிட்ட முன்வைப்புகளில் எமது தரவட்டங்கள் மூன்றும் முதன்மை இடத்தை பெற்றுக்கொண்டது. இது எமது செயற்றிட்டத்திற்கு கிடைத்த பெருவெற்றியாகும். தொடர்ந்தும் நடாத்தப்பட்ட முன்வைப்புக்களிலும் கண்காட்சிகளிலும் எமது பாடசாலை தனக்குரிய நிலையை உறுதியுடன் பேணி கொழும்பில் நடாத்தப்பட்ட தேசிய விழாவிலும் பங்கு கொண்டு எமது செயற்றிட்டத்திற்குரிய சாதனைகளை அங்கும் நிலை நாட்டியது.

இத்தோடு நாமும் எமது நடவடிக்கையை இடைநிறுத்தாமல் 2ம் கட்ட நடவடிக்கைகளாக 2007இல் தரவட்டங்களிடையே மாற்றங்களை மேற்கொண்டு இந்நடவடிக்கைகளை சளைக்காமல் நவீனயுகத்திற்கு ஏற்ற வகையில் முகம் கொடுத்து செயலாற்றி வருகின்றோம்.

எமது வித்தியாலயத்தின் ஆரம்ப வேளையில் காலைப்பிரார்த்தனை முடிவடைந்தவுடன் தரம் 11–1 மாணவர்கள் அனைவரும் "100 பெட்டி" கணிதச் செய்கைக்கு தம்மை இயல்பாக தயார்படுத்தி சுறுசுறுப்பாக கணிதச் செய்கையில் விருப்புடன் ஈடுபடுகின்றன. அவ்வேளையில் இச்செயற்பாட்டில் அனைத்து வகுப்பாசிரியர்களும் உயிர்துடிப்பாக ஈடுபடுவதுடன் மாணவர்களுக்குத் தேவையான இடத்தில் அறிவுரை கூறி பாராட்டி அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கப்படுத்துகின்றனர். வகுப்பாசிரியர்கள் சமூகமளிக்காத வேளையில் ஏனைய ஆசிரியர்களும் கலந்து கொண்டு இச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்கின்றோம். எனவே இச்செயற்பாட்டில் கணித பாட ஆசிரியர்கள் மட்டுமல்லாது அனைத்து ஆசிரியர்களும் ஒன்றிணைந்து செயற்படும் ஒரு கூட்டான முயற்சிச் செயற்பாடாக அமைவது சிறப்பம்சமாகும். அத்தோடு கணிதபாட வேளையில் மெல்லக்கற்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் கணிதபாட ஆய்வுகூடத்தில் வடிவங்கள் காட்சிப்படுத்தப்பட்டு செயல் அட்டைகள், கையேடுகள் மூலம் மாணவர்களின் கற்றல் மேலும் மெருகூட்டப்படுகிறது இதனால் ஆரம்பகாலத்தில் இருந்த கணிதப் பாட அடைவு மட்டத்திலே நாம் அதிகரித்த நிலையினை அவதானிக்க முடிகிறது. இச் செயற்பாடு தினமும் எம்மால் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

இத்தோடு விஞ்ஞான பாடத்திற்கான செயற்பாடுகளும் மாணவர்களை கற்றல் நடவடிக்கைகளில் தூண்டும் வகையிலே இடம் பெறுகின்றன. ஆய்வு கூடப்பரிசோதனை மூலம் குழுரீதியான செயற்பாடுகள் முன்வைக்கப் பட்டுள்ளதுடன் மாணவர்களுக்கான பௌதிகவியல் பாடத்தில் ஒளிச் செயற்பாடுகளை முன்வைப்பதற்காக "இருட்டறை" அமைக்கப்பட்டு ஒளியுடன் தொடர்புடைய பரிசோதனை அவதானத்தை மாணவர்கள் தெளிவாக பெற்றுள்ளனர். இத்தோடு திறந்த வகுப்பு கற்பித்தல் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு மாணவர்கள் உற்சாகப்படுத்தல் மூலம் கற்றல் செயற்பாடுகள் இலகு படுத்தப்படுகின்றது. ஆய்வு கூடத்தில் மாணவர்கள் அதிகளிவில் உபகரணங்களை பயன்படுத்தி செயற்படுவதற்கு வழிப்படுத்தப்பட்டுள்ளனர். பாசறை கற்பித்தல் "வானியல் அவதானச் செயற்பாட்டில்" மாணவர்கள் மிக உற்சாகமாக கலந்துகொண்டு அவதானித்து கற்றலில் மகிழ்ந்தனர். மாணவர்களின் கற்றலில் பெற்றோரையும் உள்வாங்கி பெற்றோர் பங்களிப்புடன் கற்றல் கற்பித்தல் யாவும் வெற்றிகரமாக முன்னெடுத்து செல்லப்படுகின்றன. இத்துடன் "பச்சையில்லம்" அமைக்கப்பட்டு தாவரங்களின் வளர்ச்சி பற்றி அவதானிப்பு செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுகின்றன. இதனால் விஞ்ஞான பாடத்தில் ஆரம்பத்தில் இருந்த அடைவு மட்ட நிலையில் இருந்து அதிகரித்து செல்வதை காண முடிகிறது.

மேலும் எமது வித்தியாலயத்தில் மொழிவிருத்தி செயற்பாடுகளில் ஆங்கில மொழி விருத்திக்கான செயற்பாடுகள் சிறப்பபான முறையில் முன்னெடுத்து விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் ஆங்கில மொழியை விளங்கிக் கற்கும் வகையில் உற்சாகம் ஊட்டி செயல்அட்டை காட்சிப்படுத்தல் கட்புல செவிப்புல சாதனங்களின் பயன்பாடு மூலம் மாணவர்களின் உள்ளங்களை கவர்ந்து கற்றலை இலகுவாக்கியதோடு தினமும் அம்மாணவர்கள் கற்றலில் விருப்புடனும் துடிதுடிப்புடனும் ஈடுபட விளையாட்டுக்கள், குழுரீதியான போட்டிச் செயற்பாடுகள், பாவனை முறைகள் முன்வைக்கப்படுகின்றன. இதனால் மாணவர்கள் அனைவரும் கற்றலில் முழுமையாக ஈடுபடுவதனை நாம் உற்று நோக்க முடிகிறது. இத்தோடு மாணவர்களின் தேடற் கல்விக்கும் கலைக்களஞ்சியத்திற்கும் களம் அமைக்கும் நோக்கில் மாணவர்களின் கற்றல் சூழலில் பொது விடயங்களின் தொகுப்புக்கள், குறிப்புக்கள் தினமும் காட்சிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஆங்கில மொழி கல்வியில் மாணவர்களின் ஈடுபாட்டினையும் அடைவு மட்டம் அதிகரித்து செல்வதனையும் நாம் தினமும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறே தமிழ்மொழி விருத்திக்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. மொழி விருத்தி செயற்பாடுகளில் பின்தங்கிய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு ஆரம்ப அடித்தளத்தில் இருந்தே செயற்பாடுகள் யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுக்கப்பட்டு பயிற்சிகள் திட்டமிடப்பட்டு பயிற்சி புத்தகங்களை தயாரித்து நாளாந்தம் அம்மாணவர்கள் அவற்றில் ஈடுபட்டு வளர்ச்சிபெற வழிப்படுத்தப்பட்டுள்ளார்கள். மாணவர்களுக்கான கற்றல் செயற்பாட்டில் உயிர்துடிப்பும் உளமகிழ்வும் ஏற்பட விநாடி வினா, விறுவிறுப்பான போட்டிகள், சொல்லட்டைகள் தெரிவு, சொற்களின் படங்களை காட்சிப்படுத்தல். குழுரீதியான செயற்பாடுகள் மூலம் மொழிவிருத்தியில் வளர்ச்சியினை தூண்டிச் செல்கின்றோம். வாசிப்பின் மூலம் மேலும் அடைவு மட்டத்தினை அதிகரிக்கும் நோக்கிலும் புதிய விடயங்கள் பொது அறிவுத் தேடல்கள் மாணவர்களை சென்றடையவும், பொது விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டு மாணவர்கள் அவ்விடயத்தை வாசித்து பயன்பெற தூண்டப்படுகிறார்கள். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மொழி விருத்தியிலும் வளர்ச்சிப் போக்கை நாம் மாணவர்களிடத்தே நன்கு அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு ஆரம்பத்தில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளுடன் காணப்பட்ட கற்றல் நடவடிக்கைகள் தற்பொழுது சகல பாடங்களிற்கும் திட்டமிடப்பட்டு செயல்நூல் வடிவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மாணவர்கள் மிக மகிழ்ச்சிகரமான சூழலில் துடிப்பாக கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அததுடன் கற்றல் தொடர்பான சுவர் சித்திரங்கள் கற்றல் சூழலில் வரைந்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளதால் மகிழ்ச்சிகரமான சூழலில் சுயமான கற்றலுக்கு மாணவர்களை தூண்டுகின்றோம். அத்துடன் தகவல் சேகரித்தல், வெளிக்களச் செயற்பாடுகள் சுற்றுலா பயணங்கள், உடற்கல்வி செயற்பாடுகள், கண்காட்சி, நூல் பயன்பாடுகள் போன்ற பல செயற்பாடுகள் மூலம் சிறார்களின் கல்வியினை மேம்படுத்துகின்றோம்.

இச் செயற்றிட்டங்களை நாம் நடைமுறைப் படுத்திய வேளையில் எமக்கிடையே புத்துணர்ச்சியும் மாணவர்களிடையே சுறுசுறுப்பும் ஏற்பட்டதுடன் அனைத்து செயற்பாடுகளும் இலகுபடுத்தப்பட்டுள்ள தன்மையினையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தின் படிப்படியான வளர்ச்சிப் போக்கு காணப்படுகின்றது. ஆசிரிய குழுக்களிடையே தளர்வற்ற குழு ஒற்றுமையான தொடர்ச்சியான செயற்பாடுகள் முன்னெடுத்து செல்லப்படுகின்றன. பாடசாலை சமூகத்திற்கு இடையிலான தொடர்பு அதிகரித்து வலுப்படுத்தப் பட்டுள்ளதோடு எமது பாடசாலைச் சுற்றாடலின் கவின் நிலை சீராகப் பேணப்பட்டும் வருகின்றது. மாணவர்களிடையில் மேலும் சிறந்த நன்நடத்தை மாற்றங்களையும் நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது மனநிறைவைத் தருகின்றது.

இச்செயற்றிட்ட குழுவினருக்கு நன்றி கூறிக்கொள்வதோடு எமது செயற்பாடுகள் யாவும் உயிர்த்துடிப்புடன் முன்னெடுத்து செல்லப்படும் என்பதிலும் நாம் உளப்பூரிப்பு அடைவதோடு உறுதியும் பூணுகின்றோம்.

"கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடு அல்ல மற்றையவை"

**திருமதி. பா.வி. ஆனந்தராஜா**
**இணைப்பாளர்,**
**Jica செயற்றிட்டம்**
**தி/பெருந்தெரு விக்நேஸ்வர**
**மகா வித்தியாலயம்**

**மாரடைப்பு வராமல் தடுக்கவும் தொந்தரவு கொடுக்காமல் இருக்கவும் தினசரி விற்றமின் 'சி' சத்துள்ள மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும். விற்றமின் 'சி' சத்துள்ள காய்கறிகளையும், கீரைவகைகளையும், பழங்களையும் சாப்பிட வேண்டும். இது கொழுப்புச் சத்தைக் குறைக்கும். இதனால் மாரடைப்பு வரும் வாய்ப்பு குறையும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சிப் போக்கு

ஒரு நாட்டின் மொத்த மெய்த்தேசிய உற்பத்தியில் நீண்ட காலத்தில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பே பொருளாதார வளர்ச்சியாகும். அதாவது குறித்த நாட்டின் பொருட்கள் சேவைகளின் உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக அதிகரித்து அதன் மூலம் வருமானம் உயர்வடைந்து செல்லுமானால் அதனைப் பொருளாதார வளர்ச்சி எனக்கூறலாம்.

பொருளாதார வளர்ச்சி பல்வேறு வழிகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நாட்டின் பொருட்கள் சேவைகளின் திரட்சி அதிகரித்தல், வேலைவாய்ப்புக்கள் அதிகரித்தல், மனித தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஆற்றல் அதிகரித்தல். வளங்களை உயர்வான தலா உற்பத்திக்குப் பயன்படுத்துதல் என்பன பொருளாதார வளர்ச்சியின் பிரதான பலாபலன்களாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தொழில் நுட்ப முன்னேற்றம் மனித மூலதன விருத்தி பொதுப்பணி வசதிகள் இயற்கை வளப்பயன்பாடு என்பன பெரிதும் செல்வாக்கு செலுத்துகின்றன.

இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பில் மூன்று முக்கிய துறைகளாக கைத்தொழில்துறை, விவசாயத்துறை, சேவைகள்துறை என்பன விளங்குகின்றன. பொருளாதாரம் வளர்ச்சியடையும் போது பொருளாதாரக் கட்டமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படும் இந்த வகையில் நோக்கும் போது இலங்கையில் விவசாயத்துறையின் சார்பளவு பங்களிப்பு வீதம் வீழ்ச்சியடைந்தும், கைத்தொழில் துறையின் சார்பளவு பங்களிப்பு வீதம் அதிகரித்தும், சேவைகள் துறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாக விளங்குவதுடன் சார்பளவு பங்களிப்பு வீதம் மிக உயர்ந்ததாகவும் காணப்படுகின்றது. இது ஒரு ஆரோக்கியமான கட்டமைப்பு மாற்றமாகும். மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பின்வரும் புள்ளி விபரங்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

| ஆண்டுகள் | விவசாயத்துறையின் பங்களிப்பு வீதம் | கைத்தொழில் துறையின் பங்களிப்பு வீதம் | சேவைகள் துறையின் பங்களிப்பு வீதம் |
|---|---|---|---|
| 1950 | 44.3 | 19.6 | 36.9 |
| 1960 | 37.8 | 16.8 | 45.4 |
| 1970 | 28.3 | 23.8 | 47.9 |
| 1980 | 27.6 | 29.6 | 42.8 |
| 1990 | 26.3 | 26.0 | 47.7 |
| 2000 | 19.9 | 27.3 | 52.8 |
| 2001 | 21.1 | 26.8 | 53.1 |
| 2002 | 20.5 | 26.3 | 53.2 |
| 2003 | 19.0 | 26.4 | 54.6 |
| 2004 | 17.9 | 26.8 | 55.4 |
| 2005 | 17.2 | 27.0 | 55.8 |
| 2006 | 19.5 | 27.1 | 56.5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படுகின்ற போது தொழில்வாய்ப்புக் கட்டமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படும். அதாவது விவசாயத்துறை சார்ந்த தொழில் வாய்ப்புக்களின் சார்பளவு பங்களிப்பு வீதம் வீழ்ச்சியடைந்து, கைத்தொழில் துறை மற்றும் பணிகள் துறைசார்ந்த தொழில் வாய்ப்புக்களின் சார்பளவு பங்களிப்பு வீதம் அதிகரிக்கும்.

அபிவிருத்தி அடைந்து வரும் இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு பொருளாதார வளர்ச்சி வீதம் 7-10% வரை இருக்குமானால் அது சிறப்பான வளர்ச்சியாகும். இதன் அடிப்படையில் தற்போதைய அரசாங்கமும் 8% வரையான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தப்போவதாக கூறி வருகிறது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிப் போக்கினை பின்வரும் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

| ஆண்டுகள் | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் வளர்ச்சி வீதம் |
|---|---|
| 1951 | 6.2 |
| 1955 | 5.9 |
| 1960 | 6.7 |
| 1965 | 2.3 |
| 1968 | 8.2 |
| 1970 | 4.3 |
| 1975 | 2.8 |
| 1978 | 8.2 |
| 1980 | 5.8 |
| 1985 | 5.0 |
| 1990 | 6.2 |
| 1995 | 5.5 |
| 2000 | 6.0 |
| 2001 | -1.5 |
| 2002 | 4.0 |
| 2003 | 6.0 |
| 2004 | 5.4 |
| 2005 | 6.0 |
| 2006 | 7.4 |

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதத்தினை நோக்கும் போது ஆண்டிற்கான சராசரி வளர்ச்சி ஏறத்தாழ 5% ஆக காணப்படுகின்றது. இலங்கையின் வரலாற்றில் 1950க்குப் பின்னர் 2001ம் ஆண்டில் எதிர்கணியப் பொருளாதார வளர்ச்சி காணப்பட்டதும் குறிப்பிடத்தக்க பின்னடைவாகும். 1978ம் ஆண்டிற்குப் பின்னர் ஓர் உயர்வான வளர்ச்சி நிலையான 7.4 வீதத்தை 2006ம் ஆண்டில் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அதேநேரம் முன்னெப்பொழுதும் இல்லாத ஆகக் குறைந்த வேலையின்மை வீதமான 6.5 வீதம் 2006ல் காணப்பட்டதுடன் பணவீக்க வீதம் 14% - 18% ஆகவும், அரசின் நடைமுறைச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 19.5% ஆகவும், மூலதனச் செலவினம் 5.8% ஆகவும் காணப்பட்டது. இவற்றை எல்லாம் உற்று நோக்கும் போது இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது மக்களின் வாழ்க்கைத்தரத்தில் பெருமளவு முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பது தெளிவாகும்.

அ. சிவப்பிரியன் 13 வர்த்தகப்பிரிவு (2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்க் குழுவினர்



முகாமைத்துவ
ஆலோசனைக்
குழுவினர்



மாணவத் தலைவர்களுடன்
கட்டொழுங்குக் குழுவினர்



வித்தியாலய
இன்ரக்கழகத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்கள் வளர்த்த இசைக்கலை

ஆலயங்களை வளர்த்த கலைகளுள் இசைக் கலையும் ஒன்றாகும். இசைக்கலை ஒலி பற்றியதாகும். திருத்தலங்களில் இன்றும் கூட பண்ணிசையும் மங்கள இசையும் சிறப்புடன் இசைக்கப்பட்டு வருகின்றன. பண்ணிசையை திருமுறைகள் மூலமும் மங்கள இசையை நாதஸ்வரம், தவில் போன்ற இசைக் கருவிகளின் வாயிலாகவும் நிகழ்த்தி வருகின்றன.

இராஜஇராஜசோழன் தஞ்சைப்பெருவுடையார் கோயிலை கட்டுவித்தான். இக்கோயில் 500அடி நீளமும் 250அடி அகலமும் கொண்ட பெருங் கோயிலாகும். இக்கோயிலில் திருமுறை ஓத பிடார்களை நியமனம் செய்தான். தேவாரம் இசைப்பவர்களை பிடாரர் என்றும் தேவாரம் இசைத்தலை விண்ணப்பித்தல் என்றும் கூறுவர். இராஜ இராஜசோழன் மங்கள இசையிற்காக ஆரம்பத்தில் நட்டுவானர்களையும் பாணர்களையும் நியமித்தான்.

பக்திப் பாடல்கள் மூலம் இசையெழுச்சியைத் திருத்தலங்களில் தேவார முதலிகள் ஏற்படுத்தி னார்கள். தேவார முதலிகளுள் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பெரும் பங்கு ஆற்றினார்கள். திருஞானசம்பந்தர் தனது பாடலில் இசையின் பெருமையை "இசைக் கற்று வல்லவர் இசைக்குத வுமாறு வல்லார்" என்று பக்தியுடன் பாடவேண்டும் என்பதை திருஞானசம்பந்தர் இப்பாடலிலே எடுத்துக் காட்டுகின்றார். இசைப்பாடல் பக்தியுணர்வை ஊட்ட வல்லது என்று ஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

திருநாவுக்கரசு நாயனார் இசைப்பற்று உடையவராக இருந்தார் என்பதனை "பாடுவார் பணிவார் பல்லாண்டிசை கூறு பக்தர்கள்" என உறுதிபடக் கூறுகின்றார். சுந்தரர் இறைவனை ஏழிசை வடிவுடையவனாக காண்கிறார்.

இறைவனை இசையால் வழிபடும் முறை பரிபாடலிற் காணப்படுகின்றது. காரைக்கால் அம்மையார் இயற்றிய பண்களும், பதிகங்களும் இறைவனை பாடல்களால் வழிபடும் முறையை எடுத்துக் காட்டுகின்றது. நல்லிசைப் பாடல்களாவன திருமுறைப் பாடல்களில், திவ்விய பிரபந்தங் களிலும் காணப்படுகின்றது. இவ் நல்லிசைப் பாடல்களை முத்துத்தாண்டவர், தில்லை விடங்கன், மாரிமுத்துப்பிள்ளை, அருணாசல கவிராயர் போன்று இன்னும் சிலர் பாடியுள்ளார்கள். அருணகிரிநாதரின் திருப்புகழும், வள்ளலாரின் திருப்பாவும், தியாகராஜசுவாமிகளின் கீர்த்தனைகளும் இறைவழிபாட்டிற்குரிய முக்கிய சாதனமாக விளங்குகின்றது.

தேவார திருப்பதிகங்களை இன்று பாடுபவர்கள் ஓதுவார் பரம்பரையினர் ஆவார். திருக்கோயில் வழிபாட்டில் இன்றும் கூட திருமுறை ஓதுதல் திருத்தலப் பதிகங்களை பாடுதல் என்பன மரபாக பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆலயங்களிலே நடைபெறும் நிகழ்வில் பாடப்படும் கீதம். கீர்த்தனைகள் என்பவற்றின் மூலமும் புராண கதைகள் வாயிலாக மக்கள் மத்தியில் இசைகள் மூலம் பரப்பப்படுவதால் இன்னொரு காரணி முறையாக இவ் இசைக்கலை வளர்ந்து சென்றது.

கருவி இசை வகையைச் சார்ந்ததாக நாதஸ்வரம் தவில், தாளம், சுருதி என்ற நான்கின் ஒருமைப்பாடாகும். இது ஒரு மங்கள இசையாகும். இவ் இசையானது திருக்கோயில்களில் இன்று வாழ்ந்து வரும் இசையாக இது இருந்து வருகின்றது. ஆலய வழிபாட்டில் இதனை பெரிய மேளம் என்பர் திருக்கோயில்களில் நடைபெறும் திருமணச் சடங்குகளில் இவ் இசையை கேட்கலாம். திருக் கோயில்களில் நாள்தோறும் இசையும் கீர்த்தனையும் பங்குபெறுகின்றன.

இசைக் கலையானது இறைவழிபாட்டுக் கலையாக இருந்து வருகின்றது. இசையால் இறைவனை வழிபடும் முறை தொன்று தொட்டு நிலவி வருகின்றது. பல்வேறு திருக்கோயில்களில் இசை வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்தமையும் இசைவழிபாட்டை இறைவன் விரும்பி ஏற்பார் என்பதையும் திருத்தலப்பதிகங்கள் உரைக்கின்றன. இவ்வாறு பல்வேறு நிலைகளில் திருத்தலங்கள் இசை கலையை வளர்த்து வருகின்றன.

**இ. யசோதரா**

**தரம் - 12கலை (2009)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அச்சுறுத்தல்

இந்தோனேசியாத் தீவான பாலியில் "விஞ்ஞான பொருளாதார துறைகள் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்ற மாநாட்டில்" பூமி வெப்பமடைவதால் ஏற்படக்கூடிய மற்றுமொரு பாரதூரமான விளைவு குறித்து புதியதொரு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதாவது பாதுகாப்பற்ற அல்லது அச்சுறுத்தலுக்குள்ளான பகுதிகளில் மோதல்கள் அதிகரித்து வருவதாகும். காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவது 21ம் நூற்றாண்டின் ஒரு முக்கிய அமைதிக் கொள்கையாகும் என்று "பாதுகாப்பு அச்சுறுத்தலைத் தரும் காலநிலை மாற்றம்" தொடர்பான ஜேர்மன் ஆலோசனைச் சபை தயாரித்து வரும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சுற்றாடல் திட்டப்பிரிவு உட்பட சர்வதேச நிபுணர்களினதும், ஸ்தாபனங்களினதும் செயற்பாடுகளிலிருந்து இந்த அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. உலகுக்கும், சமுதாயங்கள், நாடுகள் ஆகியவற்றின் பாதுகாப்புக்கும் பல்வேறு சுற்றாடல் சவால்கள் தோன்றியுள்ளன என்று ஐக்கிய நாடுகள் சுற்றாடல் திட்டப் பிரிவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் A.C.M. ரீனரை மேற்கோள் காட்டி அப்பிரிவு வெளியிட்ட குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவற்றில் காலநிலை மாற்றம் முதலிடம் வகிக்கின்றது. வாயு வெளியேற்றத்தை குறைப்பதற்கான திடமான கொள்கையை கடைப்பிடிக்குமாறு பாலியில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ளும் அரசாங்கங்களிடம் ஐக்கிய நாடுகள் சுற்றாடல் திட்டப்பிரிவு வலியுறுத்தியுள்ளது. எதிர்க்காலத்தில் மோதல்கள் இடம்பெறலாம் என கருதப்படும் பிரதேசங்கள் காலநிலை மாற்றம் காரணமாக விவசாயம் மிக மோசமாகப் பாதிக்கப்படும் பிரதேசங்களுடன் ஒத்திருக்கின்றன. காலநிலை மாற்றம் காரணமாக ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும் வெப்பநிலை மழைவீழ்ச்சி ஆகியவற்றில் ஏற்படக்கூடிய மாற்றங்களால் இப்பிராந்தியங்களின் தானிய உற்பத்தி மிக மோசமாக பாதிக்கப்படும் என்று தென்னிந்திய நகரான ஹைதராபாத்தில் நவம்பர் மாதம் நடைபெற்ற சர்வதேச விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் ஆலோசனைக் குழுவின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் முன்னர் நடத்திய கூட்டத்தில் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்தார்கள். ஆசியாவின் பல வறிய நாடுகள் அரிசியைப் பிரதான உணவுப் பொருளாக கொண்டுள்ளன. உலக அரிசி உற்பத்தியில் 90 % நுகரும் ஆசிய நாடுகளில் உலக வறிய மக்கள் தொகையில் 70 % வசித்துவருகின்றனர். என்று பிலிப்பைன்சில் இயங்கும் சர்வதேச அரிசி ஆராட்சி நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானி "றெனியர் வொஸ்மன்" ஹைதராபாத்தில் தெரிவித்தார். இந்தோ கங்கை சமவெளியிலும் காலநிலை மாற்றம் காரணமாக கோதுமை உற்பத்தி பாதிக்கப்படலாம் என்று மெக்ஸிகோவில் தலைமை அலுவலகத்தை கொண்டுள்ள சர்வதேச கோதுமை, சோளவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது. இதே போன்று தானிய உற்பத்தி வீழ்ச்சியின் தாக்கம் ஆபிரிக்காவின் சஹல் பிராந்தியத்திலும் உணரப்படும் என்று சர்வதேச விவசாய ஆராட்சி நிலையத்தின் ஆலோசனைக்குழு விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கால நிலை மாற்றத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க தவறினால் அது உலகின் பல பகுதிகளில், வன்செயல்கள், மோதல்கள், யுத்தம் ஆகியன வெடிப்பதற்கு வழிவகுக்கும் வகையில் பதற்ற நிலையை உருவாக்கும் என்று புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது போன்று விவசாய விஞ்ஞானிகளும் எச்சரிக்கை செய்துள்ளார்கள். உணவு உற்பத்தி வீழ்ச்சி, நன்னீர் மாசடைதல், புயல் காற்று அதிகரித்த வெள்ள அழிவுகள், அன்றாட சீர்கேடு காரணமாக குடிப்பெயர்வு ஆகிய காலநிலை சம்மந்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்தங்கள் ஏற்படலாம் என்று இந்த அறிக்கை கூறுகிறது. சஹெல் பிராந்தியத்தில் தென்னாபிரிக்காவின் வடக்கு, தெற்கு ஓரங்களிலுள்ள நாடுகள் மத்திய தரைப் பிரதேசம் ஆகியவற்றிலும் கூடுதலான ஆபத்து எதிர்பார்க்கப்படுகிறது. மற்றும் மத்திய ஆசியா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா, கரிபியனின் சில பகுதிகள் மெக்ஸிகோ குடா லத்தீன், அமெரிக்காவின் அன்டியன், அமேசன் பிராந்தியங்கள் ஆகியன ஆபத்தை எதிர் நோக்கும் பகுதிகளாகுமென மதிப்பிடப்பட்டுள்ளன. தீவிர காலநிலை நிகழ்வுகள், அதிகரிப்பான வறட்சி வெள்ளப்பெருக்கு, நீர் பற்றாக்குறை ஆகியன வறிய மற்றும் ஆபத்தை எதிர் நோக்கும் நாடுகளை சமாளித்து நிர்வகிப்பதற்கான ஆற்றலை விஸ்தரித்து சீரழிவு, வன்செயல் ஆகியவற்றுக்கும் வழி வகுக்கலாம் என்று அறிக்கையில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. ஆபத்தை எதிர்நோக்கும் நாடுகள் அநேகமாக அரசியல் மாற்றம், குறைந்த பொருளாதார வளர்ச்சி அதிக சனத்தொகை ஆகியன காணப்படும் நாடுகளும் வன்முறை மோதல்களை எதிர் கொள்ளும் நாடுகளின் எல்லையோரங்களில் அமைந்துள்ள நாடுகளாக இருக்கலாம் என்று அறிக்கை கூறுகிறது. அதிகரிப்பான வறட்சியும், நீர் பற்றாக்குறையும் அதிக சனத்தொகை வறட்சி, விவசாய வீழ்ச்சி பாதிக்கப்பட்ட சில நாடுகளின் அரசியல் பிரச்சனைகளைத் தீர்க்க ஆற்றலின்மை ஆகியவற்றுக்கிடையிலான செயற்பாடுகளின் விளைவாக அரசியல் நெருக்கடிகளும் குடிப்பெயர்வு அழுத்தமும் ஏற்படலாம் என்று அறிக்கை தெரிவிக்கிறது. காலநிலை மாற்றம் குறித்தும், யுத்தம் குறித்தும் கவலை அதிகரித்துள்ள வேளையில் இந்த புதிய அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வருட ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை இந்த விடயம் குறித்து விவாதித்து அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இளைப்பாறிய மற்றும் சேவையிலுள்ள சிரேஷ்ட இராணுவ நிபுணர்களால் எச்சரிக்கை விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அதிகரித்த நெருக்கடிகளை ஆபத்தை எதிர் நோக்கும் பல்வேறு நாடுகள் எவ்வாறு எதிர் கொள்ளப் போகின்றன என்று இந்த அறிக்கை விளக்குகிறது. உதாரணமாக ஏற்கனவே பலவீனமடைந்துள்ள சோமாலியா, சாட் போன்ற நாடுகளுக்கும் சிவில் யுத்தம் நடைபெறும் சூடான், நைகர் போன்ற நாடுகளுக்கும் வறட்சி, விவசாய வீழ்ச்சி, நீர் பற்றாக்குறை ஆகியவற்றின் மேலதிக அழுத்தம் ஏற்படும்.

இவற்றின் விளைவாக சூடானிலும், சாட்டிலும் பல இலட்சக்கணக்கானோர் அகதிகள் ஆவர். தென் ஆபிரிக்காவில் காலநிலை மாற்றம் உலகிலேயே வறிய நாடுகளாக விளங்கும் சிலவற்றின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்திவிடலாம். பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் துரிதமாக உருகி வரும் பனிப்படலம் காரணமாக வெள்ளப்பெருக்கும். மண்ணரிப்பும் ஏற்பட்டு கோடிக்கணக்கான மக்களின் நீர் விநியோகம் பாதிக்கப்படும், வங்காள விரிகுடாவில் கடல் மட்ட உயர்வினாலும், தொடர்ச்சியான சூறாவளி, புயல் ஆகியன காரணமாகவும் பிராந்தியத்தின் கரையோர மக்களுக்கு பாதிப்பு ஏற்படலாம். பங்களாதேஷிலிருந்து அகதிகள் வருவதை தடுப்பதற்காக இந்தியா ஏற்கனவே பங்களாதேஷ் எல்லையை மூடிவிட திட்டமிட்டு வருகிறது. சீனாவில் காலநிலை மாற்றத்தால் ஏற்கனவே இருந்து வரும், காற்று, நீர் மாசடையும் பிரச்சினை, மணல் பாதிப்பு, நீர்பற்றாக்குறை ஆகியன மேலும் மோசமடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

**இ. ரஜீவன்**

**13 கலைப்பிரிவு (2008)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கற்றல் கற்பித்தலில் ஆதிக்கம் செலுத்தும் "5E"

கல்வி என்பது என்றும் வளர்ந்து கொண்டிருப்பது, சூழ்நிலை மாற்றங்களுடன் மாறிக்கொண்டிருக்கவேண்டியது என்பது "ஜோன்டூயியின்" கருத்தாகும். 2007ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கலைத்திட்ட சீராக்கத்தில், பாடசாலைக் கல்வியில் கலைத்திட்டம், பாடப்புத்தகம், ஆசிரியரின் கற்பித்தல்முறை, மாணவரின் கற்றல் உட்பட மொத்த கல்விச் செயலொழுங்கிற்கும் தேடலை அடிப்படையாகக்கொண்ட மாணவரின் கற்றல் செயலொழுங்கு அது தேர்ச்சிவிருத்திக்கு (Competency) பிள்ளைக்கு உதவும் கற்றல் செயல்முறையாகவும் உருமாற்றம் பெற்றுள்ளது. 2007ஆம் ஆண்டின் கலைத்திட்ட சீராக்கத்தில் வகுப்பறைக் கற்றல்கற்பித்தல் செயலொழுங்கிலும், ஆசிரியரின் வகிபாகத்திலும் மாற்றங்களை உருவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. ஆசிரியரின் ஆசிரிய வகிபாகத்தின் பண்புரீதியான விருத்திக்கும் மாணவர்களிடத்தில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கும் பொருத்தமான ஒரு புதிய கற்றல் முறையாக 2007ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 5E படிமுறையிலான கற்றல் கற்பித்தல் முறை வழிமொழியப்பட்டுள்ளது. சிந்தனை ஆற்றலை விருத்தி செய்யக்கூடிய வகையிலும், வகுப்பறைக் கற்றலுக்கான புதியதோர் அணுகுமுறையாகவும், மாணவர்களின் சிறந்த அடைவுமட்டத்தை உயர்த்துவதற்கும் சிறந்த கற்பித்தல் அணுகுமுறையாக 5E மாதிரி விளங்குகின்றது. 5E மாதிரி அல்லது 5 Step method என்பது, Eஇல் தொடங்குகின்ற 5 ஆங்கிலச்சொற்களின் அடிப்படையான, செயன்முறைகளின் சுருக்கமாக 5E காணப்படுகின்றது. வகுப்பறைச் செயற்பாட்டுக்கோலமானது இப் படிமுறையிலேயே திட்டமிடப்பட்டுகிறது.




மாணவர்களுக்கு பண்புத்தரம் வாய்ந்த நடத்தைக் கோலமொன்றினை கட்டியெழுப்ப அல்லது மாணவர்களுக்கு அவசியமான தேர்ச்சிகளை வழங்க 5E மாதிரி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக் கோலம் இலகுவில் செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது. இச் செயற்பாட்டு முறையிலான திட்டமிடலில் ஆசிரியர் ஒரு வளவாளரின் (Resource person) நிலைக்கு உள்ளாகின்றார். இங்கு மாணவர்கள் வகுப்பறைச் செயற்பாடுகளில் ஒரு குழுவாக இருந்து குறித்த ஒரு நோக்கத்திற்காக தொடர்ச்சியாக ஒருவரை ஒருவர் சார்ந்திருந்து இடைத்தொடர்புடன் உறவாடி செயற்படுவர். இக்குழுவேலைகளின் போது பால்வேறுபாடு, பங்குபற்றலில் சமனற்ற தன்மை, மாணவர்களின் குறைவான ஒத்துழைப்பு என்பன பொதுவாகக் காணப்படும் இடர்பாடுகளாகும். இவ்விடர்பாடுகளை நீக்க ஆசிரியர் கீழ் குறிப்பிடப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. குழுக்களின் பரிமாணத்தை தீர்மானித்தல்
2. பயன்படுவிதமான குழுக்களை அமைத்தல்
3. மாணவர்களை குழுக்களாக இருத்துதல்
4. குழுவுக்கான ஒரு இலக்கை உருவாக்குதல்
5. தனிப்பட்டவர்களின் வகை கூறலை உறுதிப்படுத்துதல்
6. ஒத்துழைப்பதற்கு மாணவரை வழிப்படுத்துதல்
7. குழு அங்கத்தவர்களை மாற்றி அமைத்தல்

இவ்வாறு குழுவாக செயற்பாடுகளில் ஈடுபடும்போது மாணவரிடத்தில் பின்வரும் திறன்களும், ஆற்றல்களும் வெளிக்காட்டப்படுகின்றன.

1. சுய கட்டுப்பாடு
2. ஏனையோரின் கருத்துகளுக்கு செவிமடுத்தல்
3. ஏனையவருடன் ஒத்துழைப்புடன் கருமமாற்றல்
4. ஏனையவர்களுக்கு உதவுதல்
5. நேர முகாமைத்துவம்
6. தரமான வெளியீடுகளைப் பெறல்
7. நேர்மையாக நடந்துகொள்ளல்

இவ்வாறாக வினைத்திறன் மிக்க கற்றல் கற்பித்தல் செயலொழுங்கில் குழுக்களின் முக்கியத்துவத்தை நாம் காணக்கூடியதாக உள்ளது. எனவே இதிலிருந்து கற்றல் இலக்குகளை அடைவதற்கு குழுச்செயற்பாடு அவசியம் என்பது வெளிப்படையாகின்றது. இதில் செயற்பாட்டு முறையிலான பாடத்திட்டமிடலை ஆர்வத்துடன் ஆராய்தல், விளக்குதல், படிமுறைகளில் வேலைக்குழுக்களின் செயற்பாடுகளும், முன்வைப்புகளும் முக்கியமானவையாகக் காணப்படுகிறது. இனி நாம் கற்றல் செயற்பாடுகளையும், கற்றல் விசாரணைகளையும் ஒவ்வொரு E படிமுறையிலும் ஒழுங்காக திட்டமிடுவதனை நோக்குவோம்.

## 1. Engagement (ஈடுபடவைத்தல்)

5E மாதிரி முறையில் முதலாவது படிமுறை இதுவாகும். இம் முதலாவது படியானது தேடலுக்கான பொருத்தமான ஒரு பிரவேசத்தினை வழங்கும் செயலொழுங்காகும். மாணவரின் தேடலை மையமாகக் கொண்ட இந்த ஆசிரிய வகிபாகத்தில் Engagement அல்லது ஈடுபடுத்துதல் படிமுறையில் கற்றல் சூழல் ஒன்றினை இருவழித்தொடர்பாடல் மூலம் அல்லது உரையாடல்மூலம் ஒரு செயற்பாட்டுப் பிரவேசத்தினை முதலாம் படியில் ஏற்படுத்துதல் என்பதனையே ஈடுபடுத்துதல் படி கருதுகின்றது. இக்கட்டத்தில் மாணவர்களது கவனத்தை ஈர்ப்பதே பிரதான நோக்கமாகும். இவ் ஈடுபடுத்தல் செயற்பாடானது மாணவர்களின் நாட்டத்தை, விருப்பத்தினை குறித்த பாடப்பரப்பின் மீது அல்லது செய்கையின் மீது செலுத்தக்கூடிய வகையில் தூண்டுதல் வேண்டும். இதன்மூலம் மாணவர்கள் எதை அறிய முனைகின்றனரோ அல்லது செய்து முடிக்க விரும்புகின்றனரோ அதனை நிறைவேற்ற ஆசிரியர் உதவி புரிதல்வேண்டும். ஆசிரியரானவர் குறித்த பாடவிதானம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் இப்பாடவிதானத்தில் எண்ணக்கரு விளக்கம் வழங்குவதற்கு முன்னர் மாணவர்கள் கொண்டுள்ள அறிவினை மதிப்பீடு செய்தல்வேண்டும். மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்ற முடியும்.

1. செய்துகாட்டல்
2. வாசிப்பு
3. சிந்தனைக் கிளறல்களை மேற்கொள்ளல்
4. மாணவர்கள் வாசிக்கும்போது அதற்குரிய விளக்கங்களை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய வழிமுறைகள் மூலம் மாணவர்களின் ஆர்வம் தொடர்பான ஆர்வத்தை தூண்டுவதன் மூலம் மாணவர்களின் சிந்தனை ஆற்றலை மிகைப்படுத்துவதுடன், மாணவர்களிடையேயான குழுச்செயற்பாடுகளையும் மேம்படுத்தமுடியும். மாணவர்கள் கடந்த காலத்தில் பெற்ற அனுபவங்களை தற்போதைய விடயங்களுடன் தொடர்புபடுத்துவதன்மூலம் பொருத்தமான செயற்பாடுகளையும் அடையாளம் காணமுடியும். எவ்வாறு ஒவ்வொரு மாணவரையும் கற்கும் விடயத்துடன் தொடர்புபடுத்துவது என்பது ஒரு பிரச்சனைக்குரிய விடயமாக அமையலாம். இந்நிலையில் குழுக்களை ஒழுங்கமைத்து விளையாட்டு மூலமாகவோ அல்லது பாத்திரமேற்றுக் கற்றல் மூலமாகவோ பாடவிடயத்துடன் தொடர்புறுத்தி தொழிற்பட வைத்தல் இப்படியின் வெற்றிக்கு சாத்தியமாகின்றது.

## 2. Exploration (தேடல் அல்லது கண்டறிதல்)

5E மாதிரி அனுகுமுறையின் இரண்டாவது படிமுறை இதுவாகும். மாணவர்கள் அடைந்துள்ள அனுபவத்தைக்கொண்டு அவர்களது எண்ணக்கருக்களை மேலும் கண்டறிய முயற்சிப்பதனையே இது குறிக்கின்றது. மாணவர்கள் பாட அலகுடன் தொடர்புடைய செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடும் கட்டம் இதுவாகும். இங்கு மாணவர்கள் தாம் பெற்றுள்ள சிறிய விளக்கத்தினையும், அனுபவத்தினையும் கொண்டு பிரச்சினைகளுக்கான தீர்வினை அவர்கள் சொந்த வசனத்தில் முன்வைப்பார்கள். இப்படிமுறையின் நோக்கமானது மாணவர்களின் பொதுவான அனுபவங்களைப் பெற்று அதிலிருந்து தமது எண்ணக்கருவில் மேலதிக கருத்துக்களை உருவாக்குவதற்கான உதவியினைப் பெற்றுக்கொள்வதாகும். இங்கு ஆசிரியர் தேவையானதும், பொருத்தமானதுமான தர உள்ளீட்டுச் சாதனங்களை வழங்கி மாணவர்களை குழுநிலையில் தொழிற்படவைத்தல் அவசியமாகின்றது. இங்கு குழுச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் போது ஒவ்வொருவருடைய தனித்தனி அனுபவங்களையும் கூட்டாகப் பகிர்ந்துகொள்ளும் போது புத்துருவாக்கல் சிந்தனை உருவாகி அதன்மூலம் புதிய எண்ணக்கருக்களும், கருத்துக்களும் கண்டறியப்படுகின்றது. இங்கு பரிசோதனைகள், ஆராய்ச்சிகள், பிரச்சினையை முன்வைத்து தீர்வு காணுதல், மாதிரி ஒன்றை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் மாணவர்களிடையே கண்டறிதல் நுட்பத்தினை மேம்படுத்த முடியும். இதன்போது ஆசிரியரானவர் நேரடியாக ஈடுபடாது மாணவர்களுடன் இணைந்து அவர்களின் செயற்பாடுகளில் அவதானங்களைப்பெற்று வினாக்களை வினாவி கலந்துரையாடல் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண மாணவர்களை ஊக்கப்படுத்தல்வேண்டும். இப்படிமுறையின் குறிக்கப்பட்டநேர வரையறைக்குள் மாணவர்கள் சுயாதீனமாக இயங்கி தாம் கண்டறிந்தவற்றை அவதானங்களை பதிவுசெய்து உருவாக்கியதை காட்சிப்படுத்த தயாராகுவர். இக்கண்டறிதல் படிமுறையில் 21 ஆம் நூற்றாண்டு சிந்தனையான கற்றலுக்கு கற்றல் (Learn to Learn) இடம்பெறுகிறது. சுயகட்டுப்பாடு, மற்றவர்கள் கருத்திற்கு இடமளித்தல், சகித்துக்கொள்ளுதல், பொறுமை, ஒத்துழைப்பு, அர்ப்பணிப்பு, ஒருவருக்கொருவர் உதவிசெய்தல், நேர முகாமைத்துவம், நேர்மை போன்ற பண்புகள் இப்படி இரண்டில் உருவாகும்.

## 3. Explanation (விளக்கமளித்தல்)

5E மாதிரி கற்பித்தல் செயற்பாட்டுத் திட்டமிடலில் மூன்றாவது படிநிலை விளக்கமளித்தலாகும். குழுநிலை செயற்பட்டு இரண்டாம் கட்டத்தில் பெற்றுக்கொண்ட அனுபவங்களை எண்ணக்கருக்களை மற்றவர்களுக்கு விளக்குதல் அல்லது விபரிக்கும் கட்டமாகும். இப்படிநிலையில் தொடர்பாடல் திறன்கள் குழுக்களிடையில் கட்டியெழுப்பப்படும். மாணவர் குழுக்கள் தம்முடைய கண்டறிதல்களையும் பகுப்பாய்வுகளையும் மற்றைய குழுக்களுக்கு விரிவுரைமூலமோ, செயன்முறைமூலமோ, விளையாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை மூலமோ வாசிப்பு மற்றும் கணனி, வீடியோ மூலமான தகவல் முன்வைத்தல் மூலமோ விளக்கத்தினை வழங்குவர். இதன்போது ஏனைய குழுக்கள் அல்லது ஆசிரியர்களினால் கட்டமைக்கப்பட்ட வினாக்களினை முன்வைத்த விளக்கங்கள் பெறப்படுவதுடன் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படும். இதன்போது மாணவர்கள் புதிய வரைவிலக்கணங்களை முன்வைத்தல், திரட்டிய தகவல்களையும், தீர்வுத்திட்டங்களையும் முன்வைக்கிறார்கள். இதன்போது மாணவர்கள் சொந்த மொழிநடை வார்த்தைகளில் முன்வைப்பதற்கு ஆசிரியர் ஆர்வமூட்டுதல் வேண்டும். இங்கு வழமையான ஆசிரியர் குரலுக்குப் பதிலாக வித்தியாசமான மாணவர்கள் குழுக்களின் முன்வைப்புக்கள் இடம்பெறும்.

## 04. Elaboration (விரிவாக்கம் செய்தல்)

மூன்றாம் படிநிலையில் பெற்ற அனுபவம் அவதானம் பிரதிபலிப்பு மூலம் பாடப்புலம் சார்ந்த எண்ணக்கருக்களை விளங்கிக்கொண்ட மாணவர்கள் நான்காம் படிநிலையில் எண்ணக்கருக்களை மேலும் விரிவுபடுத்தி தொடர்புபடுத்திக்கொள்ளும் கட்டமாகும். அதாவது தாம் கற்றவற்றை நடைமுறை உலகுடன் பிரயோகித்துப் பார்க்கும் கட்டம் இதுவாகும் இங்கு மாணவர்கள் புதிய பரிசோதனை முறைகளை முன்வைத்தல், ஆதாரங்களுடன் விடயங்களை முன்வைத்தல், மேலும் மேலும் வினாக்களை வினாவுதல் போன்றவற்றின்மூலம் எண்ணக்கருக்கள் விரிவாக்கம் செய்யப்படுகின்றது. இங்கு ஆசிரியர்களின் பணியாக தொகுக்கப்பட்ட தகவல்களை புதிய வடிவத்தில் முன்வைத்தல், மீளவலியுறுத்தல் மேலும் தேடலுக்கான புதிய நுட்பங்களை இனங்காண உதவுதல் போன்றனவாகும். தாம் பெற்றிருக்கும் அறிவு, திறன் என்பவற்றை சகபாடிகளுடன் இணைந்து சரிபார்க்கவும் இக்கட்டம் உதவுகின்றது.

## 5. Evaluation (மதிப்பிடலும் / பரீட்சித்தலும்)

5E அணுகுமுறையிலான பாடத்திட்டமிடலில் ஐந்தாவது படிநிலையில் மதிப்பிடல் இடம்பெறும். மதிப்பீடானது மாணவர்கள் கற்றல் செயற்பாட்டினை தொடங்குவதிலிருந்து மேற்கொள்ளப்படும். வேறு வார்த்தையில் கூறுவதாயின் கற்றல் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது கணிப்பீடும் மதிப்பீடும் 5E மாதிரி கற்றல் கற்பித்தல் முறையில் இடம்பெற்றுவிடும். மதிப்பீடு என்பது மாணவன் தேர்ச்சி பெற்றமைக்கான சான்றுகளைச் சேகரிக்கும் செயற்பாடாக காணப்படுகிறது. மதிப்பீடானது ஈடுபடல், கண்டறிதல், விளக்குதல், விரிவுபடுத்தல்போன்ற அனைத்து படிமுறைகளிலும் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்மூலம் ஒவ்வொரு கட்டங்களிலும் மெருகூட்டுவதன்மூலம் மாணவர்களுடைய தேர்ச்சி மட்டத்தினை நிச்சயமாக உயர்த்திக் கொள்ள முடியும். மாணவர்கள் குறித்த அனுபவம், அவதானிப்பு, பிரதிபலிப்பு மூலம் பெற்ற எண்ணக்கருவாக்கத்தையும், அதனோடு தொடர்புடைய அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்ற அடிப்படையில் அவதானிப்புச் செய்தல் மூலம் மதிப்பிடல் வேண்டும்.

வினைத்திறன்மிக்க ஆசிரியரின் முன்கூட்டிய திட்டமிடல் நடவடிக்கையானது செயற்பாடு சார்ந்த 5E அணுகுமுறையிலான கற்றல் கற்பித்தல் கல்வி அனுட்டானங்களை வெற்றிகரமாக நிறைவுசெய்ய வழிகோலும். எனவே அனைத்து பாடவிதானங்களையும் 5E மாதிரி அணுகுமுறை மூலம் கற்பிக்கின்றபோது மாணவர்களும், ஆசிரியர்களும் களைப்பின்றி இலகுவாக கற்றல் கற்பித்தல் செயன்முறையை வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் மேற்கொள்ள முடியும்.

**திருமதி. வ. இராஜேந்திரன்**
**ஆசிரியை (விஞ்ஞானம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Guiding Stars

1. Parents are guiding stars. They are like becons which show the direction to the sailors our parens feed and educate us.
2. They guard and guide us They look after us with loving care. The sacrifice every thing for our wel fare. They provide us with all the facilities.
3. When we fall sick, they sit by our bed, and nurse us round the clock with love and kindness. Without proper meals or proper sleep. They worry about our illness until we come round.
4. When the children pass the exams and get jobs or promotions
5. Parents are one's most precious " wealth "Their sacrifices are unique and unparaleled. Their services are uncountable. They are unmatched and unequalled.
6. When a child loses its mother it loses good food. And when it loses its father it loses its education So, parents are very important for our good life. We are greatly indebed to our precious parents.
7. How are we going to repay them for their services and sacrifices. We should look after them with love and kindness.

We should give them all the freedom and facilities.
We should make them live happily and peacefully

**E. Tharshika**
**Gr 12C (2009)**

# Peace

As every one is aware, peace is very important for making developments in a country. It naturally makes a country prospers. Peace promotes a country in every aspect.

Peace leads to happiness, Love, harmony and tranquility. When we have a glance at the current situation of our Country, We can boldly say without any hesitation or any doubts that all the people of Sri Lanka love peace. They look forward to this and dream of it every day and night. Most of the people of our Country are very much fed up with the hardships and the ways of living. Infact, our people have gone through various kinds of hardships since 1983 The people are depressed as most of them had lost their kith and kin and also their valuable belongings. Hence they are depressed over their losses and now they are very badly in need of a permanent consolation that is a permanent solution to the ethnic problem. They eagerly look for a better, easier and a happier living. Infact it is a very reasonable request. Let us (there fore) pray for them. Our people feel and hope that peace is the most essential thing at prestent.

Not only in Srilanka but also in many other countries. peace is the most pressing need because wars are going on in those Countries too. The people suffer very much. They are unable to meet even their basic needs because of the on going wars. Making peace is not an easy thing. Infact it is a Herculean task. In our country, the war has been going on for more than two decades. However the Country hasn't found a permanent solution yet. As a result we are unable to breathe Freely. We hope we can do so and feel soon. Let us be



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Optimistic and look Forward to peace. A proverb says, "wars end in peace" Let us anticipate this.

All religions preech us the importance of peace, love, unity and harmony. They press and compel us to live peacefully and unitedly.

Let us pray For peace and we will Surely get it. May the Almighty Shower his blessings upon us and show us a bright future.

**by. S. Priya keethana**
**11B**

****************************************************************************

## What I owe to my School?

Next to one's home and parents, the school exerts a great influence on us, our thoughts, Words and deeds.

A School is the mirror of the community, that means a school becomes what it is by the interest the community takes in its progress.

Some of the good qualities like honesty, truthfulness, punctuality, sense of duty and loyalty, treating success and failures a like and other ideals imbined in life are the result of lessons learnt and practised in school. It is the school that perfects us and makes us to be aware of our rights and duties. It is the school that discovers the hidden talents in us. The various activities in school make us to become good writers, speakers, singers, actors and athletes. Our progress in studies and in passing examinations are the total effects of good schooling. School days are the best days in one's life

School provides us with everything that we need in our life. Our teachers teach us well and mould us to achieve success in life. Each student owes a heavy debt to the school and the teachers. So it is the duty of each student to do their best to bring fame to the school and the teachers.

**M. Tharshana**
**Gr. 12C**

## Take Time

Take time for work,
It is the price of succees.

Take time to think,
It is the source of power.

Take time to play,
It it the secret of Youth.

Take time to read,
It is the foundation of wisdom.

Take time to be friendly
It is the road to happiness

Take time to love,
It is the joy of life.

## A Smile

It's quite an easy thing to smile
It chases sad away
The day is always well worth while
Goodluck attends your way.

So greet with smiles
And things will all go right,
Your smile has travelled many a mile
And made some burdens light



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Student Centred Learning

Society as a whole is becoming more questioning and more challenging Participation is becoming the norm of our culture. As the first attempt. Schools will have to reflect these moves to have the developement which is at the cutting edge of change in education. Many changes have been implemented according to the new educational reforms to achieve this developement. Among those "Student centred learning" method is more effective in which learners and teachers learn together.

The term student Centred learning was invented by Carl Brogers.It creates an active learning in the classrooms and it describes exactly what we are hoping to achieve, that is a system of providing learning which has 'the student' at its hearts. And the most valuable aims of student Centred approach is that it can have a tremendously positive impact on self-esteem and mitigate the damage being done elsewhere. Every human being has the right to achieve his or her potential and that a student Centred approach in learning process helps to make this possible. students are encouraged to participate fully in and take responsibility for their own learning. Each individual is valued and trusted. And this student - Centred approach is most suitable to today's 5E teaching method.

In student - centred approach the ownership of learning is with the student. The teacher acts as a facilitator and a resource person. Much of the learning process is aimed at helping the learners to identify, Clarify and deal with their own concerns. when the students work in groups> the involvement and participation are necessary in the learning process. Approval does have its place in the student cantred classsrooms, but it is not related to the quality of academic work. In this learning method, the student will feel good and satisfied when he has assessed his own achievement. Students receive acknowledgement from the group including the teacher, for what is considered to be satisfaction together produce an interaction which enhances self - esteem.

On the other hand, if we look into the teachers role> she must have a degree of sensitivity and perception in order to clarify and identify student needs. She will need to be capable of divergent thinking and considerable resourcefulness to find the materials requested by students. All of her expertise, knowledge, attitudes, learning, and skill needed to facilitate interpersonal communication in this participatory Setting. But the most essential requirement is a willingness on the part of the teacher to share herself without imposing.

Student - Centred learning is confluent. It enhances knowledge and brings about changes in the learners. When the fundamental principles of a student Centred approach have been internalized by the teacher, each day in school can be fresh, new and unpredictable.

**Mrs. S. Ramendra**
**(Teacher)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்கள் சாரணிய குழுவினர்

குருளைச் சாரணர்கள்





வித்தியாலய
சாரண அணியினர்

தரம் - 05 புலமைப்பரிசில்
பரீட்சை 2004 - 2007
பொறுப்பாசிரியர்களுடன்
சித்தியடைந்த மாணவர்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் பேச்சு நிம்மதியான வாழ்வுக்கு வழிவகுக்கும்

* மெதுவாகப் பேசுங்கள், மென்மையான பேச்சு மேன்மை தரும்.
* தெளிவாகப் பேசுங்கள், உங்களுக்கு அது சிறப்பைத்தேடித்தரும்
* அன்பாகப் பேசுங்கள் அழியாப்புகழை அள்ளித்தரும்
* மரியாதை கொடுத்துப் பேசுங்கள், உங்களுக்கு மரியாதை கிடைக்கும்.
* அடுத்தவர் பேச வாய்பளித்துப் பேசுங்கள் உங்கள் மதிப்பு ஒரு படி உயரும்.
* பயமின்றிப் பேசுங்கள், தெளிவான சிந்தனை பிறக்கும், தன்னம்பிக்கை உறவுகொள்ளும்
* தயக்கமின்றிப்பேசுங்கள் சரளமாக வார்த்தைகள் வந்துவிழும், சாதனைகளைப் பெருக்கிவிடலாம்.
* தக்கவார்த்தைகளைத் தேர்வுசெய்து தரமாகப்பேசுங்கள், தரணிபுகழ் எய்திடலாம்.
* இனிமையாகப்பேசுங்கள் எல்லோருடைய மனிதிலும் இடம்பெறலாம்.
* கனிவாகப் பேசுங்கள் காரியத்தை சாதிக்கலாம்.
* நல்ல உச்சரிப்புடன் பேசுங்கள் புகழ் பெறலாம்.
* சிறிதேபேசுங்கள் சிறப்பாக அதனைப் பேசுங்கள்
* மற்றவர் பேசும்போது கவனமாகக் கேளுங்கள்.
* மௌனமாக இருங்கள் மகான் ஆகலாம்.

**ப. ஜசோ 12 கலை (2009)**

## Elders need to be Respected and cared for

The Elders are the stock of life experience of a Society. They Should be Cared for and treated with honour. The Children should be trained to respect the elders and feel proud of their vast experience. Without the elders, a society will not have a good wisdom to develop it. The experience and the wisdom of the elders make a society rich enough and improve in all aspects Science has enhanced people's lifespan. Those who are ageing must be happy. Happiness must be made available to them.

The elders need to spend their time more valuable by doing Meditation instead recollecting the past incidents which add to their woes by Causing more mental tension. And to transtorm their live more postively and useful to the cociety.

## Honoring Our Elder

There was time when daughters opted to stay home instead of working, and they took Care elders in the family. Social Changes, Such as female Children getting advanced education and staying for away from home for their work, have left elders uncared for. Those who went to foreign Countries as a result of the war think it is enough to provide the basic necessities to their parents, such as food, Clothing, Shelter and necessities, they want love, kindness and emotional Closeness from their Children. As Children fail to provide such support, elders develop several psychological problems.

## Elders Remember Bygone Days

'Those who are ageing Should be happy' They Should be treated in their ways, providing them food and medicines alone won't satisfy them. They Should be Cared for and they Should be treated as invaluable wealth of the family. Their experiences advices and Suggestions Should be taken into Consideration atleast for their Satisfaction. for this we should train Our Children to ward it.

**S. Sjitha**
**Gr 12C (2009)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியுமா?

தென்றல் இளங்காற்று என் மேனியை மெல்லத்தடவிச் சென்றது. எங்கோ தொலைவில் நாய் குரைக்கும் ஓசையும் கேட்டவண்ணம் இருந்தது. நிலாவின் ஒளியும் பிரபஞ்சத்தை ஆட்கொண்டிருந்தது. இவற்றினிடையே அமைதியான சூழல் என் மன அமைதியைத் தொலைத்தது. ஆகாயத்தை வீட்டினுள் இருந்து யன்னலினூடாக அண்ணாந்து பார்த்தேன். அடி மனதிலிருந்து ஆழ்ந்த பெருமூச்சு வெளிவந்தது. எதையோ தொலைத்துவிட்டோம் என்ற எண்ணம் சில காலமாய் என் மனதைக் குடைந்து கொண்டிருந்தது. இச்சமயம்.

"என் தேசத்தின் குரல் சற்றுத் தூரத்தில் அதோ செவியில் விழாதா சொந்த வீடுன்னை வாவென்று அழைக்குதடா தமிழா"

என்னும் பாடல் காற்றுடன் கலந்து வந்து என் செவியில் விழுந்தது. அவ்வளவுதான் புரிந்துகொண்டேன். நாம் எதையோ தொலைத்து விட்டோம் என்பதை.

வழமைபோல் நான் அன்று இரவு எட்டு மணி இருக்கும். படித்துக்கொண்டிருந்தேன். திடீரென பேரிரைச்சல் என்னவென்று எனக்கு எதுவும் புரியவில்லை. சில நிமிடங்களில் பாரிய வெடிச்சத்தம் கேட்டவண்ணம் இருந்தது. எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அம்மாவின் அருகில் சென்று அறையில் ஓர் இடத்தில் நாங்கள் அனைவரும் படுத்திருந்தோம். மின்சாரம் தடைப்பட்டது. இது எங்களுக்கு மேலும் பயத்தை ஏற்படுத்தியது. நடுக்கத்தோடு என்ன செய்வதென்று புரியாமல் இருந்தோம்.

மேலும் கடுமையான வெடிச்சத்தமும் எறிகுண்டுகளும் ("ஷெல்") வந்து வீட்டின் அருகே வீழ்ந்து வெடித்தன. "கிபீர்" தாக்குதலும் தொடங்கியது. குப்பிவிளக்கை நடுங்கி நடுங்கி ஏற்றினோம். கடுமையான காற்றினால் அது அணைந்துவிட்டது. ஒன்றுமே தெரியாத இருட்டு என்ன செய்வது? எங்கே போவது? ஏங்கித்தவித்தோம். ஓடுவதுதான் அப்போது அந்த நிலையில் மிகப் பொருத்தமாக இருந்தது. நாங்கள் அந்த இரவில் வீட்டை விட்டு வெளியேறினோம். உயிரைக் காப்பாற்றும் நோக்கில் ஓட்டமும் நடையுமாக அயலூரை அடைந்தோம். அங்கேதான் என்ன? நிற்க முடியுமா? "ஷெல்கள்" கடுமையாக வந்து வீழ்ந்த வண்ணம் இருந்தன.

வீதியில் இருமருங்கிலும் நீண்டு வளர்ந்திருந்த மரங்களில் "ஷெல்" வந்து வீழ்ந்து வெடித்ததில் மரங்கள் வீழ்ந்து வீதியில் கிடந்தன. மக்களும் அதில் உயிரிழந்து கிடந்தனர். அவர்களுடன் ஆடு மாடுகளும் கூட யாருக்காய் யார் அழுவது? துயரம் நெஞ்சை அடைக்க வைத்தது. இறந்தவர்களுள் எனது நண்பி திவ்வியாவும் ஒருவராக இருந்தாள். இறந்து கிடந்த அவர்களை எடுத்து அடக்கம் செய்வதா? நாம் ஓடித் தப்புவதா? இருந்தும் நடப்பது நடக்கட்டும் என்று இறைவனை மனதிலே இருத்திக் கொண்டு திவ்வியாவின் உடலும் மற்றும் சிலரின் உடல்களும் எனது அப்பாவாலும் மற்றும் சிலராலும் எடுத்துவரப்பட்டு புதைக்கப்பட்டன.

எத்தனை உயிர்களை இழந்துவிட்டோம். ஒன்றா? இரண்டா? பலிபோனது எத்தனை உயிர்கள்! நாம் அன்பாக வளர்த்த நாய்க்குட்டி, ஆசையோடு வளர்த்த அருமையான பசுக்கன்றுகள் அன்போடு எமை நேசித்த மனித உயிர்கள் எங்கே? பசுமை பூத்துக்கிடந்த அந்த அழகான கிராமம் எங்கும் வயல்வெளிகள். நெல் விதைக்கும் அந்தப் பூமியில் "ஷெல்கள்" விதைக்கப்பட்டன. அவ்வாறு இருந்த இடத்தில் எங்களால் எப்படி நிற்கமுடியும்? நடுங்கும் நெஞ்சுடன் நாங்கள் ஓடிக் கொண்டிருக்கின்றோம் அன்று இரவிரவாக ஓடினோம். ஓய முடியுமா? இல்லை பகலும் ஓடினோம். கடைசியில் மட்டக்களப்பு கதிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியை அடைந்தோம். அங்கே ஒரு இரவு தங்கினோம். அடுத்தநாள் அங்கேயும் அதே நிலை ஏற்பட்டது. ஒரே முறையில் 52 உயிர்கள் கொல்லப்பட்டன. எங்களால் தாங்கமுடியவில்லை ஏன் எங்களுக்கு இந்த நிலை. இதயம் சுக்குநூறாகின்றது.

இவ்வாறு பல இழப்புகளைச் சந்தித்த பின்பும் அங்கு இருக்காமல் காட்டுவழியாக நதிகளும், குளங்களும், பெருங்காடுகளும் கடந்து வந்து வாழைச்சேனையை இரண்டு நாட்களின் பின் வந்தடைந்தோம். அங்கும் எங்கள் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் அங்கிருந்து திருக்கோணமலையை வந்தடைந்தோம். இங்கு இரவல் வீட்டில் நாம் வாழ்கின்றோம். நாம் வாழ்ந்த பூமி, நம் சொந்த வீடு, நான் அன்போடு வளர்த்த அந்தப் பசுக்கன்று, நாய்க்குட்டி, என் ஆருயிர் நண்பி, எங்களுடன் உறவாடிய அந்த உறவினர்கள் இனி எங்கே காண்பது? அன்று கதிரவெளியில் 52 பேர் இறந்தபோது கேட்ட "அம்புலன்ஸ்" சத்தம் இன்றும் என் காதில் ஒலித்த வண்ணமே உள்ளது.

இவ்வாறு என் எண்ணக் கருக்கள் படர்ந்து கொண்டிருக்கையில் இரு கண்ணீர்த்துளிகள் எனக்கு முன்பிருந்த புத்தகத்தின் மீது பட்டுத்தெறித்தன. அதன் பின்புதான் ஒரு மணிநேரம் கழிந்துவிட்டதை உணர்ந்தேன். என் மனதில் முள்ளாய் குத்தியது எத்தனையோ மணித்தியாலங்கள் என் வாழ்வில் வரலாம் எனினும் மீண்டும் என் தேசத்திற்கு செல்ல ஒரு காலம் வருமா? எமக்கு இனி ஒரு விடிவு கிடைக்குமா? இனிமேல் என்றாவது ஒருநாள் எங்கள் வீட்டில் எனக்கு ஒருபொழுதேனும் விடியுமா?

**சு. அஜிந்தா**
**தரம் - 11B**
**(இது கதையல்ல என்னுடைய வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவம்)**

## பூங்கா

மலர்களின் வசிப்பிடம்
பல நூற்றுக்கணக்கான
மலர்களின் சரணாலயம்
மலர் மொட்டில் தேனைப் புசித்து
உற்சாகம் பெருகிட உலாவரும்
தேனீக்களின் தாய் வீடு......

உள்ளத்தின் துன்பங்களைத் துடைத்து
விட்டு.... மகிழ்வெனும் மாமருந்தினை
பரிவோடு தடவித் தரும்
பாசமிகு அன்னையே!
இப் பூங்கா................

**சு. பாத்திமா அப்றா**
**தரம் - 02**

**வளர்க்க வேண்டிய பூ**

நட்பு
சிரிப்பு
வனப்பு
விருப்பு
குறிப்பு

**தவிர்க்க வேண்டிய பூ**

வெறுப்பு
சலிப்பு
முறைப்பு
எடுப்பு
நடிப்பு

**சுவைக்க வேண்டிய பூ**

இனிப்பு
புளிப்பு
உறைப்பு
கசப்பு
உவப்பு

**உ. செந்தூரி 08 'A'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன்மை நிலை வகுப்புக்களுக்கான சில பாட இணைச்செயற்பாடுகள் [ஆசிரியர்களுக்கான திட்டமிடல்]

**செயற்பாடு இல்லாத கல்வியும், கற்பித்தல் முறையும் செம்மை பெறுவதில்லை.** எனவே கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் இணைப்பாட விதான செயற்பாடுகள் கட்டாயம் இடம்பெற வேண்டியது அவசியமானது காலத்தின் தேவையாகும்.

மனிதனை மனிதனாக வாழவைப்பதே கல்வி. அந்தக் கல்வியை பயனுறுதி வாய்ந்ததாக உருவாக்க ஆரம்பக்கல்வியே அடித்தளமாகிறது. பிள்ளைகள் எதிர்கால சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு அவர்களைச் சிறந்த ஆளுமைப்பண்புகள் உடையவர்களாக உருவாக்குதல் அவசியமாகும். அவ்வகையில் கற்றல், கற்பித்தற் செயற்பாட்டில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் இந்நோக்கங்களை நிறைவு செய்வதற்குப் பெருந்துணை புரிகின்றன.

சொல்லுதல் செய்து காட்டுதல் என்பதைவிட செய்து பார்த்தல், அதிக தெளிவைப் பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்தும் பண்பை இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் உருவாக்குகின்றன. ஆரம்பவகுப்பு மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு இணை அனுசரணை வழங்கக்கூடிய ஒரு மீத்திறன் செயற்பாடாக, மெல்லக்கற்போரையும், மாணவர்களையும் இணைத்து செயற்பட வைக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாகத் துணைபுரிகின்றது.

ஆரம்பக்கல்வி பாடவிதானத்தில் அடங்கியுள்ள பிரதான நான்கு பாடப்பரப்புக்களான மொழித்திறன்கள், கணிதச்செயற்பாடுகள், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், சமயம் போன்றவற்றுடன் இணைந்த ஒரு செயற்பாடாக, ஆரம்ப வகுப்பு மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு இணை அனுசரணை வழங்கக்கூடிய ஒரு செயற்பாடாக, நோக்கப்பட வேண்டிய ஒன்றாக இருப்பதை நாம் சிந்திக்க வேண்டும். 100 இற்கு மேற்பட்ட பாட இணைச்செயற்பாடுகள் இருக்கிறது. முக்கியமான சில செயற்பாடுகள் தேவைகளுக்கேற்ப எல்லாப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தக்கூடியதுமான பல செயற்பாடுகள் பின்வருமாறு தரப்படுத்தப்பட்டிருக்கிறது. அவையாவன,

01. உடற்பயிற்சி கண்காட்சி
02. பாடசாலைச் சூழலை அவதானித்து அலங்கரித்தல்
03. சமூகப்பணியில் சிரமதானம், மன்றங்கள் நடத்துதல்
04. ஆலயங்களைத் தரிசித்தல், வகுப்பறைக் கண்காட்சி
05. மூலிகைத்தோட்டம் அமைத்தல், இசையரங்கு
06. வினாவிடைப்போட்டிகள், பொதுஅறிவுப்போட்டி
07. சுவர்ப்பத்திரிகை தயாரித்தல், சந்தை ஒன்றை அமைத்தல்
08. கலைவிழா, ஆக்கத்திறன் வெளிப்பாடு விவாதமேடை
09. கடதாசி ஆக்கங்கள், பொம்மலாட்டம், சிறுவர் தினவிழா
10. கண்காட்சி, சிற்றுண்டி தயாரித்தல், பெற்றோர் தினவிழா

இவ்வாறான பல செயற்பாடுகளை வளப்படுத்தும் வகையில் வகுப்பறை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படல்வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும் தத்தமது பாடசாலைச் சூழலுக்கு ஏற்றவிதமாக இங்கு கல்வியிலும் மாணவர்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு, திட்டமிட்ட ஒரு கருத்துள்ள செயற்பாடாக இதனை முன்வைக்க வேண்டும். இத்தகைய செயற்பாடுகளே மாணவர்களின் அறிவுத்தேடல், செயலாக்கம், சிந்தனை விருத்தி என்பவற்றுக்கு அடித்தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**திருமதி. இ. இராஜேஸ்வரன்**
**(ஆசிரியை – ஆரம்பக் கல்வி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வளர்ச்சியில் ஆசிரியர் சம்பளத்தின் முக்கியத்துவம்

எந்தவொரு சமூகத்தின் வளர்ச்சியிலும் அச்சமூகத்தின் கல்வி அறிவானது முக்கிய இடம் வகிக்கின்றது என்றால் அது மிகையாகாது இதை உணர்ந்தே ஒவ்வொரு நாட்டின் அரசும் கல்வித் துறைக்கு முக்கியம் அளித்து வருகின்றது.

இவ்வகையில் இலங்கையும் கல்வித்துறை வளர்ச்சிக்கு அளப்பரிய சேவைகளை வழங்கி வருகிறது. இதன் அடிப்படையில் தான் நாட்டின் கல்வித் துறையானது

கல்வி அமைச்சும் அதன் நிர்வாகிகளும்.
↓
மாகாண கல்வி அமைச்சும் அதன் நிர்வாகிகளும்.
↓
வலயக்கல்வி அலுவலகமும் நிர்வாகிகளும்
↓
அதிபர்
↓
ஆசிரியர்கள்

என கல்வி சமூகத்தினை படிமுறைப்படுத்தி நாட்டின் சகலருக்கும் கல்வி என்ற நோக்கில் கல்வியை இலவசமாக மக்களிற்கு வழங்கி வருகின்றது. இவ்வாறு வழங்கப்படுகின்ற கல்வியைப் பெறும் பயனாளிகளாக எமது இலக்கினை அடையும் உற்பத்திப் பொருட்களாக காணப்படுபவர்கள், வகுப்பறைகளில் இருக்கும் மாணவர்களேயாகும். இம்மாணவர்களின் செயற்பாட்டுடன் நேரடியாக தொடர்புடையவர்களாக திகழ்பவர்கள் ஆசிரியர்களே. இவர்களை செயற்படதூண்டும் அல்லது ஊக்குவிக்கும் அல்லது வழிப்படுத்தும் குழுவினராகவே அதன் மேல்படியிலிருந்து அமைகின்ற (அதிபர் தொடக்கம் கல்வி அமைச்சர் வரை) அனைத்து பணி நிலைக்குரியவர்களும் அவர்களின் ஆளணியினரும் அமைகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே இங்கு ஆசிரியரின் செயற்பாடானது வினைத்திறன் உடையதாக அமைகின்றபோது மட்டுமே விளைதிறன் சிறப்பானதாக அமைய முடியும்.

இவ்வாறு ஒரு ஆசிரியரின் வினைத்திறன்மிக்க செயற்பாடானது அவ் ஆசிரியரின் அறிவு அர்ப்பணிப்பு, சுயமாக செயற்படல், அனுபவம் என்பவற்றில் தங்கியுள்ளது. இதில் இலங்கையில் குறிப்பிட்ட அறிவு மட்டத்தை உடையவர்களிற்கே ஆசிரியர் தொழில் வழங்கப்படுகின்றது என்பது உண்மையாக அமைந்த போதும், அவ்வாறு பதவியைப் பெற்ற ஒரு ஆசிரியர் சிறப்புத் தேர்ச்சியைப் பெற்று வினைத்திறன் உடைய ஆசிரியராக மாற்றமடைகின்ற போது தொடர்ச்சியாக ஆசிரியராக இருந்து மாணவருக்கு கல்வியை வழங்குவதில் நாட்டம் குறைவு ஏற்படுகின்றது. அதற்குக் காரணமாக அமைவது ஆசிரியர் சம்பளத் திட்டமே என்று உறுதியாக கூற முடியும்.

அதாவது ஆசிரியராக இருந்து முழுச் சேவையை ஆற்ற விரும்பி சேவை செய்கின்ற ஆசிரியருக்கும் அவர் ஆசிரியர் சேவையை விட அதிபர் சேவை அல்லது அதற்க்கடுத்த படியான சேவைக்கு செல்கின்ற போது அவருக்கான வருமானம் அதிகரிப்பு ஏற்படுகின்றது. அதே போன்று வளங்களிலும் அதிகரிப்பு ஏற்படுகின்றது இதனால் இவர்கள் சேவை மூப்புப் பெற்று கற்பித்தலில் சிறப்புத் தேர்ச்சி பெறுகின்ற போது இவர்கள் மாணவர்களுக்கு கற்பித்தலில் காட்டும் ஈடுபாட்டினை விட தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்வதற்கான பதவி உயர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு தம்மை தயார்படுத்துவதிலேயே கண்ணும் கருத்தும் உடையவர்களாக செயற்பட்டு அவற்றை அடைந்தும் வருகின்றனர். இதற்கு ஏதுவாகவே எமது கல்வி ஆளணியினரின் பதவி உயர்வும் சம்பள அளவுத்திட்டமும் அமைந்திருப்பதே இதற்கு முக்கிய காரணமாக அமைந்ததே தவிர ஆசிரியரின் மனநிலை என கூறிவிட முடியாது.

ஆசிரியர் சம்பளத்திட்டத்தில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றமானது வினைத்திறன் மிக்க ஆளணியினரை பயனாளிகளாக மாணவருடன் நேரடியாக தொடர்பு கொண்டு சிறந்த விளைதிறனை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஆளணியினரை நகரச் செய்யக் கூடியவகையில் அமைகின்ற போது மட்டுமே சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரிய ஆளணியினரின் வினைத்திறன் மிக்க கற்பித்தலை மாணவர்கள் பெறுவதற்கு வழி அமைக்கும் என்பதோடு வினைத்திறன் மிக்க தொழிலாளர்கள் வகுப்பறையை நோக்கி (ஆசிரியர் பதவியை நோக்கி) நகர்த்தப்பட்டு எமது கல்வியின் இலக்கினை சிறப்பானதாக அடைய வழி அமைக்கும்.

**வ. தெய்வேந்திரராசா**
**(ஆசிரியர்)**

## பாபாவின் அருள் மொழிகள்

01. கோபம் ஒருவனது எதிரி. அமைதிதான் காக்கும் கேடயம். இரக்கம் என்பது உண்மையான உறவினன். மகிழ்ச்சி என்பது சுவர்க்கமின்றி வேறில்லை. தீயகுணங்களை தன்னுடன் கொண்டு வருவதால் தெய்வீகத்தை அனுபவிக்கும் வாய்ப்பு நமக்கு இல்லாமல் போய்விடும்.

02. நமக்கு யார் தீங்கிளைக்கிறார்களோ அதை மறக்க வேண்டும். நாம் யாருக்கு நன்மை செய்திருந்தாலும் அதனையும் கூட மறந்துவிட வேண்டும். பிறர் நமக்குச் செய்த நன்மைகளை நினைவில் கொள்ள வேண்டும்.

03. ஒருவன் தெய்வீகம் அடைய வேண்டுமானால் முதலில் அவனது தவறுகளை மறப்பதை நிறுத்த வேண்டும். அடுத்தவர் தவறை மிகைப்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும். அடுத்தவரிடம் இருக்கும் தவறைத் தேடியலைதல் தவறு. அதற்குப்பதிலாக உன்னிடம் இருக்கும் சிறிய தவறுகளைத் தேடிக்கண்டுபிடி. அடுத்தவரிடம் இருக்கும் குறைகள் எவ்வளவுதான் பெரிதாக இருந்தாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்காதே.

When there is faith there is love
where there is love there is place
where there is peace there is God
and where there is God there is bliss

**-Baba-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாண்ட் வாத்தியக் குழுவினர்



வலைபந்தாட்டக் குழுவினர்



வித்தியாலய
துடுப்பாட்டக் குழுவினர்



பாடசாலை
உதைபந்தாட்டக் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிகள் சட்டம்
# கூட்டிணைக்கப்பட்ட கம்பனி

கூட்டிணைக்கப்பட்ட கம்பனி சார்பாக நடைமுறையில் அமுல் படுத்தப்படுவது 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டமாகும். 2007.03.03 ம் திகதி அமுல்படுத்தப்பட்ட இச்சட்டமானது இலங்கை கம்பனிகள் சட்டமாகியுள்ளது.

கம்பனி அமைப்பின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று கூட்டிணைப்புக் கம்பனியாக கருதப்படும். கம்பனி சட்டத்தின் கீழ் கம்பனியொன்று அது பதிவு செய்த பெயரின் கீழ் சட்டத்தின் தனித்துவமுடைய ஒன்றாகும்.

**கம்பனி வகைகள்**

கம்பனி சட்டத்தின் 3ம் இ(1) வது பந்தியின் படி கம்பனி 3 வகைப்படும்.

i) வரையறுக்கப்பட்ட கம்பனி [ Limited. company]

ii) வரையறுக்கப்படாத கமபனி [ Unlimited company]

iii)உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி [ Guarantes]

**கூட்டிணைப்பு கம்பனி**

- வரையறுக்கப்படாத கம்பனி
- வரையறுக்கப்பட்ட கம்பனி (பங்குகளால் )
  - வரையறுக்கப்பட்ட தனிக் கம்பனி
  - வரையறுக்கப்பட்ட கரை கடந்த கம்பனி
  - வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி
    - பட்டியல் படுத்தப்பட்ட கம்பனி
    - பட்டியல்படுத்தப்படாத கம்பனி
- உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி

## வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி மற்றும் தனியார் கம்பனிகளுக்கு இடையிலான வேறுபாடு

| தனிக் கம்பனி | பொதுக் கம்பனி |
|---|---|
| 01. குறைந்த பங்குதாரர் 01, பங்கு தாரர் தொழிலாளராகவுள்ள or தொழிலாளராக இருந்த நபர்கள் தவிர்ந்த அதிக பட்சம் 50 பேர் | குறைந்தது – இருவர் கூடியது வரையறையற்றது. |
| 02. பங்குகள், தொகுதி கடன்களை பொது மக்களிற்கு வழங்கி மூலதனம் திரட்ட முடியாது. | அவ்வாறு செய்யமுடியும் |
| 03. குறைந்த இயக்குனர் – 01 | குறைந்த இயக்குனர் – 02 |
| 04. பங்குதாரர்களது எழுத்துமூல ஒப்பந்தப்படி பல்வேறு விடயங்களை நிறைவேற்றலாம். | அவ்வாறான நிலைமையும் முடியும். |
| 05. கணக்கு அறிக்கைகளை கம்பனி பதிவாளரிற்கு ஒப்படைத்தல் அவசியமில்லை. | அவசியமானது. |
| 06. கடன் செலுத்தல் பற்றிய ஆய்வின்றியே பங்குதாரர்களிற்கு மத்தியில் பகிரலாம். | பங்குதாரர் மீது பகிர்ந்தளிக்கும் எல்லா சமயங்களிலும் கடன் தீர்க்கும் ஆற்றலை பற்றிய ஆய்வுபூரணப்படுத்தப்பட்டிருக்கவேண்டும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1982ம் ஆண்டு கம்பனிச் சட்டத்திற்கும் 2007ம் ஆண்டு கம்பனி சட்டத்திற்கும்

# இடையிலான வேறுபாடுகள்

| 1982 ம் ஆண்டு கம்பனி சட்டம் | 2007ம் ஆண்டு கம்பனி சட்டம் |
|---|---|
| 01 . மக்கள் கம்பனி சார்பில் விதிகள் உள்ளன. | 01. மக்கள் கம்பனிசார்பில் விதிகள் இல்லை. அதன் படி மக்கள் கம்பனி என்ற பெயரில் கம்பனி ஒன்று கிடையாது. |
| 02. வரையறுத்த பொதுக் கம்பனிகளிற்கு (பொது) எனும் சொல் இட அவசியம் இல்லை. அதனால் கம்பனியின் பெயரின் மூலம் கம்பனிகளை இனம் காணமுடியாது. | 02. பட்டியல் இட்ட கம்பனிகளால் கம்பனி என்ற சொல்லுக்கு முன் பொது என்ற சொல் இடல் வேண்டும். அதன் படி அதனை பட்டியலிட்ட கம்பனியென இனம் காணலாம். |
| 03. கூட்டிணைப்பதற்கு விண்ணப்பிக்கும் போது புறவிதி பத்திரம் மற்றும் கூட்டிணைப்பு அமைப்பு அகவிதி என வேறு வேறாக சமர்பித்தல் வேண்டும். | 03. அந்த இரண்டிற்கும் பதிலாக கூட்டிணைப்பு அமைப்பு அக விதியினை சமர்பித்தல் போதும் |
| 04. கம்பனியின் கூட்டிணைப்பு சான்றிதழில் கம்பனியின் இலக்கு உறுதியாக குறிப்பிடப் படல் வேண்டும் | 04. அவ்வாறு தேவை இல்லை. விருப்பப்படி நடை முறைப் படுத்தலாம். |
| 05. கம்பனியை பதிவு செய்ய முன்னர் கம்பனிபதிவாளரால் கம்பனியன் பெயரிற்கு விசேட அனுமதி பெறல் வேண்டும். | 05. கம்பனி பெயரை வேறாக அனுமதித்து கொள்ள தேவை இல்லை. என்பதோடு கம்பனியால் அதன் பெயர் வேறு கம்பனி ஒன்றின் பெயரிற்கு ஒத்ததாக இல்லையென வெளியீடு ஒன்று முன் வைக்க வேண்டும். |
| 06. வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் இழிவளவு பங்குதாரர் எண்ணிக்கை:- 02 பொது கம்பனி ஒன்றின் இழிவளவு பங்குதாரர் எண்ணிக்கை - 07 | 06. வரையறுக்கப்பட்ட தனியார், பொது இரண்டிற்கும் இழிவளவு பங்குதாரர் எண்ணிக்கை - 02 அரச உடமை யாளர்களுக்கு - 01 அவர் திறை சேரி செயலாளராக இருத்தல் வேண்டும். |
| 07. தனியார் அல்லாத கம்பனி ஒன்று தனியார் கம்பனியாக மாற்ற முடியாது. | 07. தனிக் கம்பனி அல்லாத கம்பனிகளை தேவைப்படின் தனிக் கம்பனியாக மாறுவதற்கு விதிகள் உண்டு |
| 08. கம்பனியின் குழு மூலதனமும் பதிவு செய்யப் பட்டிருப்பதோடு அதற்கு இணங்க அனுமதித்த மூலதனம் ஒன்று உள்ளது. | 08. அவ்வாறு இல்லை. |
| 09. பங்கொன்றிற்கு முகப் பெறுமதி அவசியம் | 09. முகப் பெறுமதி அவசியம் இல்லை. |
| 10. பங்கு வட்டத்துடன் or பங்கு கழிவுடன் பங்குகளை வழங்க முடியும். | 10. முகப் பெறுமதியில்லாததால் வட்டம் or கழிவு இல்லை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2007ம் ஆண்டு கம்பனிகள் சட்டத்தின் முக்கியத்துவம்

01. தற்போது கம்பனி சட்டப்படி முன்வைக்கப்படவேண்டிய கூட்டிணைப்பு சான்றிதழ் or யாப்பு என்பன சம்பந்தமாக கம்பனி அமைப்பு அகவிதிகள் மட்டும். முன் வைக்க முடியும்.

02. அமைப்பு அகவிதிகளிற்கு இலக்குகள் உள்ளடக்குதல் or சட்ட ரீதியான இலக்குகளை நடைமுறைப்படுத்த முடியுமென பங்குபற்றுனருக்கு தெரிவு செய்யும் விருப்பொன்றிற்கு இடமளித்தல்.

03. தனியான நபரொருவற்கு கம்பனியை ஆரம்பிக்க வாய்ப்பு கிடைத்தமை.

04. தனிக்கம்பனியில்லாத கம்பனிக்கு தனிக் கம்பனியாக மாறக் கூடிய தாக இருத்தல்.

05. தனிக் கம்பனிகள் தீர்மானம் எடுக்கும் விடயங்கள் இலகுவாக்கப்பட்டமை

06. கம்பனிபதிவாளர் வேண்டுகோள் விடுத்தால் மட்டுமே தனிக்கம்பனிகள் கணக்கறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. செலுத்திய பங்கு மூலதனத்தை குறைப்பது தொடர்பாக நீதிமன்ற உத்தரவு அவசியமில்லை.

08. குறைந்தளவு பங்குகளை கொண்டோரின் உரிமைகளை பாதுகாப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

09. கணக்குகளை சமர்ப்பிப்பது சம்பந்தமான காலம் 6 மாதகாலமாக குறைக்கப்பட்டுள்ளது.

10. கணக்கு பரிசோதகர்கள் பதவியில் இருந்து ஓய்வு பெற்றாலோ or விலகியிருந்தாலோ அவ்வாறான சந்தர்ப்பத்தில் பங்குதாரர்கள் or கடன் வழங்குனர் தெரிந்து இருக்க வேண்டுமென்ற விடயங்கள் சம்பந்தமாக அவற்றை வெளியிடுவதற்கான விதிமுறைகள் உண்டு.

11. 2 கம்பனிகள் நீதி மன்ற உத்தரவின்றியே ஒன்றிணைக்கப்படலாம்.

12. கம்பனி ஒன்றில் இயக்குனர்கள் கருமங்கள், உரிமைகள் என்பன தெளிவாக வெளிக்காட்டப்படல்.

13. மக்கள் கம்பனி இல்லாதொழித்தலும் அதற்கு பதிலாக பொது கம்பனிகள் சட்டரீதியான தன்மைகளை பிரதிநிதிப்படுத்துதல்.

14. 1974ம் ஆண்டு 19ம் ஆண்டு இலக்க கம்பனிச் சட்டம், 1975ம் ஆண்டு 09 இலக்க வெளிநாட்டு கம்பனிச் சட்டம் என்பவற்றை நீக்கியமை.

சு.லக்சுமி **13 Com (2008)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலத்திரனியல் வர்த்தகம் / இலத்திரனியல் வழி வணிகம்

இலத்திரனியல் வர்த்தகம் 1970 ஆரம்பத்தில் ஆரம்பமானது. முதலில் இலத்திரனியல் முறையில் நிதி ஒப்படை (Electronic Transfer of Funds E.T.F) இலத்திரனியல் முறையில் தகவல் பரிமாற்றம் (Electronic data Transfer) என்பன ஆரம்பிக்கப்பட்டன. 1990 ஆரம்பத்தில் இன்டர் நெட் வர்த்தகமையமான போது இலத்திரனியல் வர்த்தகம் (EC) விரைவாகப் பரவியது. 1996ல் அமெரிக்க டொலர் மில்லியன் 518 அளவிலான வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் இன்டநெட் ஊடாக நடைபெற்றன. 1997ல் இது 10 மில்லியனையும் மிஞ்சியது. 2008 ஆகும் போது இன்டர் நெட்டைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர் தொகை 750 மில்லியன் வரை அதிகரிக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. அத்தோடு சந்தையில் 50% இன்டர் நெட்டுடன் தொடர்புபடும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. இலத்திரனியல் வர்த்தகத்தில் ஆவணங்களின்றி வணிகத் தகவல்கள் பரிமாறப்படுகின்றன.

இதற்காக EDI - Electronic Data Internet change
E-Mail - Electronic Mail
Computer Bulletine Boards
Fax
Eft - Electornic founds transfer என்பன பயன்படுத்தப்படுகின்றன.

### இலத்திரனியல் வணிகம் பின்வருமாறு வகைப்படுத்தப்படலாம்

01. வணிகமொன்றிலிருந்து வணிகத்திற்கு (Business to Business)
02. வணிகத்திலிருந்து வாடிக்கையாளருக்கு (Business to customer)
03. வாடிக்கையாளரிடமிருந்து வாடிக்கையாளருக்கு (Customer to customer)

இணையத்தின் ஊடாக அல்லது தகவல் தொழிநுட்பத்தின் வலை பின்னலின் ஊடாக நடைபெறும் வணிகம் இலத்திரனியல் வணிகம் எனப்படும்.

### இதன் பண்புகள்

01. இணையத்தின் மூலம் விலைக்கூற்று வெளியிடப்படும்.
02. இணையத்தின் மூலம் கட்டளை அனுப்பி வைக்கப்படும்
03. இணையத்தின் மூலம் பொருளை பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.
04. கடன் அட்டை மூலம் பணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.
05. பெரும்பாலும் இருப்புக்கள் களஞ்சியப்படுத்தப்படுவதில்லை.
06. இடைத் தரகர்கள் அவசியமற்ற வர்த்தகமாக இருத்தல்.
07. ஆவணப் பயன்பாடுகள் குறைவு
08. சந்தை அண்மித்ததாக இருத்தல்.

### இலத்திரன் வழி வணிகத்தின் நன்மைகள்

01. வியாபார நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளல்
02. செலவுகளை இழிவு படுத்தலாம்.
03. பயன்பாட்டில் உள்ள வியாபார ஆவணங்களின் அளவு குறைவடைதல்.
04. நடுவர்களின் எண்ணிக்கை குறைவு
05. சந்தை அண்மித்ததாக இருத்தல்.
06. மேலதிக இருப்பு வைக்க வேண்டிய தேவை குறைவடைதல்
07. வாடிக்கையாளருக்கான சேவை மேம்பாடடைதல்.
08. மேலதிக செலவு குறைவடைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாடிக்கையாளருக்கு கிடைக்கும் நன்மைகள்

01. 24 மணி நேர சேவை கிடைத்தல்
02. தெரிவுக்கு அதிக சந்தர்ப்பம் கிடைத்தல்
03. குறைந்த செலவில் பொருள் வழங்கல்
04. மிக விரைவாக பெற முடிதல்
05. வாடிக்கையாளருக்கு அவசியமான தகவல்கள் மிக விரைவாக கிடைத்தல்.

### சமூகத்திற்கு கிடைக்கும் நன்மைகள்

01. பெரும்பாலானவர்களுக்கு வீட்டிலிருந்தவாறே தொழில்புரியச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.
02. வாழ்க்கைத்தரம் உயர்வடைகிறது.
03. கிராமியப் பிரதேச / தூரப்பிரதேசங்களுக்கு பொருள் நுகர்வுக்கான வாய்ப்புத் தோன்றுகிறது.

### இலத்திரனியல் வணிகத்தின் வரையறைகள்

01. பாதுகாப்பு குறைவு
02. இலத்திரனியல் தொடர்பாடல் வலையமைப்பு போதுமானதல்ல
03. மென்பானங்கள் மிக விரைவாக மாற்றமடைகின்றன. விருத்தியுமடைகின்றன.
04. இதனால் இன்டர்நெட்டும் இலத்திரனியல் வர்த்தகமும் மெனபாகத் தொடர்பு கொள்ளல் கடினமாகும்.
05. இலத்திரனியல் வர்த்தக மென்பாகம் எல்லா இடத்திற்கும் எல்லா உபகரணங்களுக்கும் பொதுவானவையல்ல.
06. விரயம் தொடர்பான பிரச்சினை. 07. நம்பிக்கைத் தன்மை குறைவு
08. சட்டப்பிரச்சினை
09. இன்டர் நெட் வசதியைப் பெறுதல் செலவு அதிகமான விடயமாகும்.
10. மொழிப்பிரச்சினை

### இலத்திரனியல் வணிகத்தின் செல்வாக்கு

01. நேரடி விற்பனை அதிகமாகும்.
02. பொருள் மேம்பாட்டுப் பணிகளை இலகுவாக்குதல்
03. புதிய விற்பனை வழிகள் தோன்றும்
04. நேர் சேமிப்பு
05. சுழற்சியின் காலம் குறைவு
06. வாடிக்கையாளர் சேவை அதிகமாகும்
07. கம்பனிகள் நற்பெயர் மேம்படும்
08. தொடர்பாடல் வலையமைப்பு அதிகரிக்கிறது
09. விளம்பரம் இலகுவாகிறது.
10. கட்டளை இடல் இலகுவாகிறது.
11. நிறுவனங்களின் செயற்திறனும் உபயோகங்களும் மேம்படுகிறது.
12. புதிய பொருள்களும் புதிய வணிக முறைகளும் ஏற்படுகின்றன.
13. பேரளவு உற்பத்தி – நுகர்வோருக்குப் பழக்கமாகிவிடுகிறது.
14. பொருள்கள் பல இடங்களில் உற்பத்தி செய்யப்படும்.

**இ. தர்ஷிகா 12 com (2009)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Friendships

Friends are gifts from God A Friend is Someone who will stand by you in trouble or in joy. A sincere friend will never fail you. It is worthwhile to make friends if they are worthy. We can have true friends only if we are willing to give our life for them. Selfishness can never make us keep friends. We must be sincere, only then we can have sincere friends. The Friendships we make must be cultivated in gentleness and love, with acts of service and grace We must show ourselves unselfish, thoughtful, helpful and patient. We can keep our sincerity. we must be watchful of our acts and deeds.

The blessing of friendship implies mutual helpfulness. Friendship knows no limit to service, yearns to give not to receive, not to be Served but to serve.

We should accept only friendships that will bring blessings to our lives, enrich our character, stimulate us to do better and holier things that will weave threads of silver and gold into the web of life, whose influence will be a lasting benediction.

"He who has a sincere friend finds he lacks nothing"

**A. RALIYA**
**12 Arts**

# Education is the best assest

Todays Child is tomorrow's citizen is a well known Saying. To be a wise, Educated and Experienced adult, we must have a good education We can get education or knowledge by reading and also from our devoted teachers.

In the modern Society we can surf the internet and learn about Various topics too. As our country is not very rich, many poor parents Can't afford to give their children a Sound Education.

Fortunately, Children in today's Society can have free Education. Thanks to the great efforts made by late C.W.W. Kannangura. So we must try to get the best advantage facility and devote our time not only for playing but also for studying by having a good Education, We can get a good job and respected place in Society. We must always know that there is now wealth greater than Education, yet there are many people who haven't Under stood its Value.

It is very unfortunate because one Educated Citizen is a gem For the Whole nation. If a person has no proper Education, He / She will have to do hard manual work to earn his / her living and he / she will be looked down by many from our childhood. We should pay attention to what our parents and teachers teach us and learn with enthusiasm. So that our country will Some day be proud of us.

**N. Balavathanan**
**Grade - 9A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Harmful effects of Smoking

The World Health Organization Says Smoking is the biggest Cause of Premature death. The united Nations Health Agency Says nearly 5 Million People die From Smoking related diseases. They are lung Cancer, Chronic bronchiitis and heart diseases. It's expected, to exceed 10 million by 2020. Tobacco Smoke Contains over 4000 Chemicals in the form of Particles and gases. They are highly Poisonous and Fatal. Every Cigarette takes Seven minutes off your life. 90% of lung Cancer, 75% of Chronic bronchitis and 25% of heart diseases are connected to Smoking. A Smoker gets addicted to poisonous nicotine.

Smoking also effects non Smokers. An hour a day in a room with a smoker is nearly a hundred times likely to Cause lung Cancer in a non smoker. Non - Smokers exposed to Passive Smoking at home, have a 25% increased risk of lung Cancer and heart diseases. Smoking also effects babies born to mothers who Smoke.

Now People From all Over the World are aware of this grave danger. First Parents should give up Smoking as an Example to their Children. Now Smoking has been banned in Schools, Hospitals, Govt Offices, Factories. buses, trains and Public Places. All tobacco Promoting advert isement Over T.V. has been banned. The Goverment Should Start a Campaign through the media to earn the public from the grave dangers of Smoking.

**Y. Ligitha**
**Grade - 9A**

## A Wonderful Teacher

With a special gift for learning
And with a heart that deeply Cares,
You add a lot of love
To everything you Share,
And even though
You mean a lot,
You'll never know how much,
you helped
To change the world
Through every life you touched
You sparked the creativity
In the students whom you...... taught,
And helped them strive for goals
That could not be bought
You are Such a special teacher
That no words can truly tell
However much you're valued
For the work you do so well



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Protection Of Ozone Layer

**The Ozone layer.**

Although ozone (03) is present in small Concentrations through out the atmosphere, most ozone (about 90% ) exists in the stratospere, in a layer between 10 and 50 km above the surface of the earth. This ozone layer performs the essential task of filtering out most of the suns biologically harmful ultraviolet (UV - B) radiation. Concentrations of ozone in the atmosphere very naturally according to temperature, weather, latitude and attitude. Further more aerosols and other particles ejected by natural event such as volcanic eruptions can have measurable impacts on ozone levels.

**The Ozone hole**

In 1985 Scientists identified a thinning of the ozone layer over the Antarctic during the spring months which become known as the ozone hole. The Scientific evidence shows that human - made chemicals are responsible for the creation of the Antarctic ozone hole and are also likely to play a role in global ozone losses. Ozone Depleting substances (ODS) have been used in many products which take advantage of their physical properties.
Eg :- Chlorofluorocarbons(CfCs) have been used as aerosol propellantsand refrigerants.

Although ozone levels vary seasonally. stratospheric ozone levels have been observed to be decreasing annually since the 19705.Mid - latitudes have experienced greater losses than equatorial regions. In 1997 the Antarctic ozone hole Covered 24M km 2 in october, with an average of 40% ozone depletion and ozonel evels in Scandinavia, Greenland and Siberia reached an unprecedented 45% depletion in 1996.

**Environmental and Health Effects.**

The amount of UV reaching the earth's surface has been shown to correlate with the extent of ozone depletion. In 1997 UV - B Levels Continued to rise at a rate of 2% per annum. Increased UV levels at the earth's Surface are damaging to human health airquality, biological life, and Certain materials such as plastics Human health effects include increases in the incidence of certain types of skin Cancers Cataracts and immune deficiency disorder. Increased penetration of UV result's in additional production of ground level ozone, which causes respiratory illnesses. Biologically, UV affects terrestrial and aquatic ecosgstems, altering growth, food chains and biochemiacl cycles.

**What you can do to protect the ozone layer**

You have already taken the first steps to help protect the ozone layer by informing your self of the problem and its causes.

Try to use products which are labelled "ozone - friendly "
Vehicle are Conditioning units should regulary be checked for leaks.
Romove the refrigerant from refrigerators air conditioners and dehumdifiers before disposing of them.

**N. Sathiya**
**11B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருதராட்டிரன் புத்திரர்கள் நூற்றொருவர் (கௌரவர்)

1. துரியோதனன்
2. யுயுத்சு
3. துச்சாதனன்
4. துச்சகன்
5. துச்சலன்
6. துர்முகன்
7. விவிஞ்சதி
8. விகர்ணன்
9. சலசந்தன்
10. சுலோசனன்
11. விந்தன்
12. அநுவிந்தன்
13. துர்த்தருஷன்
14. சுவாகி
15. துர்ப்பிரதருஷணன்
16. துர்மருஷணன்
17. துருமுகன்
18. துர்க்கருணன்
19. கர்ணன்
20. சித்திரன்
21. உபசித்ரன்
22. சித்திராக்கன்
23. சாரு
24. சித்திராங்கதன்
25. துர்மதன்
26. துர்ப்பிரகாஷன்
27. விவித்சு
28. விகடன்
29. சமம்
30. ஊர்ணநாபன்
31. பத்மநாபன்
32. நந்தன்
33. உபநந்தன்
34. சேனாதிபதி
35. சுடேணன்
36. கண்டோதரன்
37. மகோதரன்
38. சித்திரவாகு
39. சித்திரவர்மா
40. சுவர்மா
41. துருவிரோசனன்
42. அயோவாகு
43. மஹாவாகு
44. சத்திரசாயன்
45. சுகுண்டலன்
46. வீமவேகன்
47. வீமபாலன்
48. பாலகன்
49. வீம விக்ரமன்
50. உக்ராயுதன்
51. வீமசரன்
52. கனகாயு
53. திருஷாயுதன்
54. திருஷவர்மா
55. திருஷகத்ரன்
56. சோமகீர்த்தி
57. அநூதரன்
58. சராசந்தன்
59. திருஷசந்தன்
60. சத்தியசந்தன்
61. சுகச்சிரவாகு
62. உக்ரச்சிரவா
63. உக்ரசேனன்
64. சேனானி
65. மகமூர்த்தி
66. அபராஜிதன்
67. பண்டிதகன்
68. விசாலஷன்
69. துராதரன்
70. திருஷகத்தன்
71. சுகந்தன்
72. வாதவேகன்
73. சுவர்ச்சகன்
74. ஆதித்யகேது
75. வெகுவாதி
76. நாகத்தன்
77. அநுயாயி
78. நிஷல்கி
79. கவசி
80. தண்டி
81. தண்டதாரன்
82. தனுக்கிரகன்
83. உக்கிரன்
84. பீமரதன்7
85. வீரன்
86. வீரவாகு
87. அலோலுபன்
88. அபயன்
89. ரௌத்ரகம்மன்
90. திருஷரதன்
91. அநாதிருஷ்யன்
92. குண்டபேதன்
93. விராவி
94. தீர்க்கலோசனன்
95. தீர்க்கவாகு
96. மகாவாகு
97. வியுகுடாகு
98. கனகாங்கதன்
99. குண்டசித்து
100. சித்திரகன்
101. ஒரேபெண் துச்சளை

க. மேகலா
12 கலை (2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஜெய்க்கா' செயற்றிட்டமே
## நீ நீடூழி வாழ்கவே!

கற்பித்தலில் புது வளர்ச்சி
கற்றலிலோ மறு மலர்ச்சி
கணிதச் செய்கையில் விரைவுக்கற்றல்
களப்பயணத்துடன் தேடிக்கற்றல்
குழுச் செயற்பாட்டில் கூடிக்கற்றல்
விளையாட்டுடன் மகிழ்வுக்கற்றல்
உயிர்த்துடிப்பான பல கற்றல்களை
உயிர்நாடியால் எமக்களித்து
ஜப்பானிய கல்விக்குள் உள் நுழைத்திட்ட
'ஜெய்க்கா' செயற்றிட்டமே நீ நீடூழி வாழ்கவே!

பாடசாலை முகப்பில் ஒரு மாற்றம்
உள் வனப்பிலோ பலமாற்றம்
ஏறும் படிகளிலே ஒழுங்கின் உணரல்
சுவர்களிலோ உணர்ந்தெழும் சொல்வாசம்
குறிகாட்டிகளினுடனே எங்கும்
வழிகாட்டிகளைத் தந்துவிட்டாய்
நல்லாலோசனைகளை நாம் பகிர்ந்திடவே
ஆலோசனைப் பெட்டிதனை அமைத்தும் விட்டாய்
இத்தனையும் நாம் பெற என்ன தவம் செய்துவிட்டோம்?
'ஜெய்க்கா' செயற்றிட்டமே நீ நீடூழி வாழ்கவே!

5S திட்டத்தினை எந்நாளும்
படம் பிடித்திடும் நம் சுற்றாடல்
மகிழ்வான கற்றலை என்றும்
தந்திடும் கண்ணான வகுப்பறைகள்
திறன்களை வெளிப்படுத்தும் சிறுவர்பூங்கா
அறிவுக்கு வித்திடும் விஞ்ஞான ஆய்வுகூடம்
எம் நலனில் உளம் நிறையும் நிர்வாக முகாமைத்துவம்
அத்தனையும் எமக்கு அன்புடன் ஈர்ந்து விட்ட
'ஜெய்க்கா' செயற்றிட்டமே நீ நீடூழி வாழ வாழ்த்துகிறோம்
பலகோடி ஆசிகள் உனைச் சேரட்டுமே!



**திருமதி. க. புஸ்பநாதன்**
**(ஆசிரியை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன்றைய ஆரம்பக்கல்வி மாணவர்கள் கல்வியில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் ஓர் கண்ணோட்டம்"

"கல்வி என்பது பிறப்புரிமை"

"கல்வி அறிவு இல்லாதவன் உலகில் கண்கள்
இல்லாதவனுக்குச் சமனாவான்."

"கல்வியில்லாமல் வாழ்க்கையில்லை"

இவ்வாறான வாசகங்கள் ஏதோ ஒரு வகையில் கல்வி அத்தியாவசிய தேவைகளில் மிகப் பிரதானமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. இத்தகைய கல்வியை காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப வளர்க்க வேண்டியது, அரசின் சார்பான கடமையாகின்றது. இத்தகைய அரசு தமது நாடு வளம் பயிற்றுவிக்கக்கூடிய தொழில் துறைகளைச் சார்ந்து விருத்தி செய்வதும் வழமையான செயற்பாடே இருப்பினும் எந்தவொரு நாட்டை எடுத்தாலும் குழந்தைகளுக்குரிய ஆரம்பக் கல்வி, அறிவு, திறன், மனப்பாங்கு பயிற்சிகள் (KASP) தொடர்பான விடயங்கள் அடிப்படைகளும் சிறப்பாகச் செயற்படுத்தப்படுவது வழமை.

அபிவிருத்தியடைந்த நாடுகளைப் பொறுத்தவரையில் அவர்கள் குழந்தைகளது திறன்களை இனங்காணும் வயதாக 3வயது தொடக்கம் 9வயது வரை வரையறுத்துள்ளனர். இது பிள்ளைகளை முழுமையாக இனங்காணலும் அவர்களது எதிர்காலம் பற்றிய வழிநடத்தலுக்குப் போதுமான காலப்பகுதியாகவும் கருதுகின்றனர்.

இதே வயது காலப்பகுதியில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் எண்ணும் எழுத்தும் மாத்திரம் எழுத வாசிக்க, சிறு கணித பிரச்சனைகளைத் தீர்க்கத் தெரிந்தால் போதுமானது, என்ற எண்ணக் கருவும் அவற்றைக்கூட அடையச் செய்ய முடியாத கல்வித்திட்டங்களையும் நாம் அவதானிக்கமுடியும் ஒரு மாணவர் உரியவயதில் தேர்ச்சிகளை அடையப்படாதவிடத்து அது பற்றிய சாக்குப் போக்குகளைச் சொல்லித்தட்டிக் கழிப்பதாக உள்ளதும் எமது வருங்கால சந்ததியினர் பாதிப்புக்கு உள்ளாவதை தடுக்க முடியாது உள்ளதும் கண்கூடே.

ஆரம்பக் கல்வியில் முன்பள்ளி, குடும்பம், அயல் சூழ்நிலைகள் போன்றவை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளமை யாவரும் அறிந்த உண்மையே. இருந்தாலும் மாணவர் சார்பாகப் பார்க்கின்றபோது பாடசாலைக்கு வந்தடையும் குறிப்பிட்ட நேரம் வீட்டில் உள்ள அன்பு அரவணைப்பு, விளையாட்டு, சுதந்திர தேவைகளைக் கட்டுப்படுத்தி வகுப்பறைக்குள் அடைவது கடினமான செயற்பாடேயாகும். இங்கு ஆசிரியர்கள், மாணவர்களை ஆடிப் பாடியும் ஆடவைத்தும், பாடவைத்தும், கதைகூறியும், கதைகூறவைத்தும் மகிழ்பவராகவும் படங்களை வரைந்தும், வரைவித்து நிறமும் தீட்டியும், தீட்டிவிக்கக் கூடியவராக இருக்கும்போது இக்குழந்தைகள் மகிழ்வாக பள்ளிக்கு வருவதும் கற்பதும் யாராலும் தடுக்க முடியாத உன்னத செயற்பாடாகும்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஏதாவது ஒன்று தவறினாலும் கூட மாணவர் பாடசாலைக்கு வருவதும் கற்பதையும் வெறுப்பதை தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படும். தற்கால கல்வித்திட்டங்கள் அனைத்தும் மாணவர் விரும்பிக் கற்கும் விளையாட்டு மூலக் கற்றலே வலியுறுத்தப்படுகின்றது. இவற்றுடன் இணைந்ததாக ஆசிரியர் வரவு, மாணவரை அணைக்கும் முறைகள், பெற்றோருடனா தொடர்புகள், கல்வியில் காட்டும் அக்கறை எல்லாம் ஆரம்பக்கல்வியை அதிகம் வளப்படுத்தும். ஆசிரியர், மாணவர் வகுப்பறையில் இருக்கும் முழுநேரமும் இருக்க வேண்டும். இதுவும் ஆரம்பக் கல்வியில் அத்தியாவசிய தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை விட ஆரம்பக்கல்வி மாணவர்கள் பலருக்கு பெற்றோர் பொருட்களைத் தவறவிடாது கொடுத்து அனுப்புவது வழமை. ஆனால் 1/3 பகுதி மாணவர்கள் தினமும் ஏதோ ஒன்றைத் தவறவிட்டு வருவதும் யதார்த்தமாகும். இதனால் பாடசாலை வளவை அண்டியதும் அல்லது உள் நுழைந்ததும் அதுபற்றிய ஞாபகம் வந்ததும் அழுது மனம் குழம்பி வகுப்பறைக்கு நுழைய அன்னியப்பட்டு நிற்பதனையும். அவதானிக்கலாம்.

உதாரணமாக உணவு, நீர்ப்போத்தல், கொப்பிகள், புத்தகம், பென்சில், ஆசிரியர் செயற்பாட்டிற்காக எனக் கூறிவிட்ட பொருட்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இதன்போது ஒருசில சந்தர்ப்பங்களை தவறவிட்ட மாணவர்களை செயற்பாடுகளில் பாடசாலையில் உள்ள தர உள்ளீடு மூலம் பெறப்படும் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். திறன் விருத்தி தொடர்பாகத் தரப்படும் பணத்தை இந்நிலைகளை விருத்தி செய்யவும் வகுப்பறையில் உள்ள மாணவர்கள் அனைவரும் வேறுபாடின்றி செயற்பட வைப்பதும் ஆசிரியரின் கடமையாகும். அரசு இவ்வாறான பண ஒதுக்கீடுகளை செய்வதற்குப் பல காரணங்கள் உண்டு.

1. எமது நாட்டில் இலவசக்கல்வி இன்றுவரை நடைமுறையில் இருப்பது.
2. பொருளாதார வசதி குறைந்த மாணவர்கள் இவ்வாறான செயற்திறன்களை அடையாமல் இருப்பதை தடுத்தல்.
3. ஆசிரியர் செயற்பாடுகளையும், முன் ஆயத்தங்களை ஊக்கப்படுத்தலும் இலகுபடுத்தலும்.
4. சமூகத்தில் சமகல்வி வாய்ப்புக்களை வழங்கல்.
5. பாடசாலையினதும், கல்வியினதும் தரத்தை உயர்த்துவதன் ஊடாக நாட்டின் கல்விச் செயற்பாடுகளை உயர்த்தல்.

போன்ற உயர்ந்த நோக்கங்களை அடையவே இவ்வாறான தர உள்ளீட்டு பண ஒதுக்கீடுகள் செய்யப்படுவதோடு அதில் அதிக பணப்பகுதி ஆரம்பக்கல்விக்கே ஒதுக்கப்படுகின்றது என்பதும் வரவேக்கக்கூடிய நல்ல விடயமான போதும், அவை பயன்படுத்தப்படும் அளவைப் பொறுத்தே இதன் சிறப்பான அடைவுகளை எதிர்பார்க்க முடியும். இதில் சில ஆசிரியர்கள் அதிபரிடம் கேட்க அஞ்சுவதால் தொடர்ச்சியாகப் பிள்ளைகளைக் கஸ்டப்படுத்தி கற்பிப்பதும் மாணவர்களுக்கு கல்வியை முன்னெடுப்பதில் பிரச்சினைகளை ஏற்படுத்த முடியும்.

அடுத்து ஆரம்பக்கல்வி மாணவர்கள் கல்வியில் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் பாடசாலைக்கு உரிய நேரத்தில் சமூகம் அளிப்பதும் வரவு ஒழுங்குமாகும். ஆரம்பக்கல்வியின் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றோருக்கு ஆசிரிய சமூகம் அல்லது பாடசாலை நிர்வாகம் முழுமையான விளக்கம் அளிக்காமையால் மாணவர் வரவின் அருமை, பெற்றோர், பிள்ளைகளுக்கும் புரிவதில்லை. இவர்கள் தங்களுக்கு துணைக்காக திருமணம், விழாக்கள், கோயில்கள், கொண்டாட்டங்கள் அனைத்தையும் தவறவிடாது அழைத்துச் செல்வதோடு பிள்ளைகளை மகிழ்ச்சிக்கு உள்ளாக்குவர்.

இவ்வாறான அனுபவங்கள் அவசியமானபோதும் இவை விடுமுறைக்காலங்களில் ஒரு வருடத்தில் ஏறத்தாழ 185 பாடசாலை நாட்களாகவும், ஏனைய நாட்கள் விடுமுறை நாட்களாகவும் அமைகின்றன. அவற்றில் உங்கள் குழந்தைகளை உங்களுக்கு விருப்பமான வகையில் போதிய அனுபவங்களைக் கொடுத்து அவர்களை ஆற்றல் உடையவராகவும் ஆக்கலாம். அதேபோல் உரிய நேரத்திற்கு வருவதில் நித்திரை, காலநிலை மாற்றங்கள், இரவு நேர தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், முதல்நாள் பயணம், விளையாட்டுக்களால் ஏற்பட்ட களைப்பு, பாடசாலையை வந்தடைவதில் ஏற்படும் போக்குவரத்து சீர்கேடுகள், பெற்றோர் உரிய செயற்பாடகளுக்கு உரிய நேர ஒதுக்கீடுகள் இன்றிச் செயற்படுபராக இருத்தல் போன்ற பல காரணங்கள் அமையலாம். இருந்தாலும் பொதுவாக இவை பெரும் இடர்களை ஏற்படுத்துவதாக அமையமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல சந்தர்ப்பங்களையும் விரிவாக விளக்க முடியாத போதும் அவற்றை நுனுகி நோக்கின் 3 வகைகளாகப் பார்க்க முடியும்.

1. பெற்றோர் குடும்பம் சார்ந்தது.
2. பாடசாலையை நிர்வாகம் சார்ந்தது.
3. வகுப்பாசிரியர் சார்ந்தது

**பெற்றோர் மாணவர்கள் ஆரம்பக்கல்வி தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டியவை.**

- அன்பும் அரவணைப்பும்
- உடல் ஆரோக்கியம்
- உள ஆரோக்கியம்
- போசனை, உணவு
- பாடசாலை வரவுக்கு கொடுக்கும் அழுத்தம்
- மாணவர் நடத்தை தொடர்பான அவதானிப்பும்
- ஆசிரியருடனான கலந்துரையாடல்
- மாணவர் கல்வி தொடர்பான விளக்கம்
- குழந்தைகள் கேட்கும் வினாக்களுக்கு தக்க பதில் அளித்தல்.
- ஓய்வுக்கும் விளையாட்டுக்கும் கொடுக்கும் முக்கியத்துவம்.
- அனுபவ விருத்திக்காக வழங்கப்படும் சந்தர்ப்பங்கள்
- நடத்தையிலுள்ள தவறுகளை சீர் செய்யும் முறை.

**நிர்வாகம் கவனத்தில் கொள்ளவேண்டியவை**

- ஆரம்பக்கல்விக்குரிய பௌதீகச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ஆரம்பக்கல்விக்கு பொருத்தமான ஆசிரியரை நியமித்தல்.
- சிறந்த பயிற்சிகளை பெற வழிகாட்டல் அல்லது அவ்வாறான செயற்பாடுகளுக்குத் தவறாது அனுப்புதல்.
- தர உள்ளீடுகளை ஆசிரியர் தேவைகளுக்கு ஏற்ப பெற்றுக்கொடுத்தல்.
- கற்றல் கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர் செயற்பாடுகளை இலகுபடுத்தி வழிப்படுத்தல்.
- தேவைகளை செயற்பாடுகளை அடிக்கடி மேற்பார்வை செய்தல்.
- பெற்றோர் கலந்துரையாடல் மூலம் ஆலோசனைகளை பெற்று செயற்படுவதோடு பெற்றோர் மூலமும் உதவிகளைப் பெற்று செயற்படல்.
- மாணவர் திறன் விருத்தி செயற்பாடுகளில் பங்கு கொள்ளவும், வெற்றிபெறவும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

தேர்ச்சி நிலை பின்னடைவான மாணவர்கள் பற்றிய விசேட திட்டங்களை ஆசிரியர், பகுதித் தலைவர் ஊடாக செயற்படுத்தல்.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும்போது ஆரம்பக்கல்வி மாணவர்கள் எதிர்நோக்கும் பொதுப் பிரச்சனைகள் ஒரு சில மாத்திரம் இங்கு விபரிக்கப்பட்டபோதும் அனைத்து பிரச்சனைகளும் ஆராயப்பட முடியாவிட்டாலும் ஒரு சில பிரச்சனைகளை இனங்காணாப்பட்டதோடு அவர்கள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளும் திறன் அற்றவர்கள். அவர்களை வழிப்படுத்த வேண்டியதும் பெற்றோர் ஆசிரியர்களது பிரதான கடமையாகும். இங்கு எதிர்காலம் கட்டியெழுப்பப்படும் அடித்தளமாக இருப்பதனால் ஒவ்வொரு நிலைகளிலும் அவதானமாகவும், உளத்தாக்கம் ஏற்படாத வகையிலும் ஆர்வத்தை தூண்டுவதாகவும் அமைவது அவசியமாகும்.

**திரு. அ. ஹரிகரன்**
[ஆசிரியர், பயிற்றப்பட்ட
ஆரம்பக்கல்வி]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல்கொத்மலை நீர்மின் திட்டமும் அபிவிருத்தியும்

மேல்கொத்மலை நீர்மின் திட்டம் தொடர்பான ஆய்வுகள் ஜப்பானிய ஒத்துழைப்பிற்கான நிறுவனமான ஜய்க்காவின் (Jica) ஆதரவோடு முன்வைக்கப்பட்டுள்ளது. 1985ம் ஆண்டிலிருந்து 1987ஆம் ஆண்டுவரை இத்திட்டத்திற்கான ஆய்வுப்பணிகள் நடந்தன.

இருப்பினும் ஜெய்க்கா நிறுவனத்திடமிருந்து முதற்கட்ட நிதி உதவிகள் 1990ஆம் ஆண்டே கிடைத்தன. 1995ம் ஆண்டு முழுமையான நிதி உதவிகள் கிடைத்த பின்னரும் கூட சூழலியலாளர்களினால் இத்திட்டத்திற்கு எதிர்ப்புகள் கிளம்பின. எனினும் எவ்வகையிலும் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இத்திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும் என்ற உறுதியின் அடிப்படையில் மேல் கொத்மலைத்திட்டம் தற்போது முன்னெடுத்து செல்லப்படுகின்றது.

**மேல்கொத்மலைத் திட்டத்தின்**

| | | |
|---|---|---|
| மொத்தச்செலவு | – | 384 அமெரிக்கன் டொலர் ஆகும். |
| இதில் உள்ளூர் முதலீடு | – | 87 மில்லியன் அ. டொலர் |
| மொத்த கடன் தொகை | – | 297 மில்லியன் அ.டொலர் |
| அதற்கான வட்டி வீதம் | – | 0.95% (வருடாந்தம்) |
| கால அவகாசம் | – | 10 வருடங்கள் |
| கடன் மீள செலுத்தும் காலப்பகுதி | – | 30 வருடங்கள் |
| எதிர்பார்க்கப்படும் மின்வலு | – | 409 (வருடத்திற்கு) |
| அணைக்கட்டின் நீளம் | – | 157.0 மீற்றர் |
| உயரம் | – | 35.5 மீற்றர் |
| அகலம் | – | 7 மீற்றர் |
| நிலக் கீழ் சுரங்கத்தின் நீளம் | – | 12.5 கி. மீற்றர் |
| நிலக் கீழ் சுரங்கத்தின் விட்டம் | – | 4.5 மீற்றர். |

இந்த மேல்கொத்மலைத் நீர்மின் திட்டம் காரணமாக பாதிக்கப்படும் வீழ்ச்சிகளில் மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது சென்கிளயர் ஆகும். தலவாக்கலை ஹட்டன் பிரதான பாதையில் சென்கிளயர் தோட்டத்தில் காணப்படும் இந்த நீர்வீழ்ச்சி இப்பகுதியில் புகழ் பெற்ற தொன்றாகும். எனினும் இந்நீர்வீழ்ச்சி பாதுகாக்கப்படும் என்றும் நீர்வழிந்தோடுவது நிறுத்தப்படமாட்டாது என்றும் திட்டப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

மேலும் இப்பகுதியில் வாழ்ந்த 495 குடும்பங்களுக்கு புதிய வீடுகள் சகல வசதிகளுடன் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மீள்குடியேற்றத்த திட்டத்திற்கு மாத்திரம் 600 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இது தவிர இத்திட்டத்தின் காரணமாக தமிழ் மகாவித்தியாலயம், திரைப்பட அரங்கு வாடிவீடு உள்ளூராட்சி சபை அலுவலகங்கள், சுமார் 50 வர்த்தக ஸ்தாபனங்கள், கோயில், தேவாலயம் மற்றும் சமூக மையங்கள் என்பனவும் வேறு இடத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தலவாக்கலை – பூண்டுலோயா பிரதான பாதையில் தலவாக்கலை நகருக்கு அண்மையில் உள்ள பழைய பாலத்திற்கு பதிலாக புதிய உயரமான பாலம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய மைதானம் நகரமண்டபம், ஒன்றும் அமைக்கப்படவுள்ளது விசேடமாக குப்பைகளைத் தனியே சேகரித்து அதை சூழல் மாசடையாதவாறு அழிக்கும் பகுதி ஒன்று புதிதாக அமைக்கப்படவிருக்கிறது. இவ்வகையான முறை தலைநகர் கொழும்பில் கூட இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

மேல் கொத்மலைத் திட்டம் மூலம் அப்பகுதி வாழ் மக்கள் பயனடைந்திருக்கும் இன்னுமொரு விடயம் வேலைவாய்ப்பாகும். இத்திட்டப் பணிகளில் கடமையாற்றும் தொழிலாளர்களில் 75 வீதத்திற்கும் மேற்பட்டோர் இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது முக்கிய விடயம் அதேவேளை வெல்டிங், கடின இயந்திரம் இயக்குதல் வயரிங், குழாய் பொருந்துதல், போன்ற பணிகளுக்கு இப்பகுதி இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு இலவசப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலைகளுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறாக ஜப்பானிய நிறுவனமான Jicaகாவின் உதவியுடன் நடைபெற்று வரும் மேல் கொத்மலைத்திட்டத்தின் மூலம் தலவாக்கலை நகரம் பல அபிவிருத்திகளைப் பெற்றுள்ளதுடன் ஒரு சில சூழல் குறைபாடுகளும் காணப்படுவதை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

**சி. மானல்**
**13A (2007)**

## சேமிப்பு

சேமிப்பு என்பது ஒவ்வொரு உயிருக்கும் அவசியமானது. ஐந்தறிவு படைத்த உயிரினங்கள் முதல் ஆறறிவு படைத்த மனித உயிர்கள் வரை சேமிப்புப் பழக்கத்தினைத் தமது வாழ்நாளில் கடைப்பிடித்து வருவார்களேயானால் வாழ்வில் உயர்வடைய முடியும். "சிறுதுளி பெருவெள்ளம்" என்பது முதுமொழியாகும். சிறுவர்களாகிய நாம் சிறுவயது முதல் சேமிப்பு பழக்கத்தினைக் கடைப்பிடித்து வந்தால் நாம் எமது எதிர்காலத்தினை சுபீட்சமாக வைத்திருக்க முடியும். "சின்னஞ்சிறு எறும்புகள்" கூட பிற்காலத்தில் தமக்கு வேண்டிய உணவுகளை முற்கூட்டியே சேமித்து வைத்து மழைக்காலத்தில் உணவுப்பஞ்சமின்றி உண்டு உறங்குகின்றது. இந்த "எறும்புக் கூட்டங்களைப் போன்று" நாமும் சேமிப்புப் பழக்கத்தினைக் கடைப்பிடித்து வரவேண்டும். தற்காலத்தில் சேமிப்பினைத் தூண்டும் வகையில் பல வங்கிகள் காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள், மேலும் பல நிறுவனங்கள் செயற்படுகின்றன. "பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை" என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறள்பாவினைக் கருத்தில் கொண்டு, நாம் சேமிப்பு பழக்கத்தினை கடைப்பிடிப்போமாயின் எமது வாழ்வினைச் சிறப்பாக அமைத்துக் கொள்ள முடியும்.

**ஆக்கம்**
**வ. தமிழ்ச்செல்வன்**
**தரம் – 7**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்படுத்தற் கல்வி [விசேட கல்வி]

விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளை பொதுவான பாடசாலைகளில் பொதுவான வகுப்புகளில் உட்படுத்தலானது உலகெங்கிலும் அதிகரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளின் ஓர் அம்சமாக மாறியுள்ளது. இது குறைபாடுகளைக் கொண்டோரை வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் உட்படுத்தல் எனவும் கருதப்படுகின்றது. விசேடகல்வியில் உட்படுத்தற் கல்வி என்பது தற்போது ஒரு கல்வித் தத்துவமாக மாறியுள்ளது. இது சகல பிள்ளைகளினதும் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் ஒன்றாக அமைந்துள்ளது.




- சகல பிள்ளைகளுடன் கூட்டமாக சக நண்பர்களுடன் கற்கும் உரிமை உண்டு
- பிள்ளைகளின் குறைபாடு மற்றும் கற்றல் இடர்பாடு காரணமாக அவர்களை வகுப்பறையில் இருந்து வெளியேறும் வகையில் அல்லது வெளியேற்றப்படும் வகையில் அவர்களை குறைத்து மதிப்பிடவோ வகைப்படுத்தவோ கூடாது.
- பாடசாலை செல்லும் பருவத்தில் பிள்ளைகளை வகைப்படுத்துவதற்கு அங்கிகரிக்கப்பட்ட நியாயமான காரணம் எதுவும் கிடையாது.
- அவ்வாறான பிள்ளைகள் பிறிதொருவரிடமிருந்து பாதுகாப்புப்பெற வேண்டும். அத்தோடு அவர்களுடன் கூடியிருக்கவும் வேண்டும்.

ஆகவே உட்படுத்தல் கல்வி என்பது இன்று, பாடசாலையில் பெரிதும் முக்கியம் பெறும் விவாத விடயமாக உருவெடுத்துள்ளது.

## உட்படுத்தல் கல்வியில் இணைய வேண்டியவர்கள்

1) கல்வித் துறையைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்தோர்
2. இடர்பாடுகளைக் கொண்ட பிள்ளைகள்
3) மற்றும் இடர்பாடுகள் அற்ற பிள்ளைகள்
4) அப்பிள்ளைகளின் பெற்றோர்
5) விசேட பாடசாலை மற்றும் அரச பாடசாலை ஆசிரியர்கள், நிர்வாகிகள்.
6) கல்வியுடன் தொடர்புடைய சகல சேவைகளையும் சேர்ந்த அதிகாரிகள்.
7) பாடசாலையின் ஏனைய பணியாளர்கள்
8) பொதுமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உட்படுத்தல் கல்வியை நடைமுறைப்படுத்தல்**




மேலும் உட்படுத்தலின் ஊடாக, குறைபாடுடைய பிள்ளைகள் தமது கிராமப் பாடசாலையில் தமது நண்பர்கள் கற்கும் அதே வகுப்பில் கற்றல் அனுபவங்களைப் பெறுவதானால், குறித்த சகல பணிகளிலும் "நாம் குறைபாடுகளை கொண்டோரல்லர்" என்னும் உணர்வுடன் பங்கு கொள்ளலாம். விசேட தேவை உடைய பிள்ளைகளுக்கு தமது வீட்டிற்கு அருகில் உள்ள தனது சொந்தக் கிராம பாடசாலையில் தனது நண்பர்கள், தோழிகள், சகோதர சகோதரிகள் கற்கும் பாடசாலையில் கற்றல் அனுபவங்களைப் பெற வாய்ப்புக் கிடைப்பதனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இது மிகப் பொருளுள்ளதாக அமையும்.

எவ்வாறாயினும் சில குறைபாடுகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு பொதுவான வகுப்பறையில் நடைமுறைப்படுத்த முடியாத வகையிலான உதவிகள் தேவைப்பட இடமுண்டு. இந்த நிலைமை மிக அரிதாகவே உருவாகும். தடங்கல்களை இயன்ற அளவு குறைத்து பொதுவான வகுப்பறையில் தொடர்ந்தும் இச்சேவைகளை வழங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உட்படுத்தற் கல்வி வேலைத்திட்டத்தின் முக்கியத்துவம்.**

சட்ட ரீதியான மற்றும் கொள்கை சார்ந்த நிபந்தனைகள் காரணமாக உருவாகி உள்ள வலிமை மிக்க காரணங்களால், குறைபாடுகளைக் கொண்ட பிள்ளைகளை பொதுவான கல்விச் சூழலில் இருந்து அப்புறப்படுத்த வேண்டி ஏற்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. குறைபாடுகளைக் கொண்ட பிள்ளைகளின் பல்வேறுபட்ட தேவைகளே இவைக்கு காரணமாக அமைந்துள்ளன.

குறைபாடுகளற்ற பிள்ளைகட்கு பொதுவான கல்விக் கோலத்துள் குறைபாடுகளை கொண்ட பிள்ளைகளுடன் இடைத்தொடர்பு கொள்ள மிக வரையறைக்கு உட்பட்ட வகையிலே வாய்ப்புக்கள் கிடைத்தன. எனினும் உட்படுத்தல் மூலம் குறைபாடுகள் அற்ற பிள்ளைகளின் பல்வேறு மானுடப் பண்புகள் மற்றும் அங்கிகரிக்கும், ஏற்றுக்கொள்ளும் பணிகளை விருத்தி செய்யும் வாய்ப்புக் கிடைக்கும். குறைபாடுகளற்ற பிள்ளைகளுக்கு இடையிலான பல்வகைமையை அங்கிகரிக்கும் ஆற்றல் கிடைக்கப் பெறுகின்றமை இதன் மற்றுமோர் அம்சமாகும்.

அவர்கள் உட்படுத்தல் வகுப்பறையின் வேறுபாடுகளை நன்கு விளங்கிக் கற்றல் மூலம் மென்மேலும் யோசிப்புப் பெறுவார். சகல பிள்ளைகளிடமும் விளங்கிக் கொள்வர். எந்த ஒருவரும் இன்னொருவரைப் போல் அதே தன்மையுடையதாக இருக்க முடியாது என்பதை விளங்கிக் கொள்வர். உட்படுத்தலானது அவர்களது குறைபாடுகள் தொடர்பாகவும் ஊனங்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கின்றது. உதாரணமாக குறைபாடுகள் உள்ளோர் எனக் கருதப்படுவோரிடமிருந்தே பல ஆற்றல்கள் காணப்படுகின்றன என்பதையும் கல்வித் துறையில் மட்டுமன்றி, பாட இணைச் செயற்பாடுகளிலும் அவற்றைக் காணமுடியும் என்பதையும் அறிந்து கொள்வர்.

பிள்ளைகளிடத்தே வேறுபாடுகளை விட ஒத்த பண்புகளே பெருமளவில் காணப்படுகின்றன என்பதையும், அவை குறைபாடுகளையோ, ஊனங்களையோ கவனத்தில் கொள்ளாது விடுவதற்கு காரணமாக அமையத்தக்க வகையில் செயற்படுவதே முக்கியமானதாகும். ஊனங்களும் குறைபாடுகளும் ஒருவரின் அடிப்படைத் தேவைகளை மறுதலிப்பதற்கு காரணமாகமாட்டா என்பதையும் அவர்கள் அறிந்து கொள்வர்.

குறைபாடுடைய பிள்ளைகட்கு ஏனைய பிள்ளைகளுடன் கூட்டாகப் பல்வேறு வகைகளில் இடைத்தொடர்பு கொண்டு கற்பதற்கான வாய்ப்புக்களை வழங்குவதே உட்படுத்தலின் மிக அனுகூலமான நிலையாகும். மேலும் ஊனம் உடைய பிள்ளைகள் அவர்களது நண்பர்களுடன் கூட்டுச் சேர்வதால் விருப்புடன் பாடசாலைகட்கு வருவதற்கும் சமூகத்துடன் ஒன்றிணைவதற்கும் தூண்டப்படுவர்.

**திரு. S. ஜனார்த்தன்**
**ஆசிரியர் ( விசேட கல்வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விசேட கல்வி தேவையுள்ள மாணவர்கள்



கல்வி சாரா ஊழியர்கள்



பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக சபையினர்



பழைய மாணவர்கள் சங்க நிர்வாக சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையிலும் இளமையுடன் வாழக் கைகொடுக்கும் யோகா

யோகா உடலின் அனுசேப அளவை Metabolic rate அதிகரிப்பதால் உடல் உள் உறுப்புக்களின் மேல் திணிக்கப்படும் தாக்கத்தைக் குறைக்கிறது. இதனால் கவலை, பயம், பரபரப்பு, பதற்றம், மன உளைச்சல் முதலிய பிரச்சனைகள் நீங்குகின்றன. நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதால் பல நோய்கள் ஏற்படாதவாறு தடுக்கப்படுகின்றது உடல் உள ஆரோக்கியம் மேம்பட்டு மனம் சாந்தமடையும். இதனால் மனவிரக்தி அகன்று சந்தோசமான வாழ்க்கை அமையும்.

முதுமையில் தாக்கும் பல வகையான நோய்களில் இருந்து எம்மை எந்தவித பணச்செலவுமின்றி பாதுகாப்பது யோகா என்பதில் ஐயமில்லை. யோகா நாளமில்லாச் சுரப்பிகளையும் மூளை நரம்புகளையும் இதமாக வருடி அவை சிறப்பாக செயற்பட தூண்டி விடுகிறது. இரத்தத்தை சுத்திகரித்து அதன் சுற்றோட்டத்தையும் துரிதப் படுத்துகின்றது. இதனால் உடல் செயல்திறன் மேம்பட்டு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

யோகா சிறுகுடலுக்கு நன்கு பயிற்சி கொடுத்து அது ஊட்டச் சத்துக்களை நன்கு உறிஞ்சி எடுக்கத் தூண்டுகின்றது. இதனால் உடல் மெலிவு, பலவீனம், நடுக்கம், இரத்தச்சோகை போன்ற நோய்கள் ஏற்படாது தடுக்கின்றன. யோகா கணையச் சுரப்பியை நன்கு செயல்பட வைத்து இன்சுலின் போதிய அளவு சுரக்கும் படி தூண்டி விடுவதனால் நீரிழிவு நோய் ஏற்படாதவாறு தடுக்கிறது. இதனால் சிறுநீரகவியாதி, இருதயவியாதி, பக்கவாதம் கண்வியாதி போன்ற நோய்கள் தாக்காதவாறு பாதுகாக்கிறது.

யோகாவின் போது அதிக இரத்தம் கண்களுக்கு சென்றடைவதனால் கண் பார்வை நரம்புகள் நன்கு பலமடைந்து கண்பார்வை குன்றல் மற்றும் கண்ணில் வெண்படலம் படரல் போன்ற கண்நோய்கள் ஏற்படாதவாறு தடுக்கப்படுகின்றன.

யோகா சுவாசப்பைகளை நன்கு விரிவடைய வைத்து அதிகபட்ச பிராண வாயுவை உட்செல்லத் தூண்டுகிறது. இதனால் காசநோய் ஆஸ்துமா, நியூமோனியா போன்ற சுவாசப் பிரச்சனைகளைத் தடுக்கிறது. யோகா முதுகெலும்புகளுக்கும் தசைகளுக்கும் வலுவை ஊட்டுவதனால் கூன் முதுகு ஏற்படாமல் தடுக்கிறது கால் எலும்புகள் பலமடைவதால் எவ்வித சிரமமுமின்றி வெளியில் நன்கு நடமாட முடிகிறது. இதனால் உடலுக்குத் தேவையான போதிய விற்றமின் Dஐ பெறமுடிவதால் எலும்பரிப்பு நோய் ஏற்படுதல் தடுக்கப்படுகிறது.

மூளையில் ஞாபக சக்தியோடு தொடர்புடைய பகுதியை யோகா நன்கு செயல்படத் தூண்டி மனச் சோர்வை அகற்றி விடுவதால் முதுமையில் ஏற்படும் ஞாபக மறதி நோய் ஏற்படாது பாதுகாக்கிறது.

மூளையிலுள்ள நாளமில்லாச் சுரப்பியால் சுரக்கப்படும் எண்டோபின் [Endorphin] என்ற சுரப்பு அதிகரிக்கும் போதுதான் மனதில் அமைதி ஏற்படுகிறது. யோகாவின் போது இச்சுரப்பி அதிகளவில் சுரப்பதனால் மன அமைதி ஏற்பட்டு மன உளைச்சல் அகன்று விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகாவின் போது காது, பல், சருமம், தலைமுடி முதலியவற்றிற்கு அதிக இரத்தோட்டம் செல்வதனால் இவைகளில் ஏற்படும் நோய்கள் தடுக்கப்படுகின்றன. முதுமையில் செவிப்புலன் இழத்தல், பல்வியாதி, பல்விழுதல், சருமம் வரட்சியடைதல், சருமத்தில் சுருக்கம் ஏற்படுதல், தலைமுடி நரைத்தல் முதலியன தடுக்கப்பட்டு அறுபதிலும் இருபது வயது இளைஞரின் தோற்றத்துடன் வாழ துணைபுரியும்.

ஆகவே நமது அரும் பெரும் கலையான யோகா முதுமையடைவதைப் பின்போட்டு முதுமையில் நோய்கள் ஏற்படுவதை தடுப்பது மட்டுமன்றி ஏற்கனவே ஏற்பட்ட நோய்களைக் கூட குணப்படுத்தும்.

வெள்ளம் வரும் முன் அணைபோடுதல் போன்று நாமும் நல்ல பழக்க வழக்கங்களைப் பேணி ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஆரோக்கியமான உணவுடன் கூடிய கிரமமான யோக பயிற்சியில் இளம் வயதில் இருந்தே ஈடுபட்டுக் கொண்டு வந்தால் முதுமையில் ஏன் இளமையில் கூட ஏற்படும் உடல் உளரீதியான நோய்களிலிருந்து எம்மை பாதுகாத்து என்றும் ஆரோக்கியத்துடனும் மனநிறைவுடனும் சமுதாயத்திற்கு வேண்டப்படும் நற் பிரஜைகளாக வளமாக வாழலாம்.

**திருமதி. க. ஜெகசோதி**
**ஆசிரியை**

## முதியோரைப் பேணுவோம்!

புதிய புதிய கதைகளால்
புத்தி புகட்டும் புத்தகம்
முதிய வயதுப் பெரியவர்
முழுமை பெற்ற தேன்கனி

வாழ்ந்து பெற்ற அனுபவம்
நமக்கு வழங்கும் நிறைகுடம்
தாழ்ந்து விழுது வேர்விட
தழைத்து வளரும் கனிமரம்

தவறு புரியும் வேளையில்
தடுத்து நிறுத்தும் அவர்கரம்
எவரும் பிணியில் வாடினால்
உதவும் அவரின் மருத்துவம்

ஓய்வு காணும் வயதென
உலகம் கூறும், ஆயினும்
சாய்வதில்லை சோம்பலால்
கடமை உண்டு வீட்டிலே

பஞ்சு போன்ற நரைவிழும்
பார்க்கும் விழியில் குழிவிழும்
மிஞ்சுகின்ற வயதினால்
முதுகில் கொஞ்சம் கூன்விழும்.

பேசும் தெய்வம் அவரென
ஆசி வாங்க விரும்புவோம்
பாசம் பொழியும் குழந்தை போல்
பழகும் அவரைப் பேணுவோம்.

**ஆக்கம்:–**
**உ. கிருஜன் 8B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

************************************

## நல்லதொரு நூல்
## நல்லதொரு நண்பன்,

உதிரம் தராத உறவு – இந்த
உலகில் நான் தேடிய உறவு
எம்மை தேடலில் தினம் மூழ்கடித்து
அறிவுக் கடலில் ஆழ்த்திய உறவு

அழகால் காதல் வரும் – அறிவால்
நல்ல பல பண்பு வளர
உயர்வால் பல உறவுகள் தேடிவர – என்
உணர்வில் நிலைத்திட்ட நண்பன் நூலே

எம் கண்ணீர் துடைக்கும் கைகளாய்
எம் கவலையை போக்கும் அரு மருந்தாய்
எமக்கு இனிமை தருகின்ற ஓர் உலகு – இது
எம் நூல் எனும் நண்பனின் வரவு

அறிவுக்கு உயிர் கொடுக்கும் நண்பன் – எனக்கு
உலகை புரிய வைத்த நண்பன் – ஓர்
போதகனாய் மாறி எமக்கெல்லாம்
பற்பல வித்தைகள் அளித்திட்ட நண்பன்

வான்புகழ் வள்ளுவன் வர்ணித்த நண்பன்
வள்ளலாம் கன்னனின் கொடைக்கு ஒப்பாய்
அள்ள அள்ளக் குறையாத பொக்கிஷம்
அவனே நூல் எனும் அரிய நண்பன்

எமக்காய் பற்பல விடயங்கள் தாங்கி
எம் உள்ளுணர்வை தட்டியெழுப்பி
சிந்தனைக்கு வித்திட்ட சீராளன்
இவனே நல்லதோர் நூல் எனும் நண்பன்.

**அ. லோகதர்சினி**
**12A கலை (2009)**

************************************

************************************

## அச்சுதமே
## வாழ்க பல்லாண்டு!

திக்கெட்டும் புகழ்பரப்பி நிற்கும்
திருக்கோணமலை நகரின் கண்
தொன்மையும் பெருமையும் மிக்கது
தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம்

வித்தியாலயத்தில் திங்கள் ஒரு முறை
விந்தைகள் நிறைந்த ஒரு கலசம்
வெளியாகி வளம்பல சேர்க்கும்
வண்ண இதழ்பெயர் "அச்சுதம்"

ஆண்டுகள் ஐந்து நிறைந்திட்ட
அச்சுதத்தின் எச்சுவையும் குன்றாது
ஆதவன் போல் பிரகாசம் பொங்கிட
ஆசிகள் பலகோடி பகருகின்றேன்.

கலையின் கருத்துக்கள் பலவற்றை
கனமாகத் தன்னகத்தே தாங்கி வரும்
அச்சுதம் என்னும் அறிவுச்சுடரே
அகம் நிறைந்து வாழ்த்துகிறேன் நின் புகழ் பரவ

ஐந்து ஆண்டுகள் நிறைவை கொண்டாடும் அச்சுதமே
நூறாண்டு வரை நின்பணி தொடர
நீங்காத வாஞ்சையுடன் வாழ்த்துகிறேன்
நின் புகழ் என்றும் நிலைகட்டுமே!

**திருமதி. ந.குணசேகரம்**
**பிரதி அதிபர்**

************************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறக்கப்படுமா? சமாதானக் கதவுகள்!

காலங்கள் மாறிவருகின்றன அதனால்
கனவுகளும் மாறிவருகின்றன
பேரண்ட பூமி மீது
பேராசைக் காரர்கள் பெருகுகின்றனர்.

சாதி எனும் பெயர் கொண்டு
சாவிலும் ஒதுக்குகின்றனர்
மதவெறி கொண்ட மனித விலங்குகள்
மனிதத்தையே ஒழிக்கின்றனர்.

மனித நேயம் மண்ணுக்குள் மங்கிப் போகுது
மாரடித்து மாரடித்து கையும் நோகுது
களையெல்லாம் பயிரைப் போல் வளர்ந்து நிற்குது
கரையேற முடியாமல் வாழ்வு தவிக்குது

மானிடரே காலம் சீறுது
இந்த உலகமோ பாதை மாறுது
விரல் இடுக்கில் வன்முறை வேதம் ஓதுது
விலைவாசி இலங்கையை விழுங்கி மூடுது

உரிமைக்காய் மூளும் யுத்தங்கள்
இலங்கையில் அதன் சத்தங்கள்
மொழியானால் உண்டாகும் பேதங்கள்
நிலத்திலே சிந்துது இரத்தங்கள்

சாதிப் பேயை விரட்ட வேண்டும்
சமத்துவத்தை நிலை நாட்ட வேண்டும்
மதவெறியை அடியோடு அழிக்க வேண்டும்
மனிதத்தை நாம் வளர்க்க வேண்டும்.
யுத்தங்கள் மடிய வேண்டும்
மனித தத்துவங்கள் படிய வேண்டும்.
பேதங்கள் மறைய வேண்டும்
பாரினில் வேதனைகள் குறைய வேண்டும்.

கண்ணுக்கு நிகராய் கல்வி
கடலெனப் பெருக வேண்டும்
பொன்னுக்கு நிகராய் உழைப்பு
பொங்கியே வழிய வேண்டும்

பெண்ணுக்கும் ஆணுக்கும் நிகராய்
பிறப்புரிமை வளர வேண்டும்
விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே
வேற்றுமைகள் மறைய வேண்டும்

அதிகார வர்க்கத்தை அழிக்க வேண்டும்
ஆனந்தமாய் அனைவரும் கூடி
இன்னல்களை இல்லாமல் ஒழிக்க வேண்டும்
இன்பமாய் நாமும் வாழ வேண்டும்.

**சி. மோகனரதன்**
**கலை (2009)**

### கிருமிகளைக் கண்டுபிடிக்க "சிப்"

கடன் அட்டை (Credit Card) அளவுள்ள சாதனம் ஒன்றில் பொருத்தப்பட்ட மனிதத் தலை முடியின் விட்டத்தில் நூறில் ஒரு பங்கிற்கும் குறைவான விட்டமுள்ள சிப் (Chip) இதன் மூலம் நோய்க்கிருமிகளை இனங்காண முடியும். இச்சிப்பை நுண்மின்னனுவியலும் நுண்ணுயிரியலும் இணைந்து உருவாக்கியுள்ளன. ஒளிக்கற்றையைப் பயன்படுத்தி இயங்கும் மின்வாய்களின் வழியாக செல்லும் மின்னோட்டத்தை அளிப்பதன் மூலம் நோய்க் கிருமிகளின் எண்ணிக்கையைக் கண்காணிக்க முடியும்.

வயிற்றுப் போக்கு, காசநோய் முதலியவற்றை உண்டாக்கும் கிருமிகளையும், தண்ணீரை மாசுபடுத்தும் பக்டீரியா வகைக் கிருமிகளையும், கூடக் கண்டறிவதற்கு இந்த (Chip) சிப் பயன்படும். 1.5 மில்லியன் பவுண் செலவில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக இந்தச் சிப்பை குறைந்தம் செலவில் தயாரிக்கும் உத்திகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானிகளைப் போற்றுவோம்

புத்தம் புதிய கலைகள் பலவற்றுள் விஞ்ஞானக்கலை இன்று மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இக்கலையில் ஈடுபட்டுள்ளவர்களே விஞ்ஞானிகள். அவர்கள் மற்றவர்களுக்குச் சாதரணமாக தோன்றும் பொருள்களில் புதுமை காண்பவர்கள். புதுமைகளுக்கு என்றும் பற்றாக்குறை கிடையாது. விஞ்ஞானிகள் தொடர்ந்து புதுமைகளை கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் போற்றுவது நமது கடமையாகும்.

வெப்பத்தை அளவிடுவதற்கு வெப்பமானி, பாரத்தை எடை போடுவதற்கு பாரமானி, பக்றீரியா போன்ற நுண் கிருமிகளைக் கண்ணுக்குப் புலப்படச் செய்வதற்கு மைக்ரோ ஸ்கோப், தூரத்தில் உள்ள பொருட்களைப் பருமனாகவும் தெளிவாகவும் காட்டுவதற்குத் தொலை காட்டி ஆகிய கருவிகளையும் மற்றும் மனித சமுதாயத்திற்கு உதவக்கூடிய எத்தனையோ கருவிகளையும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

இன்று விஞ்ஞானத் துறையில் முன்னேறியுள்ள நாடுகளே முற்போக்கான நாடுகளாகும். புதியன எல்லாம் கண்டுபிடித்து விடப்பட்டுள்ளன. இனிக் கண்டுபிடிப்பதற்கு எதுவும் இல்லை என்று சிலர் கூறலாம் அது தவறு.

இயற்கை இன்னும் எண்ணிறைந்த புதுமைகளை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறது. மனிதனுக்கு இன்றியமையாது தேவைப்படும் பொருட்களுக்குப் பற்றாக்குறையுள்ளது. நோய்கள் பெருகியுள்ள இன்றைய உலகிற்கு இன்னும் புதுமையான மருந்துவகைகள் தேவைப்படுகின்றன.

எனவே விஞ்ஞானிகள் இன்னும் கண்டுபிடிக்கவேண்டிய புதுமைகளுக்கு நாம் வரையறை கூறமுடியாது. புதிய கண்டுபிடிப்புகளுக்கு நாம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அரசும் சமுதாயமும் அவர்களை நன்முறையில் பயன்படுத்த வேண்டும். அவர்களது பணி சிறக்க ஆதரவு நல்க வேண்டும்.

**நா. லஜிதன்**

**தரம் 7A**

## உன்னால் முடியும் (கவிதை)

முடியாதென்று நினைத்து
முடங்கிக் கிடக்கும் மனிதனே!
எது முடியாது உன்னால்
எழுந்து வா!!!

சிறகுகள் பூட்டி
சிகரம் தொடு
இயலாமையை இறக்கிவை
இமயத்தை இதயத்தில் ஏற்று!!!

எளிதில் கிட்டிவிடுமா எல்லாம்
எறும்பாய் சுறுசுறுப்பாய் இரு!
விலா என்பில் விண்ணை
சுமக்கும் வித்தையைக்கற்றுக்கொள்!!!

தாகம் வரும் போதெல்லாம்
தைரியத்தைப்பருகு!
மெழுகாய் உருகிப் போகாமல்
இரும்பாய் இறுகிவிடு!!!

முள் பாதையைக் கண்டு
முகம் சுளிக்காதே
விடியல்வரும் வரை
வெளிச்சத்தைத் தேடு.

**உ. செந்தூரி**

**8A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்கள் விலகி உடல் நலம் பெற எளிய வழிகள்

1. எல்லா நோய்களுக்கும் காரணமான மலச்சிக்கலை நீக்குவதற்கு தினமும் காலையில் எழுந்தவுடன் மூன்று தம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.
2. சாப்பிடும் வேளையில் அல்லது சாப்பிட்ட உடன் குடிக்கும் தண்ணீர் நஞ்சுக்குச் சமமானது சாப்பிட்டு ஒரு மணி நேரம் கழித்து குடிக்கும் தண்ணீர் அமிர்தத்திற்குச் சமம்.
3. இரவு வேளையில்தயிர் மற்றும் கீரைகளை தவிர்த்தால் உடல் நோய்களைக் குறைக்கலாம்.
4. சமைத்த உணவுகள் சாப்பிட முன் பழங்கள், காய்கறிகள் சாப்பிட்டால் செரிமானமின்மை. குடல்புண், வாயுத் தொல்லை, பசியின்மை, மலச்சிக்கல் போன்ற பல நோய்கள் விலகும்.
5. உடலுக்கு உரம் ஏற்றும் உயிர்ச்சத்துக்களை அழிக்கும் வெள்ளைச் சக்கரையைத் தவிர்ப்போம்.
6. செமியாக்குணம், பசியின்மை, முதுகுவலி, பல்வலி குறையவும் கண்கள் புத்தொளி பெறவும் பப்பாளிப்பழம் உதவுகிறது.
7. சளியை வளர்க்கும் பால்மற்றும் தயிரை நீக்கி தேங்காய் அல்லது தேங்காய்ப்பால் சாப்பிட்டு ஆஸ்துமா போன்ற நோய்களிலிருந்து விடுதலை பெறலாம்.

**ஸ்ரீ. தனுஜா தரம் - 12**

## விஞ்ஞானச் சாதனை

அறுவைச் சிகிச்சையின் தந்தை "சுஸ்தர்" (காலம் கி.மு. 600) ஆச்சார்ய சுஸ்ருதர் மருத்துவ உலகின் குறிப்பாக அறுவைச் சிகிச்சையின் மாமேதை என்று போற்றப்படுகிறார். இவர் ரிஷி விஸ்வாமத்திரருக்குப் பிறந்தவர். உலகின் முதல் அறுவைச் சிகிச்சைக் கலைக்களஞ்சியமான "சுஸ்ருத சம்ஹிதை"யை மனித சமுதாயத்திற்கு வழங்கியவர், மயக்க மருந்து, அறிவியல் மற்றும் பிளாஸ்டிக் சர்ஜரியின் தந்தை.

இவர் தமது சுஸ்ருத சம்ஹிதையில் பன்னிரண்டு விதமான மூட்டு நகர்வுகளுக்கும் உண்டான மருத்துவ முறையை விளக்கியிருக்கிறார். 125 விதமான அறுவைச் சிகிச்சைக் கருவிகளை உபயோகப்படுத்தியுள்ளார். இதில் ஊசிகள், கூர்க்கத்திகள், ரண சிகிச்சைக்கான சிறிய கத்திகள், இரட்டை விளிம்புக் கத்திகள், வடிக்கும் இறப்பர்க் குழாய் மற்றும் மலக்குடல் சீரமைப்புக் கருவிகள் போன்றவை முக்கியமானவை அதில் பெரும்பாலானவை விலங்குகள், பறவைகளின் தாடை எலும்புகளிலிருந்து வடிவமைக்கப்பட்டவை.

| | | |
|---|---|---|
| நல்ல விடயங்களை ஏற்பவர் | - | அறிஞர்கள் |
| நல்ல விடயங்களை பிரசாரம் செய்பவர்கள் | - | ஞானிகள் |
| நல்ல விடயங்களை போதிப்பவர்கள் | - | ஆசிரியர்கள் |
| நல்ல விடயங்களை விமர்சிப்பவர்கள் | - | மேதைகள் |
| நல்ல விடயங்களை தெரிந்து கொள்பவர் | - | மாணவர்கள் |
| நல்ல விடயங்களை நம்புவர்கள் | - | தூய்மையானவர்பகள் |
| நல்ல விடயங்களை சேட்டை செய்பவர்கள் | - | கபடர்கள் |
| நல்ல விடயங்களை நசுக்குபவர்கள் | - | வஞ்சகர்கள் |
| நல்ல விடயங்களை குறை கூறுபவர்கள் | - | சுயநலக்காரர்கள் |
| நல்ல விடயங்களை தெரிந்து கொள்ள மறுப்பவர்கள் | - | மூடர்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த பாரதியார்

தமிழ் இலக்கிய வரலாற்றிலே பொதுநெறி காட்டிய புலவன் என விதந்துரைக்கப்படும் பாட்டுக்கொரு புலவன் பாரதி முப்பத்தொன்பது ஆண்டுகள் வாழ்ந்து முடித்த இந்தக் கவிஞர் தனது சமகாலத்தில் இந்தியாவில் எழுச்சி பெற்ற விடுதலைப் போராட்டத்திலே பங்கு கொண்டவராகவும், சமூக விடுதலைக்கு குரல் கொடுத்தவராகவும் திகழ்ந்தவர். ஒரு கவிஞனாக ஒரு பத்திரிகையாளராக, கட்டுரையாளராக, புனைகவிஞராக பன்முகங்காட்டி நின்ற பாரதியினுடைய ஆளுமை மிகச் சிறப்பான முறையில் வெளிப்பட்டு நின்றது என்பது அவரது கவிதைகளின் மூலம் பலரும் ஏற்றுக் கொண்ட முடிவாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே கம்பனுக்குப் பிறகு தேங்கிய குட்டையாக இருந்த தமிழ் இலக்கியத்தை மடை திறந்த வெள்ளமாக பெருக விட்ட பெருமை இவருக்குரியது. கற்றோர் கற்றும் சுவைக்கும் வண்ணப் பிரபந்தங்கள் பாடப்பட்டுவந்த காலப்பகுதியிலேயே சமுதாயத்தின் உயர்மட்டத்தில் உள்ளவர்களது ஆசாபாசங்களையும், பாரம்பரியமான தெய்வீக உணர்வுகளையும், திரும்பத் திரும்ப அரைத்த மாவையே அரைப்பது போல இலக்கியம் படைத்து நின்ற தமிழ் புலவர்கள் மத்தியிலே அத்தகைய போக்கை மாற்றியமைத்து தேசவிடுதலை, சமூக விடுதலை, ஆகியவற்றை இலக்கியப் பொருளாகக் கொண்டவர் என்ற வகையிலும் சாதாரணமான ஓரிரண்டு மொழிப்பயிற்சி உள்ளவர்களும் விளங்கிக் கொள்ளத்தக்க வகையிலே கவிதையின் அமைப்பை எளிமைப் படுத்தியவர் என்ற வகையிலும் பாரதி புதுநெறி காட்டிய புலவனாகின்றார். பாரதிக்கு முன்பே அண்ணாமலைச் செட்டியார். இராமலிங்க வள்ளலார், கோபாலகிருஷ்ண பாரதியார் முதலியவர்கள் கவிதைகளிலே எளிமை இடம் பெறத்தொடங்கி விட்டது என்றாலும் அந்த நிலைக்கு சமகாலப் பிரச்சனைகளை உள்ளடக்கமாக்கிக் கொண்ட சிறப்பு பாரதிக்கே உரியது.

இவர் ஒரு சுயசிந்தனையாளர் உலகப் பொது நோக்குடன் வாழ்க்கை மற்றும் சமூகப் பிரச்சனைகளைச் சிந்தித்தவர். மனித குலத்தில் நாட்டம் கொண்டவர். பழமைச் சிறப்புக்களைப் போற்றியதோடு, புதுமைக் கருத்துக்களைப் பரப்புவதிலும் தீவிர வேகங்காட்டியவர். நவீன இலக்கிய கருவை உள்வாங்கி பழமைக் கருவை இணைத்து உழைக்க முன் நின்றவர் பாரதி. இதற்குக் காரணம் அவர் மரபு ரீதியாகவும் கற்றுக் கொண்ட கல்வியேயாகும். பாரதி பழைய இலக்கியங்களிலேயே தோய்ந்தார். ஆங்கில இலக்கியங்களை ஆய்ந்தார். வடமொழி இலக்கியங்களைக் கற்று சாற்றினை வடித்தார். இயங்கியலினூடே உள்ள உண்மையினையும், போலியினையும் பகுத்துப் பார்த்து நல்லவற்றின் பெருமையைப் போற்றிக் குப்பைகளை உதறிக் கட்டினார்.

தனிமனிதனிடத்து மண்டியிட்டுக் கிடக்கும் அழுக்குகளை, மனஉளைச்சல்களை நன்குணர்ந்து அவைகளை எடுத்துக்காட்டி விரட்டியதுடன் தனிமனிதனுக்கு இன்றியமையாத உணர்வுகளையும், தேவைகளையும் உயர்வான குறிக்கோளையும் அமைத்தமை பாரதியின் தனிமனித திறனாய்வை வெளிப்படுத்துகின்றன. சங்கச் சான்றோருக்குப் பின் பாரதியார் தோன்றும் வரை உள்ள கால கட்டத்தில் வாழ்ந்த புலவர்கள் விழுமிய கருத்துக்களுக்கு முதலிடம் தரவில்லை. வெறும் சொல் அலங்காரத்தில் திளைத்தனர். இந்த அவல நிலையைப் போக்கிட தான் வந்துள்ளதாகக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புவியனைத்தும் போற்றிட வான் புகழ் படைத்துத்
தமிழ் மொழியை புகழிலேற்றும்
கவியரசன் தமிழ் நாட்டுக்கு இல்லையெனும்
வசையென்னால் கழிந்ததன்றே
என்றார்

இதனால்தான் பேராசிரியர் மு. வரதராசனார் "தமிழ் இலக்கிய வரலாற்றிலே புது மறுமலர்ச்சிக்காலம் பாரதியால் தொடங்கப் பெற்றது. இம்மாபெரும் கவிஞரே இவ் தமிழிலக்கிய உலகின் தலைவராகவும் திகழுகின்றார்.

"எளிய பதங்கள் எளிய நடை எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுமக்கள் விரும்பும் மெட்டு இவற்றினுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவேன் நமது தாய்மொழிக்கும் உயிர் தருவோனாகின்றேன்" என்பது பாரதியாரின் உள்ள வேட்கை, இதனையே.

"சுவை புதிது பொருள் வளம் புதிது
சொற் புதிது சோதி மிக்க
நவகவிதை யெந்நாளும் அழியாத
மகா கவிதை"

என்று பாடல் வாயிலாகப் பாரதியார் வெளியிட்டுள்ளார். இலை மறைகாய் போல் பாரதியாரின் கவிதைகளிலே பொதிந்துள்ள கவிதைப் பண்புகளை முறைப்படுத்திக் காண்கின்ற போதும், வடிவத்தாலும், உள்ளடக்கத்தாலும் உத்தியாலும் பாரதியார் புதியதொரு வழிமுறையை நெறிமுறையை பாட்டியற்றும் பாங்கினை வகுத்துத் தந்துள்ளமை புலனாகிறது.

பொதுமக்கள் நலம் நாடி புதுக்கருத்துக்களைச் சொல்லி புது நெறியை தமிழிலக்கிய உலகில் பாரதி காட்டினார். அவரது கவிதையின் நோக்கு போக்கு சிறப்பியல்புகள் எல்லாவற்றையும் எளிமை, ஒலிநயம், புதிய பொருள், நாட்டுப் பாடல் மரபு, உலகியல் மெய்யுணர்வு என வகைப்படுத்தலாம்.

பாரதியின் பேச்சிலும் மூச்சிலும் தமிழே நிறைந்து வழிந்தது. பண்டிதரின் வரட்டுப் புலமையை புலப்படுத்தும் கரடுமுரடான வழியில் இருந்து பாரதி வேண்டுமென்றே விலகி தனக்கென ஒரு வழியை வகுத்துக் கொண்டார். இதனால் அவருடைய பாடல்களில் செயற்கைத் தன்மை செத்தொழிந்து உள்ளத்து உணர்ச்சியின் பொங்கலான கவிதை அவ் உணர்ச்சியை பழகு தமிழ்ச் சொற்களைக் கொண்ட படையலாக்கியது. அவருடைய எந்தப் பாடலை எடுத்து ஆராய்ந்தாலும் நடை நலத்திலும் தொடர் அமைதியாலும் எளிமை களிநடம் புரிவதைக் காணலாம்.

பாட்டில் இடம் பெறும் பொருளாகத் தெய்வம் அரசர், செல்வந்தர், குறுநிலத்தலைவர், வீரம், காதல் பக்தி என்பவற்றை பாரதிக்கு முற்பட்ட காலப் புலவர்கள் போற்றினர். பாரதி எந்தப் பொருளையும் பாடலாம் என்ற புது வழியைக் காட்டினார். பாரதியின் பாடல்களில் தேசியமும் சர்வதேசியமும் கொஞ்சி விளையாடின. நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும், ஏறுநடைபோடத் தொடங்கியது. விடுதலை வேட்கை வீரமுழக்கம் இட்டது. காந்தியின் அன்புநெறியும் சான்றோர்களின் திருத்தொண்டும் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. உலகத்தில் நடந்த எல்லா வகையான கொடுமைகளையும் எதிர்த்தார். ஆணும் பெண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமமாக வாழ அறிவுரை கூறினார். இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் என்பதை உணர்ந்து குழந்தைகளுக்கு அகத்து எழுச்சியூட்டும் அறிவுரைகளை நல்கினார். அவர் சமயத்தில் சமரசம் கண்டார். இத்தகைய புதிய எண்ணங்களை கருத்துக்களை பாட்டு பொருளாக முதன்முதலாக பயன்படுத்திய பெருமை பாரதிக்குரியது.

பாரதியின் நாட்டுப்புறப் பாடல் மரபை போற்றிப் பாடினார் என்பதற்கு இவரின் குடுகுடுப்பைக் காரன், அச்சமில்லை அச்சமில்லை, உலகத்து நாயகியே முத்துமாரி எனமுடியும் நாட்டுப்புறப் பாடல்களின் பாணியிலமைந்திருக்கும் பாடல்கள் சான்றாக விளங்குகின்றன. இவை அல்லாமல் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் சிறப்புற்று விளங்கும் மெட்டுக்களும், காவடிச்சிந்து, நொண்டிச் சிந்து பாணிகளும் சித்தர் வழிவந்த ஆனந்தக்களிப்பும் பாரதியின் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. பல ஆண்டுகளாக உலகவாழ்வில் நாகரீக மாற்றம் கண்ட நாட்டில் சமூகம் மொழிபற்றிய உணர்வுகளை இந்திய மக்கள் புறக்கணித்ததால் இந்த உலகியலை மெய்யுணர்வோடு பாரதியார் இணைத்தார். பொருள் முயற்சியையும், தொழில் வளர்ச்சியையும் அறிவியல் முன்னேற்றத்தையும் தமது மெய்யுணர்வுக் கோட்பாட்டோடு சமயம் சாராத ஆண்மிகப் புதுமையோடு கலந்து "வாழ்க்கை வாழ்வதற்கே எனும் புத்துலக சிந்தனையை பாரதி தம் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறாக பாரதி தமிழ் இலக்கிய உலகில் எண்ணற்ற அதிகளவான படைப்புக்களைப் படைத்து சாதனைகள் புரிந்திருக்கின்றார்.

"எங்கள் இனமும்
எங்கள் வாழ்வும்
மங்காத தமிழ்" என்று
பாரதி பாரினில் பதித்தான்

**சௌ. சுபேஸ்**
**13 கலைப்பிரிவு (2008)**

**தகவல்களின் மொத்தத் திரட்டு**

Wikipedia

ஹவாய் மொழியில் விக்கி (Wikiwiki) என்றால் விரைவு என்று பொருள். இணையத் தகவலைப் பார்வையிடும் எந்தவொரு விருந்தாளியும் தொகுக்கக்கூடிய வகையில் அமைந்த இணையத் தளங்களே Wiki என வழங்கப்படும். எவராலும் தொகுக்கக்யுகூடிய வகையிலமைந்த கலைக்களஞ்சியம் என்பதால் இதற்கு Wikipedia பொருத்தமான பெயராகும். Wikipedia இவ் பலமொழிகளிலும் வெளிவந்துள்ளது. தமிழ் மொழியிலும் இது வெளிவந்தமை சிறப்புக்குரியதாகும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வித்தியாலய ஆளணியினர்

1. திரு. நா. இராஜநாதன் – அதிபர்
2. திருமதி. ந. குணசேகரம் – பிரதி அதிபர்
3. திருமதி.ச. இராஜதுரை – பகுதித்தலைவர்

## பட்டதாரி ஆசிரியர்கள்

1. திருமதி. க. ஜெகசோதி – கலைப்பட்டதாரி
2. திருமதி. வ. வசீகரன் – கலைப்பட்டதாரி
3. திருமதி. க. புஸ்பநாதன் – கலைப்பட்டதாரி
4. திரு. நே. சிவநேசன் – வர்த்தகப் பட்டதாரி
5. திருமதி. கி. பாலேந்திரராஜா – கலைப்பட்டதாரி
6. திரு. வ. தெய்வேந்திரராஜா – வர்த்தகப்பட்டதாரி
7. திருமதி. தே. சுகிர்தராஜன் – கலைப்பட்டதாரி
8. திருமதி. சு. கெங்கேஸ்வரன் – கலைப்பட்டதாரி
9. திருமதி. சி. ருத்திரகாந்தன் – கலைப்பட்டதாரி

## பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்

1. திருமதி. பா. ஜப்பர் –(இஸ்லாம்)
2. திருமதி. பா. வீ. ஆனந்தராஜா –(ஆங்கிலம்)
3. திருமதி. வ. இராஜேந்திரன் –(விஞ்ஞானம்)
4. திருமதி. ஜெ. சிவசோதி –(கணிதம்)
5. திருமதி. ஜெ. உதயசீலன் –(மனைப்பொருளியல்
6. திருமதி. க. விமலேந்திரன் –(ஆரம்பக்கல்வி)
7. திருமதி. ஜெ. சுவேந்திரன் –(சங்கீதம்)
8. திருமதி. சு. இரமேந்திரா –(ஆங்கிலம்)
9. திருமதி. சா. சிவஞானசுந்தரம் –(கணிதம்)
10. திருமதி. பா. ஸ்ரீகணேசலிங்கம் –(ஆரம்பக்கல்வி)
11. செல்வி. ச. சுபத்திராதேவி –(விஞ்ஞானம்)
12. திருமதி. அ. குமரகுரு –(ஆரம்பக்கல்வி)
13. திருமதி. உ. ஸ்ரீதரன் –(ஆரம்பக்கல்வி)
14. திருமதி. சா. பார்த்தீபன் –(சமூகக்கல்வி)
15. திரு. ந. இலிங்கேஸ்வரன் –(வர்த்தகம்)
16. திருமதி. ம. சசிகுமார் –(ஆரம்பக்கல்வி)
17. திரு. அ. ஹரிகரன் –(ஆரம்பக்கல்வி)
18. திருமதி. S. வரதராஜன் –(ஆரம்பக்கல்வி)
19. திருமதி. ச. தேவதாஸ் –(ஆரம்பக்கல்வி)
20. திருமதி. இரா. இராஜேஸ்வரன் –(ஆரம்பக்கல்வி)
21. திரு. சி. சுந்தரவடிவேல் –(சமயம்)
22. திருமதி. ம. அன்ரனிராஜ் –(ஆரம்பக்கல்வி)
23. திரு. சி. ஜனார்த்தன் –(விசேடகல்வி)

## இணைப்பாசிரியர்கள்

1. திரு. V. தவராஜா – (விவசாயம்)
2. செல்வி. K. விலாசினி – (ஆங்கிலம்)
3. திருமதி. V. சுரேஸ்குமார் – (ஆங்கிலம்)
4. திரு. செ. சிவபாலசுந்தர் – (உடற்கல்வி)

## ஏனைய ஊழியர்கள்

1. திரு. K. தயாளன்
2. திரு. S. வீரசூரியன்
3. திரு. S. விக்னேஸ்வரன்
4. திருமதி. M. உதயகலா
5. திருமதி. M மேரிகிரேஸ்
6. செல்வி. S. கௌதமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள்

**தலைவர்** :- திரு. நா. இராஜநாதன் (அதிபர்)
**உபதலைவர்** :- திருமதி. ந. குணசேகரம் (பிரதி அதிபர்)
**செயலாளர்** :- திரு. க. யோகரெட்ணம் (பெற்றார்)
**பொருளாளர்** :- திருமதி. சா. சிவஞானசுந்தரம் (ஆசிரியை)

### ஏனைய நிர்வாக உறுப்பினர்கள்

1. திருமதி. நே. சசிகுமார் (ஆசிரியை)
2. திருமதி. அ. குமரகுரு (ஆசிரியை)
3. திருமதி.ச. இராசதுரை (ஆசிரியை)
4. திரு. M.A. சுகைப் பெற்றார்
5. திரு. A. ரஜீப்கான் பெற்றார்
6. திருமதி. N. ஸ்ரீரங்கநாயகி பெற்றார்
7. திருமதி. M. உதயகலா பெற்றார்
8. திருமதி. A.A. லாபீர் பெற்றார்
9. திருமதி. P. கோகிலா பெற்றார்

## பழைய மாணவ சங்க நிர்வாக சபையினர்

1. **தலைவர்** :- ந. இராஜநாதன் (அதிபர்)
2. **செயலாளர்** :- வ. வினோத்
3. **உபசெயலாளர்** :- S. சுகன்யா
4. **பொருளாளர்** :- S. சிவரூபன்

### ஏனைய உறுப்பினர்

1. N. மும்தாஜ்
2. K. ராஜ்சுதர்சன்
3. V. சஜ்ஜீவன்
4. K. கௌரிநாத்
5. V. உஷாந்தன்
6. S. தாட்சாயினி
7. A. அலிபஸ்ரி
8. S. ஸ்ரீவக்ஷன்
9. V. பிரதீபா
10. K. திருச்செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KANNAS STORES

HARDWARE & BUILDING MATERIALS

166/1, Main Street,
Trincomalee. Sri Lanka.
Tel: (026) 2222401 Fax: (026) 4595072
Hotline: 0777696852

ANTON
asian paints
CHICO



தி/ பெருந்தெரு விக்நேஸ்வர மகாவித்தியாலயத்தின்
மலர் வெளியீட்டுக்கு
எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

## றோயல் கொன்ஸ்ரக்ஷன்

- கட்டிட வேலைகள்
- கட்டிடப் பொருட்கள் விநியோகம்
- "Mitsui" சீமேந்து விற்பனை (முகவர்)

என்பவற்றிற்கு எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

323, ஏகாம்பரம் வீதி
திருக்கோணமலை
T.P. 026-2221085 / 026-2223141
Fax: 026-2221085




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:-

# NEW GNANAMS

# MEDICALS

217, T. Sampanthar Street,
Trincomalee.
T.P. 026-2222907




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# New Nirusha Electricals

Whole sale and Retail Dealers in all kinds of
electrical goods, pvc items and
Hardware items.

No. 46, Seaview Road,
Trincomalee.

# HOLIDAY INN REST HOUSE

*House for tourist , Wedding and Reception*
*Van For Hire*
*Fully Airconditioned with Comfortable seats.*

**No. 77/1, Green Road,**
**Trincomalee.**

**Proprietor - N. Ramendra**
**T.P- 026- 2222868**
**026- 2221655**
**071-6990066**
**0777-246870**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUKUNA TRADE CENTRE

GENERAL HARDWARE
MERCHANTS

Tel: 026-2221130 (off) 026-2221437(Res)
026-2221967 (off)
077-7140347 (Mobile)

Proprietor:
N. Krishnendra,
No. 68, Sea View Road,
Trincomalee.
Sri Lanka.

**With Best Compliments From:-**

# AJMEER TRADERS

Wholesale & Retail dealers in Fancy Goods, Baby Items, Stationaries, Watches, Sports, Electricals, Electronic & Home Appliances.

The Best Choice for Your Gift Items

We Accept With Pleasure

**No. 186, N.C. Road, Trincomalee.**

**Tel: 026-2222702 , Tel/Fax: 026-2221311**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெசன் பாக்

உங்கள் உள்ளம் கவரும் நவநாகரீக

ஆடைகளுக்கு

பொருத்தமான ஆடையகம் பெசன்பாக்

மலிவான விலையில் பெற்றுக்கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்.




இல. 77, ஏகாம்பரம் வீதி,

திருக்கோணமலை.

**T.P - 026-2223403**

**Mobile - 0777916097**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நம்ப முடியாத சலுகை

புத்தம் புதிய கணினிகள்

இலங்கையிலே மிககுறைந்த விலையில்

**PC PARK (PVT) LTD**

130, Galle Road, Dehiwela
Opposite Widiya Road,
Tel: 2714115 , Fax: 2713423
Got Line - 0773951630

இதன் கிளைகள்:
K.K.S. றோட்
யாழ்ப்பாணம்
நெல்லியடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G.Premkumar
Proprietor

HARI ELECTRONICS

DEALERS IN: TV, RADIO, VCR, VCP, CD HI-FI STEREO, DVD & SPARE PARTS.

AUTHORIZED DEALER:-
SONY FD Trintron WEGA DVD VIDEO Hi Fi VIDEO CD SIEDLES

Fully Airconditioned

102, Rajavarothayam Road,
Trincomalee, Sri Lanka.
Tel: 026-2221867 Fax: 026-2221372
Mobile: 077-7361303, 077-7777680

Branch
THIVIYA ELECTRONICS
Dealers for T.V. Video, VCD, Radio
75, Central Road, Trincomalee
Tel: 026-2224109



East Link Communication

Net2Phone, IDD & Local Calls,
Computer Typing, binding,
Photo Copy, Laminating,
Books & Stationery.

Email:eastlink@sltnet.lk internet
T.P: 21417,23711. Fax: +94-26 2222704
189A, Thirugnanasampanthar st, Trincomalee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜுவல் லங்கா

உங்கள் எண்ணம் போல் தரமான தங்க
நகைகளை விரைவாக பெற்றுக் கொள்ள
தயங்காமல் நாடவேண்டிய ஒரே தங்க நகைமாளிகை

**ஜுவல் லங்கா**



✆ 22298
21179

Jewel Lanka
22Ct. Jewellery
ජුවල් ලංකා ஜுவல் லங்கா
105, N.C.ROAD, TRINCOMALEE

105, என். சீ றோட்,
திருக்கோணமலை.
தொ. பே.இல.
026-2222298
026-2221179



## நவமிலாஸ் ஆடையகம்

கண்ணைக் கவரும் வண்ண வண்ண
ஆடைகளை எண்ணம் போல் தெரிவு
செய்ய இன்றே நாடுங்கள்.

**நவமிலாஸ்**



Nawamila's
Dealers in Textiles
No. 205, N. C. Road,
Trincomalee, Sri Lanka.
Tel. : 026-2222551 /
Fax : 026-2223209

இல. 205, ஏகாம்பரம் வீதி,
திருக்கோணமலை.
தொ.பே. 026-2222551
தொ.நகல். 026-2223209

நாட்டின் எதிர்கால
தூண்களான உங்களுடன்
என்றும் நாம் இருப்போம்!



திடசங்கற்பத்தினாலும் திறமைகளினாலும் உந்தப்பட்டு பல்வேறு வித்தியாசமான துறைகளிலும் பிரகாசிக்கும் சிறுவர்களினால் நமது தேசம் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. மக்கள் வங்கியினராகிய நாம் அவர்கள் ஒவ்வொருவரினதும் மறைந்திருக்கும் திறமைகளையும் சாதனை வல்லமைகளையும் ஊக்குவிப்பதில் எமது தேசத்தின் சிறுவர்களுக்கு பக்க பலமாக இருந்து வருகிறோம்.
சாதனைப் பயணத்தில் எமது சிறுவர்களுக்கு உதவுவதற்கான அத்திவாரமாக விசேடமாக வடிவமைக்கப்பட்டிருப்பதே "சிசு உதான" ஆகும்.

## "சிசு உதான" சேமிப்புக் கணக்கின் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள்

- உங்கள் சேமிப்புக்களுக்கு அதிகூடிய வட்டி.
- கணக்கு வைப்பாளருக்கு வைத்திய உதவி பெற்றுக்கொள்ளக் கூடிய காப்புறுதி.
- பெற்றோர்/பாதுகாவலருக்கு ஆயுள் காப்புறுதி.
- முதல் முறையில் க.பொ.த. சாதாரண மற்றும் உயர் தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் அதி விசேட சித்தி பெறும் பிள்ளைகளுக்கு விசேட பணப் பரிசுகள்.
- சேமிப்புத் தொகை அதிகரிப்புக்கேற்ப கவர்ச்சிகரமான பரிசுகள்.

## "சிசு உதான" சேமிப்புக் கணக்கை எப்படி ஆரம்பிக்கலாம்?

அது மிகவும் இலகுவானது. நாடெங்குமுள்ள அனேகமான பாடசாலைகளில் "சிசு உதான" சேமிப்பு பிரிவுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த சேமிப்புப் பிரிவுகளிலுள்ள விசேட அம்சம் என்னவென்றால் சிறுவர்கள் தாங்களாகவே அவர்களது வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதேயாகும்.

சிறுவர்கள் தாங்களாகவே இச் சேமிப்பு பிரிவுகளில் ஒன்றிற்குச் சென்று "சிசு உதான" சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கலாம். அதன்பின் தத்தமது வசதிக்கேற்ப அதில் வைப்புச் செய்யலாம்.

பாடசாலைகளுக்கு வரும் மக்கள் வங்கியின் "சிசு உதான" நடமாடும் சேவைப் பிரிவின் மூலம் பாடசாலையில் வைத்தே சிசு உதான கணக்கொன்றை ஆரம்பித்து, சேமிப்பை தொடரலாம். எனவே அவர்கள் செய்யவேண்டியதெல்லாம் கணக்கொன்றை ஆரம்பித்து விரும்பியபோது பணத்தை வைப்பிலிட வேண்டியது மட்டுமே.

அல்லது அருகில் உள்ள மக்கள் வங்கிக் கிளைக்குச் சென்று உங்கள் பிள்ளையின் பேரில் "சிசு உதான" சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்கலாம்.

"சிசு உதான" சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்க தேவைப்படும் ஆகக் குறைந்த தொகை எவ்வளவு?
சிறியதொரு தொகையான ரூ. 100 உடன் நீங்கள் சேமிப்பை ஆரம்பிக்கலாம்.

மக்கள் வங்கி

சிசு உதான

சிறந்த எதிர்கால சந்ததியினர்

**With Best Compliments From:-**

# BATTICALOA Opticals

**No.51B, Main Street, Trincomalee.**

## Free Eye Testing

## மட்டக்களப்பு மூக்குக் கண்ணாடி ஸ்தாபனம்

இல. 51B, பிரதான வீதி,

திருகோணமலை. Tel: 026-2223461

இலவச கண்பரிசோதனை


## திரு/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தின்

185வது ஆண்டு நிறைவையும்

'அச்சுதம்' சஞ்சிகையின் 5வது ஆண்டு நிறைவையும்,

பரிசளிப்பு விழாவினையும்,

மனம் குளிர வாழ்த்துகின்றோம்.

-பழைய மாணவர்கள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி
# நவில்கின்றோம்

- தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தின் "அச்சுதம்" பரிசளிப்பு விழாமலருக்கான வெளியீட்டு வாழ்த்துச் செய்திகளை வழங்கிய, கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர். திரு. ஆர். தியாகலிங்கம் அவர்களுக்கும்,

- மாகாணக்கல்விப் பணிப்பாளர்
  **திரு. சி. தண்டாயுதபாணி அவர்களுக்கும்,**

- திருக்கோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர்
  **திரு.கு. திலகரெட்ணம் அவர்களுக்கும்,**

- இம்மலைரை வெளியிட பேருதவி புரிந்த
  **பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கும்,**

- இம்மலருக்கு விளம்பரங்களை வழங்கிய நிறுவன உரிமையாளருக்கும்,

- இவ்விழா மலருக்கான புகைப்படங்களை எடுத்து இச்சிறப்பு மலரை குறித்த காலத்தில் அச்சேற்றி, வடிவமைத்து அழகுடன் வழங்கிய திருக்கோணமலை "ரெயின்போ" நிறுவனத்தினருக்கும்,

- இப்பரிசளிப்பு விழாமலரை வெளியிடுவதற்கு எமக்கு உறுதுணை புரிந்த அதிபர் அவர்களுக்கும், ஆலோசனை வழங்கிய ஆசிரியர்களுக்கும், படைப்புக்களை வழங்கிய ஆசிரியர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எங்கள் பாடசாலையின் சார்பில் நன்றிகளை நவில்கின்றோம்.



**இவ்வண்ணம்**

**மலர்க்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org